கிராம நலம்

நவம்பர், 1961.

மாநில பஞ்சாயத்து மாநாடு (நிகழ்ச்சித் தொகுப்பு)

விலை 13 ந.பை.

சுயராஜ்யத்தின் அடிப்படை

" தொன்றுதொட்டு நிலைத்து வந்துள்ள கிராம இந்தியாவை நாம் போற்றுவோமா, அல்லது, அன்னியர் ஆதிக்கத்தால் சமீபத்தில் உண்டான நகரங்களைப் போற்றி வளர்ப்போமா என்பதை, நாம் முடிவு செய்துகொள்ள வேண்டும். இன்று நகரங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. கிராமங்கள் சுரண்டப்பட்டு அழிகின்றன. அந்த ஆதிக்கம் மறைந்த பின்பு, கிராமங்களுக்கு நகரங்கள் பணிய வேண்டுமென்று, கதர்ப் பற்றுதல் கொண்ட என் மனம் கூறுகிறது. கிராமங்களைச் சுரண்டுவதே, மிகக் கட்டுப் பாடான, கொடுமையான பலாத்காரம். சாத்விக அடிப் படையில் நாம் சுயராஜ்யம் அமைக்க விரும்பினால், கிராமங்களுக்கு அவற்றிற்குரிய ஸ்தானத்தைத் தர வேண்டும். "

—மகாத்மாவின் மணிமொழி

// கிராம நலம்

“ ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்— இந்த
ஞானம் வந்தால், பின் நமக்கெது வேண்டும்?”
—பாரதியார்.

மாடி 7 | நவம்பர் 1961 | படி 2

மூன்று தீர்மானங்கள்

தமிழ் நாடு பஞ்சாயத்து மகாநாடு மங்களகரமாகத் தொடங்கி, முழு வெற்றியுடன் முடிவடைந்தது. கிராமத் தலைவர்களின் ஒன்றுபட்ட கூட்டு முயற்சியின் நிலைக்களமாக இந்த மகாநாடு விளங்க வேண்டும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றம் சிறிதும் அடையவில்லை. ஆனால், சுமார் பன்னிரண்டாயிரம் பிரதிநிதிகளை ஒன்று திரட்டி, அமைதியான முறையில் செயல்படச் செய்யும் திறமை அரசாங்கத்திற்கு இருக்குமா என்று சந்தேகித்தவர்கள் ஏமாற்றம் அடைந்திருக்கலாம். குடியாட்சித் திட்டம் என்பது வாய் இனிக்கப் பேசும் வேதாந்தமே தவிர, நடை முறையில் கைகூட முடியாத ஒன்று என்று எண்ணியவர்களுக்கு, இந்த மகாநாடு மலைப்பையும், திகைப்பையும் ஊட்டியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாருக, பல்வேறு சாராரின் முரண்பட்ட கருத்துக்களிடையே, இந்த மாபெரும் மகாநாடு கூடியது. நமது ஒப்பற்ற தலைவர், பிரதம மந்திரி நேருஜியின் ஆசி மொழியொடு ஆரம்பமான இந்த விழா, கிராமத்தலைவர்களுக்கு மிகுந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டியதில் வியப்பில்லை. அத்துடன், இந்திய அரசாங்க அமைச்சர்கள், தமிழ் நாடு அரசாங்க அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் ஆகிய அனைவரும் புதிய பஞ்சாயத்து ஆட்சியைத் திறம்பட நடத்துவதற்கான சிறந்த கருத்துக்களை மகாநாட்டில் வெளியிட்டனர். கிராமத் தலைவர்கள் இவற்றையெல்லாம் நேரில் கேட்டுணரும் வாய்ப்பும் வசதியும் இந்த மகாநாட்டின் மூலம் கிடைத்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக, மகாநாட்டில் ஆராயப்பட்ட பல்வேறு பிரச்சினைகளையும் திர்ப்பதற்கான வழிமுறைகள் என்ன என்ற விஷயம், திட்டவட்டமாக தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் உடனடியாக செய்யத் தொடங்க வேண்டியது என்ன, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் நிறை வேற்ற வேண்டிய காரியங்கள் எவை, இதற்காக மாநில அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற மூன்று முக்கிய விஷயங்கள் தீர்மானங்கள் மூலம் உருவாயின. ஒவ்வொரு தீர்மானமும் விஷயாலோசனைக் கமிட்டியில் வெகு நேரம் ஆராயப் பட்டு, பல்வேறு பிரதிநிதிகளின் அநுபவங்களையும், கருத்துக்களையும் கேட்டறிந்த பின்பே, ஒப்புக்கொள்ளப்பட்டன. பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்தவர்கள், இந்தத் தீர்மானங்களை மகாநாட்டில் தெளிவாக விளக்கிப் பேசினுர்கள். சிறப்பாக, ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது.

ஜன நாயகப் பரவல் கொள்கையை செயல் படுத்துவதே புதிய பஞ்சாயத்து ஆட்சியின் குறிக்கோள் என்பதை, நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். ஆகவே, பஞ்சாயத்து மகாநாட்டில் உருவான தீர்மானங்கள் எல்லாம் ஜனநாயக முறையை முற்றும் கடைப்பிடித்து உருவாக்கப்பட்டவை என்பதில் வியப்பில்லை. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கிராமவாசிகளின் சார்பாக இந்தத் தீர்மானங்கள் நிறைவேறின என்ருல் மிகையாகாது. எனவே, எல்லாக் கிராம மக்களும் இவற்றை நன்ருகப் புரிந்துகொண்டு, அவற்றை நிறைவேற்ற முன்வருவார்கள் என்பது உறுதி.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். எல்லாப் பத்திரிகைகளும் ஏற்கனவே அவற்றை சுருக்கமாகவும், விமர்சனம் செய்தும் வெளியிட்டுள்ளன. “கிராம நல”த்திலும் வேருரிடத்தில் முழுமையாக வெளியிட்டுள்ளோம். இந்தத் தீர்மானங்கள் மூன்றும் மிக முக்கியமானவை. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம், உணவு உற்பத்தியைப் பெருக்குதல், ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இந்த மூன்று விஷயங்கள் பற்றி ஏற்கெனவே நாம் பல செய்திகளையும், விவரங்களையும், விளக்கங்களையும், மேற்கோள்களையும் வெளியிட்டு வந்துள்ளோம். பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் எல்லாம் இவற்றை உற்சாகத்துடன் வரவேற்பதுடன் நில்லாமல், தம்மால் இயன்ற அளவு உடனடியாக நிறைவேற்றிவைக்கப் பாடுபட வேண்டுமென்று வேண்டுகிருேம்.

—ஆசிரியர்.

மாநில பஞ்சாயத்து மகாநாடு

[நிகழ்ச்சி விளக்கம்]

(நமது விசேஷ நிருபர்)

[பஞ்சாயத்து மாநாடு பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புகளை நேரில் கண்டறிந்த நமது நிருபரின் எழுத்தோவியத்தை இங்கே காணலாம். சென்னை நகர வாசிகள் மட்டுமன்றி, வெளி மாகாணத்திலிருந்து வந்த பார்வையாளர்களெல்லாம், இந்த மாநாட்டின் புதுமையையும், ஒழுங்கையும், பெரிதும் பாராட்டியுள்ளனர். இதில் கலந்து கொண்ட கிராமத் தலைவர்கள் ஒவ்வொருவரும், இதற்குள் இந்த விவரங்களையெல்லாம் இன்னும் விரிவான வகையில் தம்தம் கிராமங்களில் விளக்கிக் கூறியிருப்பார்கள் என்பதை நாம் அறிவோம். ஆயினும், இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பில்லாத இலட்சக் கணக்கான மக்களுக்கு, முழு விவரமும் தெரிய வேண்டும் என்பதற்காகவே, இந்த நிகழ்ச்சித் தொகுப்பை வெளியிடுகிறோம்.

தம்முடைய முழுநேர அலுவல்களுக்கிடையே, முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்களுடைய முகாம்களுக்கு நேரில் சென்று, அவர்களுடன் அளவளாவினர். எட்டாம் தேதி இரவும், ஒன்பதாம் தேதி இரவும் முதலமைச்சர் அவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களின் முகாம்களுக்குச் சென்று, அவர்களை நேரில் சந்தித்துப் பேசினர். அந்த நேரத்திலும் தங்களிடம் அன்பு காட்டி, நேரில் வந்து பேசி உபசரித்த முதலமைச்சரைக் கண்டதும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியும், மன நிறைவும் சொல்லுந்தரமன்று.

ஆசிரியர்.]

வரலாற்றுப் புகழ்படைத்த மாநில பஞ்சாயத்து மகாநாடு

தமிழ்நாட்டின் வரலாற்றில் குறிப்பிடக்கூடிய புகழ் படைத்த மாநில பஞ்சாயத்து மகாநாடு 1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் சென்னை மாநகரில் விமரிசையாக நடந்தேறியது. பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டார்கள். கிராமப்புறங்களில் உள்ள மூன்று கோடிக்கு மேற்பட்ட மக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாடு ஒன்று, இதற்கு முன், இப்படி பிரம்மாண்டமான அளவில் நடந்ததை நான் அறியேன். எனவே, இது வரலாற்றிலே குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தமிழகத்தின் பண்புக்கு எடுத்துக்காட்டு

மாநிலக் கவர்னர் தலைமை வகிக்க, இந்தியப் பிரதமர் துவக்க உரை ஆற்ற, முதலமைச்சர் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அறிவுரை வழங்க, நாட்டுக்குத் தேவையான நல்ல தீர்மானங்களைப் பஞ்சாயத்துத் தலைவர்கள் விஷயாலோசனைக் கூட்டத்தில் ஆர அமர ஆராய்ந்து பார்த்து, எதிர்கால நல்வாழ்வினை உருவாக்கும் செயல்முறைத்திட்டங்களைத் தயாரித்து, அவற்றை எல்லாக் கிராமங்களிலும் நிறைவேற்றுவோம் என்ற உறுதிமொழி கொடுத்த மாபெரும் வாய்ப்பு இந்த மாநாட்டில் ஏற்பட்டது. இத்தனை சிறப்புகளோடு நடந்தேறிய மாநில பஞ்சாயத்து மாநாடு, தமிழகத்தின் பழம் பெருமைக்கும், பண்புக்கும் சிறந்ததொரு எடுத்துக்காட்டாக விளங்கியது எனலாம். சென்னை நகரில் ஐலண்டு மைதானத்திலே, அதற்கென்று நிர்மாணிக்கப்பட்ட, கலை அழகுத் ததும்பித் திகழ்ந்த பிரம்மாண்டமான கொட்டகையில், ஆயிரமாயிரம் பஞ்சாயத்துத் தலைவர்கள் ஒன்றாக அமர்ந்து, ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், அமைதியுடனும், பண்புடனும், நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை பரிசீலனை செய்து முடிவு எடுத்தார்கள். இந்த மாநாடு தமிழ்நாட்டுக் கிராமங்களின் எதிர்கால நல்வாழ்வினைச் சுட்டிக்காட்டியது. "கிராமிய நல்வாழ்வே நாட்டின் பெரு வாழ்வு" என்று பறை சாற்றியது ; தமிழ்நாட்டின் பெருமையையே உயர்த்தியது.

சுமார் பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள், இந்த மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். அதில் ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் இருந்தார்கள். தமிழகத்தின் பல்வேறு பாகங்களில் பரந்து இருந்த அத்துணை பஞ்சாயத்துத் தலைவர்களையும் ஒரு இடத்தில் கூட்டி வைத்து மாநாடு நடத்துவது என்றால் அது ஒரு மகத்தான வேலையாகும். "எண்ணித்துணிக கருமம்—துணிந்த பின், எண்ணுவமென்பது இழுக்கு" என்ற வள்ளுவர் வாக்கின்படி, தமிழ்நாட்டு அரசாங்கம் தீர ஆலோசித்து இப்படிப்பட்டதொரு பிரம்மாண்டமான மகாநாட்டை நடத்துவது என்று முடிவு செய்தது.

12,000-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களையும் தலைநகருக்கு வரச்செய்து அவர்களை எல்லாம் ஒரு இடத்தில்

கூட்டி, வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, மன நிறைவுடன் அவர்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப்போய் சீரிய முறையில் செயலாற்றுகின்ற நல்ல நிலையை ஏற்படுத்துவதில் எவ்வளவோ சிரமங்கள் இருக்கத்தான் செய்தன. ஆனால் மாநில அரசாங்கம் மாநாட்டுப் பிரதிநிதிகள் தலைநகரில் தங்கி இருந்தபொழுது அவர்களுக்கு எல்லா வசதிகளையும் முடிந்த வரையில் செம்மையாகச் செய்திருந்தது. எல்லாப் பிரதிநிதிகளையும் ஒரே இடத்தில் தங்க வைத்திருந்தால், அதனால் எவ்வளவோ அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கும். அதைத் தவிர்க்க வேண்டி, பிரதிநிதிகள் தங்க என்று, ஏழு முகாம்கள் தனித்தனியே அமைக்கப்பட்டிருந்தன. செங்கற்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் ஐலண்டு மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த முதல் முகாமிலும், சேலம், தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அதே மைதானத்தில் இரண்டாவது முகாமிலும், கோவை, நீலகிரி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியிலும், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் லயோலா கல்லூரியிலும்; இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பச்சையப்பன் கல்லூரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும், தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மாநிலக் கல்லூரியிலும் தங்குவதற்குச் சிறந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. மாநாட்டில் கலந்து கொண்ட பெண் பிரதிநிதிகளுக்காக மேரி இராணி கல்லூரியில் தனியாக தங்குமிட வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதிநிதிகளுக்கு வசதிகள்

மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இயன்ற வரையில், இந்த முகாம்களில், எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டு இருந்தன. சாப்பாட்டு வசதிகள் நல்ல முறையில் செய்யப்பட்டிருந்தன. பெரிய பெரிய கொட்டகைகள் தனியாகப் போடப்பட்டு, ஒவ்வொரு முகாமிலும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மேஜைகளில் உணவு பரிமாற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. குளிக்க வசதி, படுக்கை வசதி முதலியனவும் தக்க முறையில் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு முகாமுக்கும் பொறுப்பாளராகவும், பிரதிநிதிகளின் வசதிகளையும், தேவைகளையும் அவ்வப்போது கவனிப்பதற்காக வேண்டியும் பொறுப்புள்ள அரசாங்க அதிகாரி ஒருவர் இருந்தார். அதே மாதிரி சாப்பாட்டு விடுதிகளிலும் அரசாங்க அதிகாரிகள் இருந்து, பொறுப்புடன் எல்லா மேற்பார்வை வேலைகளையும் கவனித்துக்கொண்டார்கள். மொத்தத்தில் தமிழ் நாட்டின் கிராமப் பகுதிகளிலிருந்து வந்திருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் சென்னை போன்ற பெரிய நகரத்தில், நெரிசல் இல்லாமல் வசதியாக தங்கவும், மாநாட்டு நிகழ்ச்சிகளில் சௌகரியமாக கலந்து கொள்ளவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

மாநாட்டுப் பிரதிநிதிகளின் பொறுமையைச் சோதனை செய்வது போன்ற நிகழ்ச்சி, 7-ந் தேதி இரவு நடைபெற்றது. அதாவது, அன்றிரவு சுமார் 8 மணிக்கு பலமான மழை பெய்ததின் விளைவாக அநேக அசௌகரியங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, ஐலண்டு மைதானத்தில் தங்கியவர்கள் அனைவரும் உணவு, படுக்கை முதலிய விஷயங்களில் மிகவும் சிரமப்பட்டார்கள். ஆனால், பிரதிநிதிகள் எதற்கும் சளைக்கவில்லை. மறுநாள் காலையில் வெகு உற்சாகத்தோடும், உறுதியோடும் ஒழுங்கான முறையில் மாநாட்டுக்கு வந்து சேர்ந்தது மிகவும் பாராட்டத் தக்கது.

கிராமியக் கலையின் எழில் உருவம்

மாநாடு நடைபெற்ற ஐலண்டு மைதானம் திருவிழாக் கோலமே பூண்டிருந்தது எனலாம். மாநாட்டுக்கென அமைக்கப்பட்டிருந்த மாநாட்டுக் கொட்டகை, கண்ணைக் கவரும் எழிலுடனும், அதே சமயத்தில் எளிமையுடனும் காட்சியளித்துக்கொண்டிருந்தது. 300 அடி அகலமும், 330 அடி நீளமும் உள்ள அப் பெரியக் கொட்டகையில் 15,000-க்கு மேற்பட்டவர்கள் வசதியாக அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளை நன்றாக கவனிக்கும்படியான முறையில் மாநாட்டுக் கொட்டகை அமைந்துஇருந்தது. மாநாட்டுக் கொட்டகையின் முகப்பில் அழகாக அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான வாசலின் மேல் சுமார் 70 அடி உயரமுள்ள கோபுரம் போன்ற நவீன முகப்பு அனைவருடைய மனதையும் கவர்ந்தது. கிராம வீட்டின் மேற்புறக் கூரையைப் போன்ற தளத்தின்மீது, நவீன சிற்பக் கலையையொட்டி, புதிய கண்ணோட்டத்தோடு அமைக்கப்பட்ருந்தடி அதன் கம்பீரத்தோற்றம், வளர்ந்துவரும் கிராமீயக்கலை உணர்ச்சியின் அழகிய உருவமாகத் திகழ்ந்தது.

எவ்வளவு மழை பெய்தாலும் ஒழுகாத முறையில் அமைக்கப்பட்டு, வெள்ளை வெளேரென்ற துணியால் உட்பகுதி அலங்கரிக்கப்பட்டு அற்புத சோபையுடன் மாநாட்டுக் கொட்டகை தோற்றமளித்துக்கொண்டிருந்தது. கோபுரத்தின்கீழ், பிரதான வாயிலில் நுழையுமுன், இடது பக்கத்தில் மகாத்மா காந்தி இராட்டையில் நூற்பது போன்ற உருவம் காட்சியளித்தது. வலது பக்கத்தில் "குடும்பக் கட்டுப்பாடு" திட்ட அடிப்படையில் சந்தோஷ குடும்பத்தின் காட்சி இடம் பெற்றிருந்தது. பந்தலுள் மேற்கில், அழகிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. கலியாண வீடுகளில் காணப்படும் தென்னை, கமுகு, தோரணம் முதலிய அலங்காரங்களோடு, மாநாட்டுக்கொட்டகை முழுவதும் ஆனந்தக் காட்சி அளித்தது. மாநாட்டுக் கொட்டகையில் (மேடை உட்பட) யாருக்கும் நாற்காலி வசதிகள் இல்லை. எல்லோரும் கீழே தரையில் விரிக்கப்பட்டிருந்த பாய்களின்மீது அமர்ந்து மாநாட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள். கிராமியச் சூழ்நிலையை அடிப்படையாகவும், அதே சமயத்தில் நவீன வசதிகள் கொண்டதாகவும் அமைந்திருந்த பிரம்மாண்டமான

மாநாட்டின் அமைப்பும் அலங்காரமும் எல்லோருடைய பாராட்டுதலேயும் பெற்றுவிட்டது எனலாம்.

மாநாட்டின் முதல் நாளான அக்டோபர் 8-ந் தேதி காலேயிலேயே மாநாட்டுக் கொட்டகை களேகட்டிவிட்டது. ஆயிரக்கணக்கான கிராமத் தலேவர்கள் காலே எழு மணிக்கே வரிசை வரிசையாக, கொட்டகையின் முன்னுல் அணிவகுத்து நின்று அமைதியாகவும்; ஒழுங்காகவும் உள்ளே சென்றது அற்புதமான ஒரு காட்சியாகும். மிகவும் கோலாகலத்துடன் துவங்கிய மாநாட்டிலே சுமார் 500-க்கும் அதிகமான பெண் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றிலும் சேர்த்துகொள்ளப்பட்ட, ஹரிஜனப் பிரதிநிதிகள் இந்த மகாநாட்டிற்கு விசேஷ அழைப்பின் மேல் வந்திருந்தனர்.

உள்ளத்தைக் கொள்ளேகொண்ட தலேவனின் வரவு நோக்கி........

பாரதப் பிரதமரை தரிசிக்க வேண்டுமென்ற ஆவல், குழுமியிருந்த மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே பொங்கி வழிந்தது. சரியாக காலே 11 மணிக்கு பிரதமர் நேரு மாநாட்டுக் கொட்டகைக்குள் வந்து சேர்ந்தார். அவருடைய வருகையை ஆவலுடன் எதிர்ப்பார்த்திருந்த பஞ்சாயத்துத் தலேவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்து பிரதமரை வரவேற்றுர்கள். மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுவதற்கு முன்னுல், பிரதமர் நேரு பதினேந்து நிமிடங்களுக்கு மேலாகப் பந்தலில் கூடியிருந்த பஞ்சாயத்துத் தலேவர்களிடையே சுற்றிப் பார்த்து மகிழ்ச்சியுடன் கைகூப்பி வணக்கம் தெரிவித்தார். ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் ஒருசேர வீற்றிருந்தனர். அவரோடு கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி, முதலமைச்சர் திரு. காமராஜ், நிதியமைச்சர் திரு. சுப்பிரமணியம் ஆகியோர் உடன் சென்றனர். மாநாட்டுக் கொட்டகையை பிரதமர் சுற்றி வரும்பொழுது குழுமியிருந்த பஞ்சாயத்துத் தலேவர்களிடையே நாட்டுத் தலேவரை நேரிலேயே தரிசித்ததினுல் மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடியது எனலாம்.

" கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே " என்ற இறை வணக்கப் பாடலுடன் மாநாடு தொடங்கியது. பிரதமர் நேரு, கவர்னர் மேதி, முதலமைச்சர் காமராஜ், யூனியன் அமைச்சர்கள் டாக்டர் சுப்பராயன், திரு எஸ். கே. டே. ஆகியோருக்கு தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலேவர் மலர் மாலேகளே அணிவித்தார். **தமிழ்நாடு கவர்னர் திரு. விஷ்ணுராம் மேதி** தம்முடைய தலேமையுரையை நிகழ்த்தினுர். கவர்னர், தம் தலேமையுரையில் பஞ்சாயத்துக்களின் பழம் பெருமையையும், சென்னே ராஜ்ஜியத்தில் அவ்வாட்சி அமைப்பு முறைக்கு ஏற்கெனவே இயற்றப்பட்ட சட்டங்கள் பற்றியும் விவரித்து, கடைசியாக 1958-ம் வருடத்திய பஞ்சாயத்துக்கள் சட்டத்தைப்பற்றியும் குறிப்பிட்டார். (கவர்னர் அவர்களின் தலேமை உரையின் சுருக்கத்தை 13-ம் பக்கத்தில் காண்க).

பின்னர் **பிரதமர் நேரு** அவர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பஞ்சாயத்துக்கள் ஆற்ற வேண்டிய பணிகளேக் குறித்தும், அந்த நிறுவனங்கள் நாட்டு முன்னேற்றத்திற்காக மேற்கொள்ள வேண்டிய கடமைகளேக் குறித்தும், சுமார் 1½ மணி நேரத்திற்குமேல் பேசினுர். பிரதமர் அவர்களின் பேச்சை **உள்துறை அமைச்சர் திரு. பக்தவத்ஸலம்** அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார்கள். (பிரதமரின் சொற்பொழிவின் சாரம் 10-ம் பக்கம் காண்க).

தமிழ்நாடு அரசாங்கப் பிரதம செயலாளர் **திரு. ஆர். ஏ. கோபாலசாமி** அவர்கள் நன்றியுரை கூறினுர். **திரு. ஜெயப் பிரகாஷ் நாராயண்** அவர்களிடமிருந்து தமிழ்நாடு முதலமைச்சருக்கு வந்திருந்த வாழ்த்துச்செய்தியை அவர் முதலில் படித்தார் [9-ம்பக்கம்பார்க்க]. பிரதம செயலாளர், தம் நன்றியுரையில், பின்வருமாறு குறிப்பிட்டார் : " நமது பிரதம மந்திரி அவர்கள் நேற்று பரம்பிக்குளம் வேலேத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இன்று மற்ருெரு வேலேத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கிருர். இந்த மாநிலத்தில் பஞ்சாயத்து ஆட்சி செயல்படத் தொடங்கியிருப்பதுதான் மற்ருெரு வேலேத் திட்டம். இந்த இரண்டு வேலேத் திட்டங்களுக்கிடையே ஓர் ஒருமைப்பாடு நிலவுகிறது என்று நான் கருதுகிறேன். ஒன்று, பொறியியல் அறிவினேப் பயன்படுத்தி சமுதாயத்தின் உயர்வுக்காக செய்யப்படுகின்ற வேலேத் திட்டம். அதே போல, பஞ்சாயத்து ஆட்சியும் புதியதொரு தலேமையை உருவாக்குவதன் மூலம், சமுதாய வாழ்வின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் நிர்வாகத் திட்டமாகும் " என்று மிகவும் பொருத்தமாக விளக்கினுர். பிரதம செயலாளர் நன்றியுறைக்குப் பின் மாநாடு இடைவேளேக்குக் கலேந்தது.

விஷயாலோசனேக் கமிட்டிக் கூட்டம்

இடை வேளேக்குப் பின், மாலே 3 மணிக்கு விஷயாலோசனேக் கமிட்டிக் கூட்டம் ஆரம்பமாயிற்று. இதில் பஞ்சாயத்து யூனியன் தலேவர்கள் கலந்துகொண்டனர். பிரதம செயலாளர் **திரு. ஆர். ஏ. கோபாலசாமி** அவர்கள் தலேமையில், பஞ்சாயத்து யூனியன் தலேவர்களேக்கொண்ட விஷயாலோசனேக் குழு, சுமார் மாலே 6 மணி வரை நடைபெற்றது. ரெவின்யூ போர்டு மெம்பர் திரு கெய்வார், மற்றும் அரசாங்கத்தின் காரியதரிசிகள், கலெக்டர்கள் ஆகியோர் முன்னிலேயில் பஞ்சாயத்து பற்றிய நிர்வாகச் சிக்கல்கள் பலவற்றை சுமார் 30 பேர் விரிவாக எடுத்துக் கூறினுர்கள். இத்துடன் முதல் நாள் நடவடிக்கைகள் முடிவுற்றன.

மறுநாள் காலே (அக்டோபர் 9-ம் தேதி காலே) சுமார் 8 மணிக்கு மறுபடியும் விஷயாலோசனேக் கமிட்டி கூடியது. பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தமான பல்வேறு விஷயங்களே எல்லாம் மூன்று முக்கியத் தீர்மானங்களாக எல்லோரும் ஆலோசித்து உருவாக்கினுர்கள். மாநாட்டில் கொண்டுவரப்பட வேண்டிய தீர்மானங்கள் பற்றியும்,

"மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம்" பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபித்து, நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் பேசுகிருர்.

அத்தீர்மானங்களின்மேல் பேசுபவர்களின் பெயர்கள் பற்றியும் ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி மன்றத்துக்கும் ஒவ்வொரு பிரதிநிதி என்ற அடிப்படையில் முடிவுகள் செய்யப்பட்டன.

காலே 10 மணிக்கு பொது மாநாடு தொடங்கியது. முதலில், மத்திய சமுதாய நல கூட்டுறவுத்துறை அமைச்சர் **திரு. எஸ். கே. டே** அவர்கள் பேசினுர்கள். அவருடைய சொற்பொழிவை **திரு. கோ. வேங்கடாசலபதி** அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துச் சொன்னுர்கள்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம்—முதல் தீர்மானம்

மாநில நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் 'பஞ்சாயத்துக்களும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டமும்' என்ற தீர்மானத்தை மாநாட்டின்முன் வைத்துப் பேசுகையில், பின்வருமாறு குறிப்பிட்டார்கள் :—

"மகாத்மா காந்தி சொல்லிவந்த கிராம ஆட்சி முறையை ஏற்படுத்த, நாம் பாடுபடுகிருேம். எப்படி ஒரு அணையினுடைய நீர்த் தேக்கத்தின் பலன், ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் சென்று கிடைக்கும்பொழுதுதான் ஏற்படுகின்றதோ, அதே போன்று, அதிகாரம் ஒரு இடத்தில் மட்டும் குவிந்திருப்பது என்றில்லாமல் ஒவ்வொர் இடத்திற்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் போய்ச் சேரவேண்டும் என்று ஏற்பாடு செய்யும்பொழுதுதான், நாம் முழுப் பயனை அடைய முடியும். அப்படி ஒவ்வொரு குடும்பத்துக்கும் பலன் போய்ச் சேர வேண்டும் என்ற அடிப்படையில்தான் கிராம ஆட்சி என்ற முறை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. "

தமிழகத்தின் 373 நிதி அமைச்சர்கள்

மேலும் பேசுகையில், அவர் "சென்னை ராஜ்யத்திற்கு ஒரு நிதி மந்திரி அல்ல. 373 நிதி அமைச்சர்கள் தொண்டாற்ற, தமிழ்நாட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 373 நிதி அமைச்சர்கள் மட்டுமல்ல, திட்டங்கள் தீட்டக்கூடிய மந்திரிகள் 373 பேர் வந்திருக்கிருர்கள். நிதி வசதியைப் பெருக்குவதுகூட அவரவர்கள் சாமர்த்தியமேயாகும். நாங்கள் எங்களுக்குத் தெரிந்த வரையில் கணக்குப் போட்டுக்கொடுத்திருக்கிருேம். இதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. நிதி திரட்டும் சக்தி உங்களுக்கு இருந்தால், எந்த அளவு வரை அது போகலாம் என்று ஒரு அளவு நிர்ணயிக்கப்படவில்லை. எவ்வளவு வேண்டுமானுலும் போகலாம். 'நாங்கள் அதிகமாக வசூல் செய்துகொள்கிருேம்' என்று நீங்கள் சொன்னுல், அதற்குத் தடை போடும் சக்தி ஒன்றும் கிடையாது. சட்டமும் கிடையாது" என்று குறிப்பிட்டார்கள்.

முடிவுரையில் அவர் "அடுத்த ஐந்தாண்டுக்குள்ளாக கிராமங்களில் உள்ள ஒவ்வொருவரும் முன்பிருந்ததைவிட, நல்ல உயர் நிலையை அடைந்திருக்கிருர்கள் என்ற சூழ்நிலையை நாம் ஏற்படுத்த வேண்டும். விவசாயம், கைத்தொழில் வளர்ச்சி, குடிசைக் கைத்தொழில் வளர்ச்சி, கல்வி முதலான எல்லாத் துறைகளிலும் முன்னைவிட அபிவிருத்தி காணவேண்டும். கல்வி மூலம் நல்ல ஆற்றல், நல்ல பண்பு இவை ஏற்படும் முறையில் செயல்பட வேண்டும். இன்று புது யுகம் அமைக்கும் பணியில் நாம் ஈடுபட்டு இருக்கிருேம். அதற்காகப் புது ஆற்றல், அறிவு இவற்ருேடு பண்பையும் இணைத்துத்தான் நாம் முன்னேற முடியும். ஒரு புதிய சக்தி நமக்கேற்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் உணர்ந்து நாட்டுக்கு நல்ல முறையில் பணியாற்றவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்கள்.

நிதி அமைச்சர் பிரேரேபித்த "மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட" தீர்மானத்தின் பேரில் கீழ்க்கண்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பேசினுர்கள் :—

1. திரு. ஞானசேகரன் (உத்திரமேரூர்), (2) திரு.இராமசாமி (சிவகாசி), (3) திரு. திருமலைசாமி ரெட்டியார் (ஆத்தூர்-மதுரை), (4) திரு. வேலுசாமி (பரமத்தி-சேலம்), (5) திரு. வரதராசன் (அரியலூர்-திருச்சி), 6. திரு. நஞ்சா கவுடர் (கோத்தகிரி-நீலகிரி), 7. திரு. கோதண்டபாணி

"உணவு உற்பத்தி" பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபித்து, விவசாயத்துறை அமைச்சர் திரு. பக்தவத்ஸலம் பேசுகிறார்.

(பெத்தநாயக்கன் பாளையம்), (8) திரு. திருமலையாண்டித் தேவர் (தென்காசி), (9) திரு. ஜே. நேசமணி (கன்னியா குமரி), (10) திருமதி மீனாட்சி அம்மாள் (நீலகிரி).

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உணவு உற்பத்தி—இரண்டாவது தீர்மானம்

அடுத்து, **மாநில உணவு-விவசாயத் துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்ஸலம்** அவர்கள் விவசாயம் பற்றிய இரண்டாவது தீர்மானத்தைப் பிரேரேபித்து உரை நிகழ்த்தினார்கள். அவர் தம்முடைய சொற்பொழிவில், " பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் பொறுப்பேற்று வேலை செய்ய வேண்டும். நம் முன் பல வேலைகள் இருக்கின்றன. நல்ல வாழ்க்கை நடத்த வேண்டுமென்றால், அரிசி மட்டும் கிடைத்துவிட்டால் போதாது; பணமும் வேண்டும். அதைச் சம்பாதித்துக்கொள்ளவும் வழி செய்துகொள்ள வேண்டும். காய்கறி, பழ வகைகளைப் பயிரிடலாம். இதனால் ஓரளவு பொருளாதார வசதியை உயர்த்திக்கொள்ள முடியும். கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை முதலியவைகளையும் கூட்டுறவு முறையில் ஏற்படுத்த பஞ்சாயத்துக்கள் முயற்சி எடுக்க வேண்டும். கிராமத் தொழில்களை எல்லாம் முன்னேற்றமடையச் செய்யவேண்டும். கூட்டுறவு முறையில் பல நல்ல காரியங்கள் நடைபெறவேண்டும். அதற்குப பல தடைகள் ஏற்படலாம். அதையெல்லாம் பஞ்சாயத்துக்கள் சமாளித்து நல்ல முறையில் நடத்த முயலவேண்டும். இந்த வேலைகளை எல்லாம் பஞ்சாயத்துக்கள் பொறுப்பு எடுத்து வேலை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் தான் திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன " என்று குறிப்பிட்டார்கள்.

விவசாய அமைச்சரின் பேச்சுக்குப் பின்னர் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது. மறுபடியும் இடைவேளைக்குப் பின் பிற்பகல் 3 மணிக்கு மாநாடு கூடிற்று. விவசாயம் சம்பந்தமான தீர்மானத்தை ஆதரித்துக் கீழ்க்கண்ட பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள் :

(1) திரு. ஆர். எம். குமாரசாமி கவுண்டர் (பல்லடம்), (2) திரு. எஸ். அருணாசலம் (சேடப்பட்டி), (3) திரு. வால்மீகி (சிங்கம்புணரி), (4) திரு. சீனிவாச ரெட்டியார் (துரிஞ்சாபுரம்), (5) திரு. எஸ். கே. அழகிரிசாமி (ஒட்டப்பிடாரம்) (6) திரு. தண்டபாணி நாயுடு, (தென்னார்காடு மாவட்டம்) (7) திரு. எஸ். இராஜகோபாலன் (திருவிடமருதூர்), (8) திரு. சண்முகசுந்தரம் (கீவளூர்.)

நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் விவசாயம் பற்றிய தீர்மானத்தை ஒட்டி சில வார்த்தைகள் பேசினார்கள். அவ்வருடைய பேச்சுக்குப் பிறகு, விவசாயம் பற்றிய இரண்டாவது தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

குடும்பக் கட்டுப்பாடு—மூன்றாவது தீர்மானம்

"குடும்பக் கட்டுப்பாடு" பற்றிய மூன்றாவது தீர்மானத்தை **மாநில சுகாதாரத் துறை அமைச்சர் திரு. எம். ஏ. மாணிக்கவேலு அவர்கள்** பிரேரேபித்துப் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்:—" மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும், மக்கள் கஷ்டமின்றி சுகமாக வாழ வேண்டுமென்று திட்டம் போட்டு நிறைவேற்றிக்கொண்டு செல்லும் பொழுது, மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போனால் நாம் திட்டமிடுவதால் என்ன பலன் ? பலன் எதுவும் கிடைக்காமல் போய்விடும். குடும்பத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டால்தான் நாம் சுகமாகவும், குழந்தைகளும் சந்தோஷமாகவும் இருக்க முடியும். இந்தப் பொறுப்பை பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். நம் மாநிலம் எல்லாத் துறைகளிலும் பிற மாநிலங்களுக்கு வழி காட்டியாக இருக்கிறது. அப்படியே இப் பஞ்சாயத்து ராஜ்ய விஷயத்திலும், நாம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் " என்று குறிப்பிட்டார்கள்.

[32-ம் பக்கம் பார்க்க]

1961 அக்டோபர் 8, 9 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற மாநில பஞ்சாயத்து மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள் :

முதல் தீர்மானம்—மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்

1. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் வேலை பற்றி, தமிழ்நாடு அரசாங்க நிதியமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையை, தமிழ்நாடு பஞ்சாயத்து மகாநாடு பரிசீலனை செய்து தீர்மானிப்பதாவது :

முதலாவதாக,

கீழ்க்கண்டவைகளை பஞ்சாயத்துக்களுக்குச் சிபாரிசு செய்கிறது :—

(1) மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும், அதன் நிர்வாகத்துக்கு உட்பட்ட நகரப் பஞ்சாயததுககளிலும் கிராமங்களிலும் உள்ள ஒவ்வொரு குடும்பமும், மூன்றுவது திட்டத்தைப்பற்றி அறியும்படிச் செய்யவேண்டும். குறிப்பாக, அந்த வட்டாரத்தின் அபிவிருத்திக்குச் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றித் தெரிந்துகொள்ளச் செய்யவேண்டும்.

(2) திட்டத்தை நிறைவேற்றவும், அதன் வெற்றிக்கு வழிகோலவும் தன் நிர்வாகத்துக்கு உட்பட்ட கிராமங்களிலும், நகரப் பஞ்சாயத்துக்களிலும் உள்ள குடும்பங்கள், குறிப்பிட்ட கடமைகளை மேற்கொள்ளும்படிச் செய்ய வேண்டும்.

(3) திட்டத்தில் கூறியுள்ளபடி, கிராமத்திலுள்ள வரவு இனங்களைச் சேகரிக்க முயல வேண்டும்.

(4) திட்டத்தின் நிர்மாண வேலைகளைச் செயல்படுத்துவதின் மூலம், கிராம ஒற்றுமையை வளர்க்கவேண்டும்

இரண்டாவதாக,

கீழ்க்கண்டவைகளை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சிபாரிசு செய்கிறது :—

(1) ஒவ்வொரு வட்டாரத்து அபிவிருத்திக்கும், அந்த வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன் பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கவேண்டும். மேலும்,

(அ) விவசாய உற்பத்தி அபிவிருத்தி.

(ஆ) கிராமக் கைத்தொழில்களை வளர்த்தல்.

(இ) கிராமக் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்துவதோடு, இணைப்புப் பாதைகளைப் போடுதல்.

(ஈ) ஆரம்பக் கல்வி எல்லோருக்கும் கிடைக்கும்படிச் செய்தல்.

(உ) தாய், சேய் நலனைப் பராமரிப்பதோடு, குடும்ப நலத் திட்டத்தை எடுத்துக் கூறுவது

ஆகியவை உட்பட பொது அபிவிருத்திக்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும்.

(2) மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பொதுவாகவும், அந்த வட்டாரத்து அபிவிருத்திக்கு, திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றி, வட்டாரத்திலுள்ள எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் தகவல்கள் கிடைக்கும்படிச் செய்ய வேண்டும் ; மேலும், திட்டங்களை அவ்வப்போது பரிசீலனை செய்து அவசியம் ஏற்படும்போது மாற்றி அமைக்கவேண்டும்.

(3) திட்டத்தில் பணித்திருக்குமாறு, வட்டாரத்தில் ஆதாரங்களைத் திரட்டவேண்டும்.

(4) திட்டத்தின் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்து, வட்டாரத்திலுள்ள பஞ்சாயத்துக்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

மூன்றுவதாக,

கீழ்க்கண்டவைகளை மாநில அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்கிறது :—

கிராமங்களின் பல்வேறு தேவைகள் சம்பந்தப்பட்ட கட்டுவேலைகளை நிறைவேற்றவேண்டிய அளவு நிதி, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் போதுமான அளவு ஒதுக்கப்படவில்லை என்பதை மாநில அரசாங்கத்திற்கு இந்த மகாநாடு தெரிவித்துக்கொள்கிறது. ஆகவே, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு மாநில திட்டத்திலோ, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலோ, இன்னும் அதிகப் படியான நிதிவசதிகள், கிடைக்கும்படியாக மாநில அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமென்று இந்த மகாநாடு சிபாரிசு செய்கிறது. இந்த நிதி வசதிகளை உபயோகப்படுத்துவதில் தேசிய வகையில் நிர்ணயிக்கப்பட்ட தாராதர முக்கியத்துவங்களை இந்த மகாநாடு ஒப்புக்கொள்கிறது. ஆனால், அதே சமயத்தில், பிரதேசத்திற்குத் தகுந்த மாதிரி மாற்றங்கள் இருக்கவேண்டிய தேவையை அரசாங்கமும் அங்கீகரிக்கவேண்டும். அவ்வப்போது வேண்டிய மாற்றங்கள் செய்யக்கூடிய உரிமை பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுக்கப்படவேண்டுமென்றும் சிபாரிசு செய்கிறது.

இரண்டாவது தீர்மானம்—விவசாய உற்பத்தி

"பஞ்சாயத்துக்களும் விவசாய உற்பத்தியும்" என்பதுபற்றிய தமிழ்நாடு அரசாங்க விவசாய அமைச்சரது அறிக்கையை தமிழ்நாடு மாநில பஞ்சாயத்து மகாநாடு ஆராய்ந்த பின்னர் பின்வருமாறு தீர்மானிக்கிறது :—

முதலாவதாக,

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கீழ்க்கண்டவாறு சிபாரிசு செய்கிறது :

(1) நிலம், நீர் மற்றும் விவசாய உற்பத்திக்கு அவசியமான வசதிகளை, திறமையான வகையில் பயன்படுத்திக் கொள்வதே பஞ்சாயத்துக்களின் கடமைகளில் மிகவும் முக்கியமான கடமை என்பதை உணருதல் வேண்டும்.

(2) மேற்கண்டவாறு உணருவதையொட்டி (அ) குடிமராமத்து வேலைகளைச் செவ்வனே முறைப்படி செய்வதன் மூலமும், கிடைக்கும் நீரை, சிக்கனமாக உபயோகிப்பதின் மூலமும், திறமையான நீர்ப்பாசனத்தை ஏற்படுத்தவேண்டும்.

(ஆ) கிராமத்தில் இயற்கை உரக் குறைவைப்பற்றித் தெரிந்துகொண்டு, அதனை நீக்க உள்ளூர் உர உற்பத்தி ஆதாரங்களைத் திரட்ட ஏற்பாடு செய்ய வேண்டும்.

(இ) கிராம சகாயகர்கள் நிறுவனத்தை பஞ்சாயத்து யூனியன் செயல்படுத்துவதற்கு உதவுவதோடு, அதன் மூலம் பொறுக்கு விதைகளின் உற்பத்தி, வினியோகம், உபயோகம் ஆகியவற்றைத் திட்டமிடப்பட்ட முறையில் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ஈ) திட்டமிடப்பட்ட முறையில் மரம், செடி வகைகளை பஞ்சாயத்துக்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பொது காலி நிலங்களில் பயிர் செய்து, அதன் மூலம் உள்ளூர் உர வளத்தையும், கால்நடைத் தீவனம், விறகு முதலிய பயனுள்ள பொருள்களின் உற்பத்தியையும் பெருக்க வேண்டும்.

(உ) மேற்கூறிய அனைத்தையும் உட்கொண்ட கிராம உணவு உற்பத்தித் திட்டத்தை உருவாக்கி, அதனைக் கிராமத்திலுள்ள எல்லா குடும்பங்களும் ஒத்துக்கொண்டு, திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டி, பணிகளை ஏற்கும்படி செய்தல் வேண்டும்.

இரண்டாவதாக,

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கீழ்க்கண்ட சிபாரிசுகளைச் செய்கிறது :

(அ) பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள செயல்முறைத் திட்டங்களுக்கு, உதவி, ஒருமைப்படுத்துதல், வழிகாட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) அவற்றின் நிர்வாகத்திலுள்ள சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைத் திறமையான முறையில் தொடர்ந்து பராமரிப்பு செய்தல் வேண்டும்.

(இ) வட்டாரத்தில் ரசாயன உரம் வந்து சேருவதைக் கண்காணிக்கவும், வட்டாரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரசாயன உரம், உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்காக வட்டாரத்திற்குள்ளாகவே உபயோகப்படுத்தப்படுகிறதா என்பதையும் சரி பார்க்கவேண்டும்.

(ஈ) திறமையான முறையில் இயங்குகின்ற ஒரு கிராம சகாயகர் நிறுவனத்தை அமைத்து செயல்படுத்த வேண்டும்.

(உ) பயிர்ப் பாதுகாப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை, வேண்டிய காலங்களிலும், உஷாராகவும் செய்ய வேண்டும்.

மூன்றாவதாக,

கீழ்க்கண்டவைகளை மாநில அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்கிறது:—

1. கிராமத்திலுள்ள பொது நிலங்கள் சம்பந்தமான பொறுப்புக்களை ஒவ்வொரு பஞ்சாயத்தும் நிறைவேற்ற உதவி செய்யும் வகையில், அப்படிப்பட்ட நிலங்கள் எவையெவை, எங்கெங்கு உள்ளன என்று குறிப்பிட்டுக் காட்டும் முறையிலே, ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

அத்துடன், இது சம்பந்தமான எல்லா விவரங்களையும், கிராம அதிகாரிகள் கொடுத்து உதவவும், வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

2. ஒவ்வொரு வட்டாரத்திலும், தேவையான விவசாய டெப்போ வசதிகளை ஏற்படுத்துகின்ற வேலை மிகவும் முக்கியமானதால், அதை உடனடியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த மகாநாடு சிபாரிசு செய்கிறது. கூடுமானவரையில் டெப்போ வசதிகள் பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களுக்கு மிக அருகிலேயே அமைக்கப்படவேண்டுமென்று இந்த மகாநாடு சிபாரிசு செய்கிறது.

3. எல்லா வட்டாரங்களுக்கும், குறிப்பாக, வறண்ட வட்டாரங்களுக்குப் போதிய எண்ணிக்கையுள்ள புல்டோசர்கள், டிராக்டர்கள், மிக ஆழமான கிணறுகளைத் தோண்டக்கூடிய "போரிங் செட்டுகள்" (Deep well Boring Sets) முதலியவற்றை அளிக்கவேண்டியது அவசியம் என்று இந்த மகாநாடு கருதுகிறது. மூன்றாவது திட்ட காலத்தில் இந்தத் தேவைகளை போதுமான அளவு பூர்த்தி செயவதற்கான நடைமுறை ஏற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்த மகாநாடு சிபாரிசு செய்கிறது.

மூன்ருவது தீர்மானம்—குடும்பக் கட்டுப்பாடு

1. "பஞ்சாயத்துக்களும், குடும்பக் கட்டுப்பாடும்" என்பதுபற்றி தமிழ்நாடு அரசாங்க சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையைப் பரிசீலனை செய்து, மாநில பஞ்சாயத்து மகாநாடு கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கிறது :

முதலாவதாக,

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பின்வருமாறு செய்யுமாறு சிபாரிசு செய்கிறது :

(1) கிராமத்தில் ஒவ்வொரு மாதமும், ஜனன மரணக் கணக்கை ஆராய்ந்து பார்த்து, அந்தக் கிராமத்தில் ஜனத் தொகை வளர்ச்சியைப்பற்றி சரியானதும், முழுமையானதுமான தகவல்கள் கிடைக்க வழி கோலுதல்.

(2) கிராமத்தில் அல்லது நகரப் பஞ்சாயத்துக்களில் உள்ள எல்லாக் குடும்பங்களும், பஞ்சாயத்து யூனியனுல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாட்டுக்கான முறைகளைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும். குறிப்பாக, குழந்தை பெறுவதற்கு முன்னே பின்னே, மூன்று மாதங்களுக்குள்ளாக, ஒவ்வொரு தாயும் குடும்பக் கட்டுப்பாட்டுக்கான முறைகளைத் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய வேண்டும்.

(3) குடும்பங்கள் கட்டுக்கு மீறிப் போவதை நிறுத்த வேண்டும். அளவாகவுள்ள குடும்ப வழக்கத்தை மேற் கொண்டு ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒவ்வொரு குடும்பமும் உதவும்படிச் செய்ய வேண்டும்.

(4) குடும்பத்தை அளவோடு வைத்துக்கொள்ள அறுவை சிகிச்சை முறை ஆபத்தற்றது என்பதைப் பெற்ருேர்கள் உணரும்படிச் செய்து, அறுவை முறை சிகிச்சை செய்துகொள்வோரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

இரண்டாவதாக,

ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கீழ்க்கண்டவைகளைச் சிபாரிசு செய்கிறது :

(i) ஒவ்வொரு வட்டாரத்திலும் குடும்பத் திட்டத்தைப்பற்றி, முறையான பயிற்சி அளிக்க பஞ்சாயத்து யூனியன் முற்பட வேண்டுமென்று சிபார்சு செய்கிறது. (ii) மேலும், எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் அளவான குடும்பத் திட்ட முறை எந்த அளவுக்கு முன்னேற்றம் காட்டியுள்ளது என்பதை, தொடர்ந்து பரிசீலனை நடத்துவதோடு, இந்த வேலைக்கு எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் எடுக்கப்படும் முயற்சிகளை ஒருமைப்படுத்தி வழிகாட்ட வேண்டும்.

மாநில பஞ்சாயத்து மகாநாட்டை முன்னிட்டு, திரு ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் முதல் அமைச்சர் திரு காமராஜ் அவர்களுக்கு அனுப்பியிருந்த செய்தி:—

"மாநில பஞ்சாயத்து மகாநாட்டில் கலந்து கொள்ள அழைப்பு அனுப்பியதற்கு நன்றி. நான் அந்த மகாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை மிகவும் உண்டு. ஆனல் முன் கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட வேலைகளின் காரணமாக, என்னல் கலந்துகொள்ள இயலவில்லை. பிரதம மந்திரி அவர்களே அங்கு பிரசன்னமாயிருக்கும் பொழுது, நான் அதிகமாகச் சொல்வது, தேவையற்றதாகும் ; மகாநாடு முழு வெற்றிபெற, வாழ்த்துகிறேன். மகாத்மா காந்திஜியின் பிறந்த தினத்தை இப்பொழுது தான் நாம் நாடெங்கிலும் கொண்டாடிக்கொண்டிருக்கிருேம். அந்த மாபெரும் தலைவர் கனவு கண்ட உண்மையான ஜன நாயக ஆட்சி அமைப்பினை உருவாக்கும் ஆரம்ப அடித்தளமாக பஞ்சாயத்துக்கள் அமை கின்றன. மக்களிடம் அதிகாரம் குடிகொண்டிருப்பதோடு, அந்த அதிகாரத்தைத் திறமையான முறையிலே, குடிமக்கள் செலுத்துவார்கள் என்பதே காந்திஜியின் தீர்க்க தரிசனம். நாட்டின் மற்றப்பகுதிகளை யெல்லாம் விட, தமிழ்நாடு, பாரதத்தின் பழம் பெரும் பண்பாட்டினையும், ஆத்மீக தர்மத்தையும் ஒருமைப் பாட்டுணர்ச்சியுடன் போற்றிப் பாதுகாத்து வந்திருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு இந்தத் துறையிலே ஆக்க வேலையினைத் துவக்கிவைத்து, திறம்பட நடத்தும் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்".

'கிராமங்களின் பலமே இந்தியாவின் பலம்'

'நவ பாரதத்தின் நான்கு தேவைகள்'

"வறுமை ஒழிக்கும் புரட்சித் திட்டம்—பஞ்சாயத்து ஆட்சி"

மாநில பஞ்சாயத்து மகாநாட்டில் பிரதம மந்திரி ஸ்ரீ நேரு அவர்களின் துவக்கவுரை—

"இந்தப் பஞ்சாயத்து மகாநாட்டில் கலந்து கொள்வது பற்றி நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பஞ்சாயத்து ராஜ்ய சீரமைப்பு ஒரு மாபெரும் சாதனையாகும். இது ஒரு புரட்சிகரமான மாறுதல் என்று நான் கருதுகிறேன். இதனால் கிராம சமுதாய அமைப்பே புரட்சிகரமான முறையில் மாறியுள்ளது. சுதந்திரம் அடைந்த பிறகு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை எப்படி உயர்த்துவது, எல்லோருக்கும் வேலை வாய்ப்புக்களை தேடிக்கொடுப்பது எப்படி என்பன பற்றியெல்லாம் சிந்தித்து அதற்காக ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி, பெரும் வளர்ச்சி அடைந்திருக்கிறோம்.

சமுதாய நலத் திட்டம்

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால், 1952-ம் ஆண்டு காந்தி ஜெயந்தியன்று சமுதாய நல அபிவிருத்தித் திட்டம் இந்த நாட்டில் துவக்கப்பட்டது. அது முதல், இந்தத் திட்டம் நன்றாகப் பரவி இந்தியா முழுவதும் பரப்பப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணம் என்ன? அதன் அடிப்படை அம்சங்கள் என்ன? என்பதைப் பற்றியெல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம் நாட்டில் 80 சத வீதம் மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும். அவர்களுடைய வாழ்விலே வளம் காண வேண்டும். கிராமங்கள் வளர்ச்சி பெற்று, கிராம மக்கள் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகவே, சமுதாய நலத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கடந்த ஒன்பது ஆண்டுகளில் இந்தத் திட்டமானது நல்ல பயனை அளித்திருக்கிறது. விவசாயம், கல்வி, போக்குவரத்து முதலிய பல துறைகளில் நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கிராம மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. அவர்கள் எந்தக் காரியத்திற்கும் பிறரை நாடுகின்ற அவல நிலை மாறி, தன்னம்பிக்கையுடனும், மனத்திண்மையுடனும் உழைத்து வாழ்க்கை நடத்த வழி ஏற்பட்டுள்ளது.

ஆட்சி முறை மாறுதல்

அந்நிய ஆட்சிக்கும் சுதந்திர ஆட்சிக்குமுள்ள அடிப்படை வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்நிய ஆட்சி வேறு, சுதந்திர ஆட்சி வேறு. அடிப்படையிலேயே இரண்டுக்கும் பெருத்த முரண்பாடு உள்ளது. அந்நிய ஆட்சி இந்த நாட்டில் நடந்துகொண்டிருந்த காலத்தில் மக்கள் பொறுப்பு ஏற்கவில்லை. அதைப்பற்றிய அக்கரையும் அவர்களுக்குச் சிறிதும் இருந்ததில்லை. அரசாங்க அதிகாரிகளே மக்களுக்காக எல்லாவற்றையும் செய்து வந்தனர். பிரிட்டிஷ் ஆட்சி மறைந்த பிறகு, நிலைமை ரொம்பவும் மாறி விட்டிருக்கிறது. ஆட்சி நிர்வாக அமைப்பில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அதிகாரிகள் இன்னும் இருக்கின்றனர். ஆனால் அவர்கள் நம்மவர்கள்; நம்மோடு சேர்ந்தவர்கள். அந்நிய ஆட்சி நடந்து கொண்டிருந்த காலத்தில், டில்லியிலிருந்து வைசிராய், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஆட்சி நடத்தினார். இப்பொழுது டில்லியில் பாராளுமன்றமும் மாநிலங்களில் சட்ட மன்றங்களும் இருந்து மக்கள் பிரதிநிதிகள் ஆட்சி நடத்துகின்றனர். நிர்வாக யந்திரம் இருந்த போதிலும் அதன் அமைப்பில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இந்த மாறுதல் நாட்டின் வளர்ச்சியுடன் இணைந்து வந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சட்டம், அமைதி, ஒழுங்கை நிலை நாட்டுவது தான் ஆட்சியாளர்களின் முக்கியப் பொறுப்பாக இருந்தது. தற்கால முறையில் உள்ள பல அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி அப்பொழுது எண்ணமே இல்லை. ஆங்காங்கு சிற்சில சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் கல்வித் திட்டங்கள், முதலியன அப்பொழுதும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவையெல்லாம் அபிவிருத்தித் திட்டங்களாக இல்லை. அபிவிருத்தித் திட்டம் என்பது முன்னிலையில் இல்லை.

அந்நிய ஆட்சியை ஒரு போலீஸ் அரசாங்கம் என்று கூடக் கூறலாம். இதைக் குறையாகச் சொல்லவில்லை. நிர்வாகம் நன்றாகத்தான் நடந்தது. போலீஸ் நிர்வாகத்தில், வெளிநாட்டு, உள்நாட்டு பாதுகாப்பு சரியாகத் தான் இருந்தது. அந்த அளவுக்குதான் ஆட்சி நடத்தப்பட்டது.

மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும்

இப்பொழுது சுதந்திரம் கிடைத்த பிறகு நமது சிந்தனையும் கவனமும் இதர பிரச்சினைகளில் திரும்பி உள்ளது. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே நம்முன் உள்ள முக்கிய பிரச்னையாக உள்ளது. நமது நாடு ஏழை நாடு. சமுதாய, பொருளாதார வாழ்வும் அவ்வளவு சீரானதாக இல்லை. இந்த நிலையை மாற்றி, மக்கள் நலனுக்காகப் பாடுபடுகின்ற ஒரு க்ஷேம நல ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது நமது குறிக்கோளாக உள்ளது. சோஷலிஸ சமுதாய அமைப்பை ஏற்படுத்த நாம் உறுதி கொண்டிருக்கிறோம். ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வினை நம்மிடையே இருந்து நீக்க நாம் பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளோம். இதன் மூலம் நமக்குள்ள எல்லா பிரச்சினைகளும் சமா

ளிக்கப்பட்டு விடும் என்று பொருள் அல்ல; அது சாத்தியமல்ல; அவசியமும் அல்ல. ஆனல் எல்லோருக்கும் சமமான வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும் என்பது தான் என் கருத்து. நமது நாட்டில் பலருக்கு சம சந்தர்ப்பம் கிடையாது. குழந்தைகள் கல்வி பயிலக்கூட சமமான வாய்ப்பு இல்லே. ஆனல் கடந்த 14 வருடங்களில் நாம் வெகுவாக முன்னேறியுள்ளோம், ஆயினும் நமது லட்சியத்தை அடையும் பயணத்தில் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியிருக்கிறது. நாம் சுதந்திரம் அடைந்த பிறகு, பல சமூகச் சீர்திருத்தங்களும், மாறுதல்களும் செய்துள்ளோம். அத்துடன் மிக அவசியமான, சட்டம், அமைதி, சமாதானம் ஆகியவற்றை நிலே நாட்டுவதையும் கவனித்து வந்துள்ளோம். சுதந்திர அரசாங்கத்தின் கடமை என்ன? டில்லியில் மத்திய அரசு இருக்கிறது. அதே போல இங்கு மாநில அரசாங்கம் இருக்கிறது. மந்திரிகளும் இருக்கின்றனர். பல அதிகாரிகளும் இருக்கின்றனர். இங்கு பஞ்சாயத்து பிரதிநிதிகளான நீங்கள் நாட்டு ஆட்சியுடன் நெருங்கிய உறவு கொண்டிருக்கிறீர்கள். விரிவான முறையில் இதைப் பரிசீலித்தால், நாட்டின் ஆட்சியில், போலீஸ் கான்ஸ்டேபிளுக்கும், குமாஸ்தாவுக்கும் பங்கு இருக்கிறது. தலைமையில் இருந்து உத்தரவு பிறப்பித்தால் மட்டும் போதாது. மக்களுக்கு ஆட்சியில் பங்கு இருக்கவேண்டும். மக்களே நேரடிப் பங்கு கொண்டு நாட்டுக்கும் மக்களுக்கும் எது நல்லது என்று சிந்தித்து அதை அமுல் நடத்தவேண்டும். இந்த முறையில் ஆட்சி நடக்கவேண்டும். நான் யார்? நீங்கள் யார்? நான் மக்கள் பிரதிநிதியாக இருந்து பாராளுமன்றத்தில் பணியாற்றுகிறேன். நீங்களும் மக்கள் பிரதிநிதியாக இருந்து கிராமத்தில் பணியாற்றுகிறீர்கள். முற்காலத்தில் அரசர்கள் இருந்தார்கள். நல்ல மன்னர்களும் உண்டு; கொடுங்கோல் மன்னர்களும் உண்டு. பிறகு பிரிட்டிஷ் ஆட்சி வந்தது. அது வைசிராய் ஆட்சி. அதற்குப் பிறகு இப்பொழுது மக்கள் ஆட்சி. இப்பொழுது அந்தக் கருத்தை மேலும் விரிவுபடுத்தி பஞ்சாயத்து ஆட்சி ஏற்பட்டுள்ளது. கிராம மக்கள் நாட்டு ஆட்சியுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர்.

பொருளாதார சுதந்திரம் மிகவும் முக்கியம்

பஞ்சாயத்துக்கள் திட்டங்கள் வகுத்து மக்கள் நன்மையைக் கருதி அவற்றை அமுல் செய்கின்றன. குறைகளேயும் போக்குகின்றன. இது ஜனநாயக ஆட்சியை மக்கள் வரை கொண்டு செல்வதாகும். பொருளாதார சுதந்திரம் அடையும் பொழுது தான் ஜனநாயக ஆட்சி முழு நிலேமை பெறுகிறது. இந்தப் பொருளாதார சுதந்திரத்தைப் பெற நாம் முற்பட வேண்டும். அந்தப் பெரும் பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. மக்களேத் தன்னம்பிக்கை உடையவர்களாகச் செய்யவேண்டும். திறமையும் ஆற்றலும் ஏற்படச்செய்யவேண்டும். இந்தியாவில் நாம் செய்யவேண்டிய காரியங்களில் பல இருக்கின்றன. ஆயினும் எல்லாவற்றையும் விட ஒன்று முக்கியமாகச் செய்யவேண்டும். நமது ஆண்கள், பெண்கள் தரம் உயர்ந்து அவர்கள் திறமையும் தன்னம்பிக்கையும் மிக்கவர்களாக விளங்க வேண்டும். நாட்டின் பலம் அதன் ஆண், பெண் எண்ணிக்கையில் இல்லே. அவர்களுடைய தரத்தில் அமைந்திருக்கிறது. கல்வியைப் பரப்பி மக்களேத் தன்னம்பிக்கையுடன் நிகழச் செய்வதற்கான அதிகாரமும், பொறுப்பும் பஞ்சாயத்துக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. முற்காலத்தில் இந்தியா பலமாக இருந்தது. ஏனென்ருல் கிராமங்கள் வலுவாகவும், பலமாகவும் இருந்தது. கிராம சமுதாயம் நன்ருக அமைக்கப்பட்டிருந்தது. கிராம பலம் குறைந்தால், இந்தியாவின் பலம் குறையும். அஸ்திவாரமே பலமின்றிப் போய்விடும்.

சக்தி நிறைந்த ஒரு சமூகத்தை நிர்மாணிப்பதுடன், தொழில் நுட்பத் திறனேயும், நவீன விஞ்ஞானத்தையும் நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். வறுமை, வேலேயின்மை, நோய், எழுத்தறியாமை, முதலியவை நம்மை பலவீனப்படுத்துகின்றன. இவைகளே எதிர்த்து நாம் போராட்டம் நடத்தி இதில் வெற்றி காணவேண்டும். இவற்றின்மேல் போர் தொடுப்பது நம் முன்னுள்ளவேலே. இது மாபெரும் போர். நீங்கள் இதைப் பற்றி நன்ருகச் சிந்திக்க வேண்டும்.

உலகத்தில் மகத்தான மாறுதல்கள் நடக்கும் காலத்தில் இந்தியா இத்தகைய போரில் ஈடுபட்டு இருக்கிறது. நாம் சக்தியுடன் இல்லாவிட்டால் நமது சுதந்திரத்தை இழந்துவிடக்கூடும். மீண்டும் வறுமை மிக்க, பலவீனமான மக்களாக ஆகிவிடுவோம். இப்படி நேருவதற்கு அனுமதிக்கப்போவதில்லே. ஆகையால் ஒவ்வொரு விதத்திலும் நம்மை நாமே பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நம் மக்கள் நிலே உயர்வதற்கு மட்டுமின்றி, வெளி நாட்டிலிருந்து தோன்றக்கூடிய எந்த அபாயத்தையும் சமாளிக்கவும் சக்தி உடையவர்களாக ஆக்கிக்கொள்ளவேண்டும்.

நாட்டின் ஒற்றுமையில் கவ்னம் செலுத்தவேண்டும்

நாட்டின் ஒற்றுமையிலும், பஞ்சாயத்துத் தலேவர்கள் கவனம் செலுத்த வேண்டும். இதை நாம் மறந்து விட்டால், நம்மை இழந்தவராவோம். நாட்டின் ஒற்றுமையை மட்டுமின்றி, நாட்டுப்புற சமூகத்தின் ஒற்றுமையிலும் நினேவு வேண்டும். ஒவ்வொருவரும் இந்தியாவின் பிரஜை என்ற வகையில் எல்லா மதத்தினரையும் நன்ருக நடத்தவேண்டும். பஞ்சாயத்து நிறுவனங்கள் இத்தகைய ஒற்றுமை உணர்வினே உருவாக்குவதில் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். எந்த ஜாதியும், மற்ற ஜாதியை நசுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தியாவுக்கு ஜாதி பெரும் தீங்கினே இழைத்துவிட்டு இருக்கிறது. நவீன சகாப்தத்தில் ஜாதிக்கு இடமே கிடையாது. அது ஒழிய வேண்டியதே. பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்துத் தலேவர்களுக்கும்

ஏராளமான வேலை இருக்கிறது. ஒவ்வொரு சிறுவன் சிறுமிக்கும் கல்வி கிடைக்க ஏற்பாடு; விவசாய உற்பத்தி அதிகரிப்பு; தொழில் வளர்ச்சி, எல்லாம் இருக்கின்றன. பெரும் தொழில்களை அரசாங்கம் நடத்தலாம். ஆனால் நடுத்தர, சிறு கிராமத் தொழில்களை நீங்கள் கவனிக்கலாம். உலகத்திலேயே கூட்டுறவு முறைதான் சிறந்தது என்று ஏற்கப்பட்டு இருக்கிறது. அந்த முறை மூலம் நாம் மிகுந்த வளர்ச்சி அடையலாம். நில உடைமை குறைவாக இருக்கும் நிலையில் கூட்டுறவு முறையில் விவசாய வளர்ச்சி நல்லபடி ஏற்பட வசதி இருக்கிறது.

"விஞ்ஞானத்தையும், தொழில் நுட்ப அறிவினையும் பயன்படுத்தி முன்னேறுவோம்"

ஐரோப்பிய நாடுகள் எல்லாம் முன்னேற்றம் அடைந்து கொண்டிருக்கும்பொழுது நம்முடைய நாடு மட்டும் ஏன் பின்தங்கிய நிலையில் உள்ளது ? இதற்குக் காரணம் வேறு ஒன்றுமில்லை. உற்பத்தியில் பழைய முறைகளையே நாம் விடாமல் பிடித்துக்கொண்டிருக்கிறோம். காரியங்களைப் பழைய முறைகளிலேயே செய்கிறோம். நவீன விஞ்ஞானத்தையும், நவீன தொழில் நுட்ப அறிவினையும் நாம் பயன் படுத்திக்கொள்வதில்லை. அந்த நாடுகளிலெல்லாம் பெரிய பெரிய இயந்திரங்கள் இந்த வேலைகளை வேகமாகவும், திறமையாகவும் செய்து முடிக்கின்றன. அதனால் உற்பத்தி பெருகுகிறது. அந்த நாட்டில் உள்ள மக்கள் சிறந்த நவீன யந்திரங்களை உபயோகப்படுத்தி, விவசாய உற்பத்தியை மேலும் பெருக்கிக்கொண்டார்கள். பெரிய பெரிய யந்திரங்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிடவில்லை. கலப்பைகள் போன்ற சிறு சிறு விஷயங்களைப் பற்றியும் சொல்கிறேன். இவைகளில் நவீனமுறைகளைக் கையாண்டு, விவசாயத்திலும், தொழில் துறையிலும் பெருத்த வளர்ச்சி அடையப் பெற்றுள்ளது. ஆகவே நவீன விஞ்ஞான முறைகளையும், நவீன தொழில் நுட்பங்களைப்பற்றியும் நாம் தெரிந்து கொள்வதும், மேலும் உற்பத்தியைப் பெருக்க இந்த இயந்திரங்களை உபயோகப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. புதிய முறைகள் அநேகம் இருக்கின்றன. ரசாயன உரங்களை எப்படி உபயோகப் படுத்த வேண்டும் என்பது போன்ற பல புதிய முறைகள் உள்ளன. விஞ்ஞானத்திலிருந்தும், தொழில் நுட்பங்களிலிருந்தும் புது வழி முறைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இதை நாம் செய்யாவிட்டால், நாம் பின் தங்கிப்போய்விடுவோம். நீராவியின் சக்தியைப்பற்றி எல்லோருக்கும் தெரியும். ஆங்கிலேயர் நீராவியைக் கண்டு பிடித்தனர். புகைவண்டி சாதாரண நீராவியினால் இயக்கப்படுகிறது. அதற்கப்புறம் மின்சாரம். மின்சாரம் என்றால் என்ன ? அது இயற்கையின் பல சக்திகளில் ஒன்று. சில சமயங்களில் அதை மேகங்களிலும், இடி இடிப்பதிலும் காண்கிறோம். இது சாதாரணமானது. இதை ஒருவரும் உபயோகப்படுத்தாமல் இருந்தார்கள். ஆனால் மெல்ல மெல்ல மக்கள் மின் சக்தியை உபயோகிக்கத் தொடங்கி, இப்பொழுது மின்சார சக்தியினாலும், நீராவியினாலும் பெரிய பெரிய தொழிற்சாலைகள் நடக்கின்றன. ரயில்கள் ஓடுகின்றன. கடலில் கப்பல்கள் ஓடுகின்றன. நீராவி ஒரு சக்தி. மின்சாரம் ஒரு சக்தி. இப்பொழுது அணுசக்தி. இவற்றையெல்லாம் நாம் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். இப்பொழுது நம்மிடையே உள்ள மிகப் பெரிய சக்தி மின்சாரம். ஆற்றுப் பள்ளத்தாக்கு திட்டங்களிலிருந்தும், நீர் வீழ்ச்சிகளிலிருந்தும் பல வகைகளில் மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்கிறோம். நேற்று நான் கோவை மாவட்டத்தில், கேரள மாநில எல்லையில் உள்ள பரம்பிக்குளத்திற்கு, பெரிய நீர்ப்பாசனத் திட்டத்தையும், மின்சார சக்தியை உற்பத்தியினை துவக்கி வைப்பதற்காக சென்றிருந்தேன். இந்தியா பூராவும் மின்சக்தி உற்பத்தி செய்யப் படுகிறது. உங்கள் கிராமத்திற்கு மின்சாரம் வந்தால், உங்கள் கிராமமே புத்துணர்ச்சி பெருகிறது. ஒருவருக்கு பல விஷயங்கள் தேவையாக இருக்கின்றன. நாம் பல காரியங்களைச் செய்கிறோம். ஆனால் சமீபகாலத்தில், நான் நான்கு விஷயங்களைப்பற்றி முக்கியமாக எடுத்துச் சொல்லிவருகிறேன். அவற்றை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். முதலில், கல்வி-ஆரம்பக் கல்வி முதல் தொழில் கல்விவரை; இரண்டாவது, சக்தியைப் பெருக்குதல்–மின்சார சக்தி–மற்ற சக்திகளைப் பெருக்குதல்; மூன்றுவது-பஞ்சாயத்து ஆட்சி, இதனுள் விவசாயம் அடங்கும்; கடைசியாக, ஆனால், மிகவும் முக்கியமாக குறிப்பிட ஆசைப்படுவது கூட்டுறவு.

இந்த நான்கினுள்ளும் நாம் செய்யவேண்டிய எல்லாம் அடங்கும்.

நல் வாழ்வுக்கு நான்கு வழிகள்

இப்பொழுது உங்களுடைய கடமையை நான்கு பிரிவுகளாகக் கூற விரும்புகிறேன். 1. கல்வி, 2. சக்தி (மின்சாரம் அல்லது எந்த வகையானாலும் சரி), 3. பஞ்சாயத்து ஆட்சி. இதில் விவசாயம், கைத்தொழில் எல்லாம் அடங்கும். 4. கூட்டுறவு இந்த நான்கு துறைகளிலும் நீங்கள் வெற்றியடைந்தால், மாபெரும் போரில் நீங்கள் வெற்றியடைந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவீர்கள். உங்களுக்கு மகத்தான பொறுப்பு இருக்கிறது. இங்கு நிறைய பெண்கள் வந்திருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். இது போதாது. இன்னும் நிறைய பெண்கள் பொறுப்பு ஏற்று, பங்கு கொள்ளவேண்டும். இது சமுதாய சீர்திருத்த வேலை. ஆகவே இதில் ஆண்களை விட பெண்களுக்கே அதிக பங்கும் பொறுப்பும் உள்ளது. உங்களுடைய பொறுப்புக்களை நிறைவேற்றி வைப்பதில் முழு வெற்றியை அடைய வேண்டுமென்று உங்கள் எல்லோருக்கும் ஆசி கூறுகிறேன்.

[பிரதம மந்திரியின் சொற்பொழிவினை மாநில உள்துறை அமைச்சர் திரு. பக்தவத்ஸலம் தமிழில் மொழிபெயர்த்துக் கூறினார்.)

"பிறந்த பொன்னாட்டை வளமான நாடாக்குவோம்"

மாநில பஞ்சாயத்து மகாநாட்டில், சென்னை கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி அவர்களின் தலைமை உரை

நண்பர்களே,

இன்று துவக்கப்படுகிற பஞ்சாயத்து மகாநாட்டில், பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாகிய உங்களையெல்லாம் வரவேற்கின்ற வாய்ப்பு அளிக்கப்பட்டதை, மிகப் பெரிய கௌரவமாக நான் கருதுகிறேன். சென்னை நகரத்தில் அவருக்குள்ள மிகவும் அதிகமான வேலைகளுக்கிடையே, இந்த மகா நாட்டைத் துவக்கி வைக்க, நமது அன்புக்குரிய பிரதமர் ஒத்துக்கொண்டது, நம்மிடையே அவருக்குள்ள அன்பைக் காட்டுகிறது. இந்த மாநில பஞ்சாயத்து மாநாடு நடைபெறுவது, சரித்திரத்தில் குறிக்கத்தக்க ஒரு சம்பவமாகும்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் நோக்கம்

நாட்டின் எல்லாத் துறைகளிலும் ஒரு சமநிலையான அபிவிருத்தியை அடையவும், சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதின் மூலம், ஒவ்வொருவருக்கும் வளமான வாழ்வினை அளிக்கவும் வேண்டி, தொடர்ந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுதந்திரம் கிடைத்ததிலிருந்து, இந்தத் திட்டங்களின் மூலமாக, புதியதொரு இந்தியாவை உருவாக்குகின்ற இந்த வேலை, நாட்டின் மிகப் பெரிய வேலையாக அமைந்துவிட்டது. நம்முடைய திட்டமிட்ட அபிவிருத்தியின் அடிப்படை நோக்கங்கள் இரண்டு : வெகு வேகமாகப் பெருகி வருவதும், தொழில் நுட்ப முன்னேற்றமுள்ளதுமான ஒரு பொருளாதார அமைப்பினை, ஜனநாயக முறைகளில் உருவாக்குதல், ஒவ்வொரு பிரஜைக்கும் சமமான வாய்ப்புக்களை அளிக்கின்ற நீதியை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமுதாய அமைப்பினை தோற்றுவித்தல், ஆகிய இந்த இரண்டுமே இந்த முக்கியமான நோக்கங்களாகும். மனித முயற்சிகளினால் இயக்கப்படுகின்ற ஒவ்வொரு துறையிலும், இன்றைக்கு ஒரு பெரிய புரட்சி உருவாகிக்கொண்டுவருகிறது. இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும், அந்தப் புரட்சியில் பங்கு கொண்டோ, அல்லது அதை உணர்ந்து கவனிக்கின்ற ஓர் சாட்சியாகவோ திகழ்கிறார்.

பெரிய தொழிற்சாலைகளை அமைத்தல், பெரிய அளவில் திட்டங்களைத் தீட்டி நடத்துதல் என்பதோடு மட்டுமல்லாமல், உணவு உற்பத்திக்கும் மிக முக்கியமான இடம் அளிக்கப்பெற்றுள்ளது. உணவு விஷயத்தில் தன்னிறைவு நிலையை அடைவதற்காக மட்டுமல்லாமல், இயற்கையின் ஒத்துழைப்பு இல்லாமல்போகின்ற கஷ்ட காலங்களிலும் நம்முடைய தேவைகளைச் சமாளிக்கவும் வேண்டி, உணவு உற்பத்தியில் கவனம் செலுத்தப்படுகிறது.

அதிகாரப் பரவல் முறை

உணவு உற்பத்தியில், நம்முடைய இலக்குகள் இரண்டு : ஒன்று பெருகிவரும் மக்கள் எண்ணிக்கைக்கேற்ப உணவு உற்பத்தியைப் பெருக்குதல்; அதிகமான உணவுடன் நல்ல தரமான உணவு வேண்டும் என்று கோரிக்கை. அதிகமாகிக்கொண்டே வருகிற மக்களின் தேவையையும் சமாளித்தல். உணவு உற்பத்தியில் நம்முடைய இலக்குகளை அடைதல், மக்கள் எண்ணிக்கை அதிவேகமாக பெருகி வருவதைக் கட்டுப்படுத்துதல் ஆகிய விஷயங்களில், விவசாயிகளின் உள்ளுணர்வைத் தூண்டுவதும், அவர்களுடைய ஒப்புதலையும், முயற்சியையும் கொண்டுள்ள ஒத்துழைப்பைப் பெறுவதும், மிகவும் அவசியம். சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்துடன் ஒருங்கிணைந்த முறையில், ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் செய்யப்படுகிற நம்முடைய அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் எல்லாம், பொதுமக்கள் பங்கு கொள்கின்ற முறையில், அந்த மக்கள் சக்தியைத் திரட்டுவதும், மிகவும் அவசியமாகிறது. தல நிர்வாக ஆட்சி அமைப்பு முறையில் மாறுதலை ஏற்படுத்துவதுடன், அதற்கான கடமைகளையும், ஆதாரங்களையும் ஒப்படைப்பதின் மூலம்தான், இந்த இலட்சியத்தை அடைய முடியும் என்ற உண்மையானது, இப்பொழுது அதிகமாக உணரப்பட்டு வருகிறது. இவ்வாறாக, ஜனநாயக முறையில் படிப்படியான அதிகாரப் பரவல் முறை என்பது, உருவம் பெறத் தொடங்கிவிட்டது. தல நிர்வாக அமைப்பு முறையில், பஞ்சாயத்து ஒரு சுயாட்சி உறுப்பாகத் திகழத் தொடங்கிவிட்டது. தேசிய ஐந்தாண்டுத் திட்டத்தின் இன்றியமையாத அம்சங்களை செயல்படுத்துவதில், இந்தப் பஞ்சாயத்துக்கள் மிக முக்கியமான பங்கினைப் பெறும்.

நமது அரசியல் சட்டத்தின் 40-வது விதியில் கூறப்பட்டுள்ளதை, நடைமுறையில் நிறைவேற்றும் நோக்கத்தோடு, 1950-ம் ஆண்டு சென்னை கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் நிறைவேறியது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் 40-வது விதி கூறுவதாவது :—

"மாநிலம் பூராவும் பஞ்சாயத்துக்கள் அமைக்க, அவை சுய ஆட்சியின் உறுப்புக்களாக வேலை செய்வதற்கு அவசியமான சக்திகளையும் அதிகாரங்களையும் அளிக்கவும் வேண்டும்."

பஞ்சாயத்து வளர்ச்சி—வரலாற்றுக் கண்ணோட்டம்

மாநிலம் முழுவதும் பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்துவதற்காகவும், அவைகளின் நிர்வாகத் திறனை உயர்த்துவதற்காகவும், தமிழ் நாட்டின் உள்ளாட்சி அமைப்பு முறையின் எதிர்காலத்தைப்பற்றி, மேலும் மேலும் விவாதிக்கப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டது. கிராமப் பஞ்சாயத்தின்

தனித்தன்மையும், கிராம மக்களிடையே அதற்குள்ள உயிரூட்டமுள்ள தொடர்பும், தொடர்ந்து அப்படியே இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். அதே சமயத்தில், தனிப்பட்ட பஞ்சாயத்துக்களால் செயலாற்ற முடியாத கடமைகளையும், பொறுப்புக்களையும் ஏற்றுச் செய லாற்றவும், மற்ற சேவைகளைத் திறமையான முறையில் அளிக்கவும் கூடிய, மற்றொரு பொதுவான அமைப்பு முறையானது, பெரிய பிரதேச அளவுக்கு என்று அமைக் கப்படவேண்டும் என்பதின் அவசியம் உணரப்பட்டது.

1957-ம் ஆண்டில், இந்த விஷயத்தைப்பற்றி பரிசீலனை செய்ய, ஒரு மந்திரி சபைக் குழு அமைக்கப்பட்டது. பல பெரிய மாறுதல்களில் ஒன்றாக, அபிவிருத்தி வட்டார அளவில் பஞ்சாயத்து யூனியன்களை நிறுவுவது என்று, இந்தக் குழு சிபார்சு செய்தது. அவ்வமயமே, திட்டக் கமிஷனால் திட்ட வேலைகளுக்கான குழு ஒன்று நியமிக்கப் பட்டது. அதிகாரப் பரவல் முறை எப்படிப்பட்ட வகையில் அமுலுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பதுபற்றிய விஷயங்களையெல்லாம், இந்தக் குழு ஆராய்ந்தது. இந்த மாநிலத்தில், தல நிர்வாக அமைப்பு, எதிர்காலத்தில் எப்படி உருவாக வேண்டும் என்பதுபற்றி, தான் எடுத்த முடிவுகளைப்பற்றி இக்குழு, மாநில அரசாங்கத்தினிடம் கலந்தாலோசித்தது. கிராமப் புறங்களில், அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமான எல்லா அம்சங்களையும் பொறுப் பேற்றுக்கொள்கிற, வேகமாக இயங்கக்கூடிய ஜனநாயக நிறுவனம் வேண்டும் என்பதின் அவசியம், வெகுவாக உணரப்பட்டது. திட்டக் கமிஷனால் நியமிக்கப்பட்ட இந்த ஆய்வுக் குழுவின் முடிவுகளும், மந்திரி சபைக் குழுவின் முடிவுகளும், பெருவாரியான முறையில் ஒத்திருந்தன. மாவட்டக் கழகங்கள் கலைக்கப்படவேண்டும், வட்டார அள வில் பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்படவேண்டும் என்ற ஆலோசனைகள், சட்ட சபை முன்னும், சட்ட மன்றத்தின் முன்னும் வைக்கப்பட்ட, திருத்திய வெள்ளை அறிக்கை ஒன்றில் காணப்பட்டன. எல்லாக் கட்சிகளுக் கும், போதிய பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில், சட்டப் பேரவையின் இரு மன்றங்களையும் சேர்ந்த ஒரு கூட்டுக்குழு, சட்டப் பேரவையினால் அமைக்கப்பெற்றது. விரிவான ஆலோசனைகளுக்குப் பிறகு, செய்யப்பட்ட ஆலோசனைகளைக் கொண்ட ஒரு வரைவு மசோதா, குழு வினால் ஒப்புக்கொள்ளப்பட்டது. எல்லா அரசியல் கட்சிகளின் தீவிர ஆதரவுடன், இந்த மசோதா சட்டப் பேரவையின் இரு மன்றங்களிலும் நிறைவேற்றப்பட்டது. இப்படியாக, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டம் தோன்றியது. 1958-ல், தேசிய அபிவிருத்தி மன்றத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்ட வேலைகள் சம்பந்தப்பட்ட குழுவின் சிபார்சுகளின் விளைவினால், ஏற் பட்ட புதிய கருத்துணர்வுகளின் அடிப்படையில், பஞ்சா யத்து நிர்வாகத்தை அமுலாக்கும் சட்டம், சென்னை மாநிலத்தில்தான் முதன் முதலாக நிறைவேறியது என் பதை, இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மரபு அடிப்படை

தமிழ்நாட்டின் பஞ்சாயத்து நிர்வாக வரலாற்றின், மிக நீண்ட மரபினைப் பற்றி, நான் குறிப்பிட்டேன். ஆனால், 1958-ம் வருடத்திய புதிய சட்டத்தின்கீழ் அமைக்கப் பெற்றுள்ள பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன் களும், சமீபகாலம் வரையில் இருந்துவந்த பஞ்சாயத்துக் கள், தாலூகா போர்டுகள், மாவட்ட போர்டுகளிலிருந்து கருத்து அடிப்படையில், மிகவும் வேறுபட்டுள்ளன என்பது கவனிக்கப்படவேண்டும். தல நிர்வாகக் கடமைகள் என்று பொதுவாக கூறப்படும் கிராமத் துப்புரவு வேலைகள் , தெரு விளக்குப் போடுதல், கிராமப் போக்கு வரத்துக்களைப் பராமரித்தல், வடிகால், சுகாதாரம், ஆரம்பக்கல்வி போன்ற இவைகளை மட்டுமே கவனித்துக் கொள்கிற ஸ்தாபனங்களாகத்தான், இந்தப் பிரதேச ஸ்தாபனங்கள் திகழ்ந்து வந்தன. இவைகளுக்கு, ஆதா ரங்கள், நிதி வசதிகள், அதிகம் கிடையாது. குறைந்த அளவிலிருந்து நிதி ஆதாரங்களைக் கொண்டு, இவை, ஒன்றோடொன்று ஒட்டாமல், ஒரு விதத் தொடர்பு மின்றி, தன்னிச்சையாகவும், கிராமப் பஞ்சாயத்துக்கும் மாவட்டக் கழகத்திற்குமிடையே உயிரூட்டமுள்ள ஒரு தொடர்பே இல்லாத நிலையிலும், இயங்கிவந்தன. ஆனால், 1958-ம் ஆண்டு சட்டத்தின்படி தோற்றுவிக்கப் பட்டுள்ள புதிய தல நிர்வாக அமைப்பு முறையில், மாவட்டக் கழகங்களுக்கு வாரிசாக வருகின்ற பஞ்சாயத்து யூனியன், கிராமப் பஞ்சாயத்துக்களின் கூட்டுறவின் அடிப் படையில் நடைபெறுகின்ற, ஓர் ஒருங்கிணைந்த அமைப்பு முறையாகத் திகழும். யூனியனை நடத்துகின்ற, அதி காரம் பெற்றுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்றமானது, கிராமப் பஞ்சாயத்துக்களின் தலைவர்களை, உறுப்பினர் களாகக் கொண்டு இயங்குகிறது. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களுக்குமிடையே, மிக நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துகின்ற, அமைப்பு முறையில் செய் யப்பட்டுள்ள இந்த மாறுதலானது, விசேஷ முக்கியத் துவம் படைத்ததாகும். இதைவிட முக்கியமானது, நாட் டின் திட்ட அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பணிகளில், பிரதேச சுயாட்சி உறுப்புக்களாக, இந்த ஸ்தாபனங்கள் பங்கேற்றுக்கொண்டு, திறமையுடன் அந்தப் பணிகளைச் செயலாற்றி வைக்கும் வகையில், அவைகளுடைய கடமை களும், வசதிகளும், ஆதாரங்களும், வருங்காலத்தில், பயன் தரத்தக்க முறையில், மாறுதல்கள் செய்யப் பட்டிருப்பதுதான்.

முன்னேற்ற வேலையில் கிராமங்களின் பங்கு

இந்த வேலைத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகிற எல்லா முன்னேற்ற வேலைகளை உருவாக்கிச் செயல்படுத்து கின்ற, பணியினை, கிராம மக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், நமது அரசியல் சட்டத்தில் கண்டுள்ள இலட்சியங்களை அடைகின்ற பாதையில், நாடு முழுவதும் ஈடுபட்டு, தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்ற ஐந்தாண்டுத் திட்ட வேலைகளில் எல்லாம், ஒவ்வொரு கிராமமும்,

நேரடிப் பங்கினைப் பெறவேண்டுமென்றும், சமுதாய அபிவிருத்தித் திட்டம் எதிர்நோக்குகிறது. சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், பஞ்சாயத்துக்கள், ஒரு விசேஷத் தன்மையையும், முக்கியத்துவத்தையும் பெற்றுவிட்டபடியால், வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற வகையிலும், எல்லாக் கிராமங்களிலும் உள்ள பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன் இயங்குகின்ற ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக இருக்கும் வகையிலும், பஞ்சாயத்து யூனியனின் அமைப்பு முறை உருவாக்கப்பட்டுள்ளது. பஞ்சாயத்து நிர்வாகத்தின் சமஷ்டி அமைப்பில், கிராமப் பஞ்சாயத்துக்களும், நகரப் பஞ்சாயத்துக்களும் இப்பொழுது உறுப்புகளாகும்.

பஞ்சாயத்துக்களின் கடமைகளும், பொறுப்புக்களும்

பஞ்சாயத்துச் சீரமைப்பின் முக்கிய நோக்கங்களை, புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகை வலியுறுத்திக் கூறுகிறது. முதலாவதாக, தொழில் அபிவிருத்திக்கு அவசியமாக வேண்டியுள்ள, வருடா வருடம் படிப்படியாகவும் அதிகப்படியானதுமான உணவு உற்பத்தியும்' விவசாய அபிவிருத்தியும்; இரண்டாவதாக, மக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துதல், இவை எல்லாவற்றிலும் மிக முக்கியமானவையாகும். கிராமங்களில் வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருதல், கிராம மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்துதல், கிராமப்புறங்களில், கலாச்சார, பொழுதுபோக்குக்கான வசதிகளைச் செய்து தருதல் ஆகியவற்றின் மூலம், கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக' இப்படி மேற்கொள்ளப்படுகின்ற ஓர் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே, இந்த இரண்டு தேசியப் பணிகளையும் அமைத்துக்கொண்டு செயலாற்றினால்தான், இந்த இரண்டு பணிகளையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். அப்படிப்பட்ட ஒருங்கிணைந்த ஒரு வேலைத் திட்டமானது, சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தில் அமைக்கப்பட்டு, அதனுள் அடங்கியுள்ளது. அந்த வேலைத், திட்டத்தை ஒட்டி, பல்வேறு பணித் துறைகள் அமைக்கப் பட்டுள்ளன. பணிகள் செய்யப்பட்டு, கிராமப்புறங்களில் மற்ற வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்தப் பணிகள், வேலைகள், மற்ற வசதிகளைச் செய்து தருதல் ஆகிய துறைகளில், மேலும் படிப்படியாக அபிவிருத்தி காணவும், அவற்றைத் திறமையுடன் பராமரிக்கின்ற பொறுப்பினை ஏற்று நடத்தவும், திறமை படைத்த பிரதேச நிர்வாக ஸ்தாபனங்களை அமைக்க, சட்டத்தில் அதிகார பூர்வமான வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆக, இந்தப் புதிய சீர்திருத்தமானது, மரபின் அடிப்படையிலே இதுகாறும் இயங்கி வந்த ஒரு சமூகத்தை, உயிரூட்டமுள்ளதொரு சமுதாயமாக மாற்றியமைக்க முயல்கிறது. இந்த மாற்றமானது, அமைதியான முறையில், ஜனநாயக வழிகளைக் கையாண்டு செய்யப்படுவதுடன், மக்களின் முழுச் சம்மதத்துடனும் செய்யப்படும். நாட்டின் திட்ட முறையில் காணப்படும் அபிவிருத்தியில், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், நேரடியாகவும், திறமையுடனும் பங்கு கொண்டு செயலாற்றும் வகையில், உள்ளாட்சி நிர்வாகத்தை, அபிவிருத்தி நிர்வாக அமைப்புடன் ஒன்றுக்கி, இயங்கச் செய்வதின் மூலம், இந்த நிலையை உருவாக்க இச் சீர்திருத்தம் முயல்கிறது.

உணவு உற்பத்தியைப் பெருக்குதல், கிராமக் கைத் தொழில்கள் சம்பந்தமாக வேலைத் திட்டங்களை செயல்படுத்தி நடத்துதல், சாதாரண சமூகச் சேவைகளை விஸ்தரித்தல், தொடக்கக் கல்வியை பூரணமாக அமுலாக்குதல், தாய்-சேய் நலப் பணிகளை அபிவிருத்தி செய்தல், கிராமக் குடி தண்ணீரினை பாதுகாத்து வழங்குதல், கிராமச் சாலைகளை அபிவிருத்தி செய்தல், கலாச்சார, க்ஷேம நலத் துறைகளில் இது போன்ற மற்ற வேலைகளைச் செய்தல், ஆகியவைகளே, இவைகளுக்கான பொறுப்புக்களாகும். கிராம மக்களிடம் நேரடித் தொடர்பு கொண்டுள்ளதினல், பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், வட்டார அளவிலும், கிராம அளவிலும், திட்டமிட்டுச் செயல்படுத்தக் கூடிய எல்லா வேலை விவரங்களைப் பற்றி, திட்டமிட்டு அபிவிருத்தி செய்யவும் கூடிய, நிர்வாக உறுப்புக்களாக, அவை இயங்குகின்றவைகளாக உள்ளன. பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு-செலவுத் திட்டம் ஒன்று, தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வரவு-செலவுத் திட்டமானது, நிதி சம்பந்தமான கட்டுக்கோப்புள்ள அமைப்பாக, பயன்படுகிறது. இந்த வரவு-செலவுத் திட்டத்தில், பல்வேறுபட்ட திட்ட வேலைகளில் வரையறுக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள எல்லா நிதிகளும், ஒரே இடத்தில் திரட்டப்பட்டு, எல்லா வேலைத் திட்டங்களையும் வெற்றிகரமாகச் செயல்படுத்த, தேவையான பணிகளுக்கான நிதிகள், ஈட்டு மானியங்கள் ஆகியவற்றின் பங்கு விகிதாச்சாரங்களும், பிரதேச ஆதாரங்களும், குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

பஞ்சாயத்து ராஜ்யம் மலர்ந்தது

உள்ளாட்சி நிர்வாகம், அபிவிருத்தி நிர்வாகம் சம்பந்தப்பட்ட இந்த சீர்திருத்த வேலையானது, முடிவு பெற்றுவிட்டதுடன், மாநிலம் பூராவும், 12,540 பஞ்சாயத்துக்களும், 373 பஞ்சாயத்து யூனியன்களும் செயல்படத் தொடங்கியுள்ளன. தேசப் பிதாவின் கனவான பஞ்சாயத்து ராஜ்யம், இந்த மாநிலத்தில் மலரத் தொடங்கியுள்ளது. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கின்ற வேலை முடிவடைந்ததை, காந்தி ஜெயந்தியன்று, கண்டோம். சமூக, பொருளாதாரத் துறைகளில் செய்யப்படுகிற வேலைகளிலே ஈடுபட்டுள்ள கிராம மக்களிடையே, தன்னம்பிக்கை உணர்வினைப் பெருக்கவும், நாட்டின் நலனுக்காக மேற்கொள்ளப்படுகிற எல்லா நடவடிக்கைகளிலும், அவர்கள் பங்கு கொண்டு

(31-ம் பக்கம் பார்க்க)

" கிராமங்களுக்கு, தன்னம்பிக்கையை ஊட்டும் இயக்கமே புதிய பஞ்சாயத்து ஆட்சி "

மாநில பஞ்சாயத்து மாநாட்டில் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்களின் பேருரை

நண்பர்களே,

நேற்றும், இன்றும் நம் மாநிலத்திலுள்ள பஞ்சாயத்து சபை தலைவர்கள் இங்கு அனைவரும் கூடி டல்வேறு பிரச்சினைகள் பற்றி விவாதித்து ஒரு முடிவிற்கு வந்து தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறீர்கள். இதுபோன்ற பெரிய மகாநாடுகள் அடிக்கடி நடந்தால் நல்லதுதான். ஆனல் கூட்டுவது சிரமம். ஏராளமான பணச் செலவு, போக்குவரத்து வசதி இவைகளைப் பார்க்கும்போது இப்படி கூட்டிக்கொண்டு இருப்பது சிரமமாக இருக்கும்.

மூன்று கோடி பேர்—மூன்று கோடி பிரச்சனைகள்

இருந்தாலும் ஒன்று சேர்ந்து பல விஷயங்கள் குறித்து விவாதிப்பது என்ற பழக்கம் பண்டைக் காலத்திலும் உண்டு, இந்தக் காலத்திலும் உண்டு. எந்த விஷயமானலும் விவாதித்து ஒரு முடிவிற்கு வருவது என்பது முடியாத காரியம். அதாவது, எல்லா விஷயத்திலும் ஒரு விதமான அபிப்பிராயம் இருக்க ம்ுடியாத; மனித உள்ளங்கள் எல்லாம் ஒன்ருக இருக்க முடியுமா ? இருக்கவே முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித அபிப்பிராயம் இருக்கும். ஒவ்வொருவருக்கும் பல்வேறு எண்ணங்கள் ஏற்பட்டு அதற்குத் தகுந்தபடி பரிகாரம் தேடவேண்டும். அவரவர்கள் பிரச்சினைகள்தான் அவரவர்களுக்கு முக்கியமானது. ஒருவருக்கு முக்கியமானது என்று தோன்றும் பிரச்னே இன்னெருவருக்கு அப்படித் தோன்ருது. ஆக, நம் நாட்டைப் பொறுத்த மட்டில் 43 கோடி மக்கள் இருக்கிருர்கள், 43 கோடி பிரச்னைகளும் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 3 கோடி பேர்கள் இருக்கிருர்கள்; 3 கோடி பேர்களின் பிரச்சினைகளும் இருக்கின்றன. 20,000 கிராமங்கள் இருக்கின்றன, 20,000 பிரச்சினைகளும் இருக்கின்றன.

மகாநாடு எதற்காக ?

உங்களுக்கு உள்ள பொறுப்பு மகத்தானது. கிராம மக்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரம் காணப் போகிறீர்கள். இந்தப் பெரிய சுமையை தாங்கிக் கொண்டு இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தும் சக்தியை எப்படி உண்டாக்குவது ? இதுபோன்ற மகாநாடுகளினல்தான் அந்த சக்தியை உண்டாக்குகிறோம். முதல் பிரச்சினை என்ன, அதற்கு அடுத்த பிரச்னே என்ன, அடுத்த பிரச்சினை என்ன என்று வகுத்துக் கொள்ள வேண்டும். தீர்க்க முடியாத பிரச்சினைகளே கிடையாது. எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க வேண்டியதுதான். ஆனல், முக்கியமான பிரச்சினைகள் எவை; எவைகளை முதலில் தீர்க்கவேண்டுமென்று முடிவு செய்வதற்கு இதுபோன்ற மகாநாடுகள் உதவிகரமாயிருக்கும்.

பிரச்சினைகளுக்காகப் பயந்து ஓடிவிடமுடியுமா ?

பெரிய பிரச்சினைகளை ஓரிருவர் உட்கார்ந்து அல்லது தனியாக உட்கார்ந்து யோசனை செய்தால் ஒரு முடிவிற்கும் வரமுடியாது. ஓடிப்போய் விடுவார்கள். காரணம், பலஹீனம்தான். நமக்கு பிரச்சினையில் நம்பிக்கை இல்லை, அவ்வளவுதான்.

சுயராஜ்யம் வேண்டுமென்று மகாத்மா காந்தியடிகள் கேட்டபோது, அப்பொழுது யார் நம்பினர்கள் அது கிடைக்குமென்று ? நாம் ஒன்று சேர்ந்திருந்தால், நடக்கமுடியாத காரியம் ஒன்றுமில்லை என்ற எண்ணத்தை, தெம்பை உண்டாக்கினர்கள் காந்தியடிகள். அந்த நம்பிக்கையினல்தான் சக்தி ஏற்பட்டு நமக்கு சுதந்திரம் கிடைத்தது. சுதந்திரம் கிடைத்த பிறகு பெரியதொரு பொறுப்பு ஏறபட்டிருக்கிறது, அதைக் கண்டு பயந்து ஓட முடியுமா ? இனிமேல் யாரும் ஓட முடியாது. இந்தப் பொறுப்பை சுமந்தேயாகவேண்டும். இந்தப் பொறுப்புச் சுமையை நாம் சுமக்கப் போகிருேமா அல்லது நம் சந்ததியினர் சுமக்கப்போகிருர்களா என்பதுதான் பிரச்சினே. நம் முன்னுள்ள பிரச்சினைகளுக்கு நாமே பரிகாரம் தேடி விட்டால் நமக்கு பின் வரும் சந்ததியினர் மகிழ்ச்சியோடும், கவலையற்றும் வாழமுடியும்.

சுதந்தரம் எதற்காகப் பெற்ருேம் ?

நாம் எதற்காக சுதந்திரம் வேண்டுமென்று கேட்டு அதைப் பெற்ருேம் ? பெருமைப் படுவதற்காகவல்ல. நம் நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், மக்களின் கஷ்டங்கள் தீரவும், ஒரு புதிய சமுதாயத்தை—கவலையற்ற ஒரு புதிய சமுதாயத்தை—உருவாக்குவதற்கும் தான் சுதந்தரம் பெற்றிருக்கிருேம். ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தி, மக்கள் வாழ்க்கைத்தரம் உயர்ந்து, மக்கள் கஷ்டமின்றி வாழும்படியானதொரு சமுதாய அமைப்பை ஏற்படுத்த நாம் முன் வரவேண்டும். பழைய பழக்க வழக்கங்களைவிட மாட்டேன்; ஆனல் புது வாழ்வு வேண்டும்; கவலையற்ற வாழ்வு வாழ வேண்டுமென்ருல் முடியுமா ? ஆகவே, புது வாழ்வு வாழ்வதற்கு நாம் நவீன வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மக்களின் மனப்பான்மை மாறவேண்டும்

பழைய பழக்க வழக்கங்களைப் புது வாழ்விற்குத் தக்கபடி மாற்றிக்கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் கஷ்டப்படுகிருர்கள் என்ருல், அதற்குக் காரணம் பணம் இல்லாதது மட்டுமல்ல. அவர்களுக்கு நல்லெண்ணம் இருக்கிறது. ஆனல் தம் பழக்க வழக்கங்களை மாற்றிக்

கொள்ள முடியவில்லை. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பாக நான் செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள பல கிராமங்களுக்குச் சென்றிருந்தேன். குடியிருக்க வீடு கிடையாது, அதற்கு அரசாங்கம் வேண்டிய உதவி அளிக்க வேண்டுமென்றும், வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் கூறினர்கள். பின், ஹரிஜனங்களைக் கேட்டேன். அவர்கள், தங்கள் இடங்களுக்கு வந்து பார்க்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினர்கள். எனக்கு நேரமில்லை; நான் பல கிராமங்களுக்குப் போக வேண்டியிருந்தது. ஆகவே, தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் இடத்தை நான் பார்த்திருப்பதால், அதுபோல் இங்கும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்று நினைத்து, எனக்கு நேரமில்லையென்று கூறியும், வற்புறுத்தி கூட்டிக்கொண்டு போனர்கள். ஆனல் அங்கு போனதும் அவர்கள் வீடுகள் வேண்டுமென்று கேட்கவில்லை, குழந்தைகளுக்கு படிப்பு வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்கவில்லை. ''எங்களுக்கு பிரேதங்களைக் கொண்டுபோக இடமில்லை" என்று கூறி ஒரு தனிப்பட்டவரின் வயலைக் காட்டி "இந்த வழிதான் போகவேண்டும், அதற்கு அவர் இஷ்டப்பட்டால் போகச் சொல்கிருர், இல்லாவிடில் தடுக்கிருர். இறந்து போனல் எங்கள் கட்டையை எரிக்க இடம் கொடுங்கள்" என்று கேட்கிருர்கள். மற்ற ஜாதிக்காரர்கள் எங்குபோய் எரிக்கிருர்களோ அங்கு செய்யலாமே என்று கேட்டதற்கு அவர்கள் சொன்னர்கள், அங்கு ''எங்களுக்கு இடமில்லை" என்று. அப்படி சொல்லக் காரணம் என்ன? செத்துப் போனலும்கூட பழக்கவழக்கங்களை மாற்ற முடியவில்லை. நல்லெண்ணம் இருக்கிறது; ஆனல் பழக்கம் போகவில்லை. வேண்டுமானல் அதற்கு சட்டம் செய்யலாம்; சட்டத்தை மாற்றலாம்; இம்மாதிரி பழக்கம் இருந்தால் ஜெயிலுக்கு அனுப்பலாம்; தூக்கு போடலாம் என்று செய்யலாம். ஆனல், நாம் ஜனநாயகத்தை அடிப்படையாக வைத்து வாழவேண்டும் என்று நினைக்கிறோம். அதற்கான வழிகளை மகாத்மா காந்தி அடிகள் நமக்கு கற்றுக் கொடுத்திருக்கிருர்கள். இதற்கான முறைகளை நாம் கைக்கொள்ள வேண்டும். இதற்கு சட்டம் போடுவதால் மட்டும் பயனில்லை, மக்களுடைய மனதில் மாறுதல் ஏற்படவேண்டும்.

ஜனநாயகத்திற்கு குந்தகம் விளைவிக்காமல்..

ஜனநாயகத்திற்கு எந்தவிதமான கெடுதியும் ஏற்படாத வகையில் நாம் நம்முடைய ஆட்சியை நடத்தவேண்டும். அதை மறந்து விட்டு செயல் பட்டால் நம் தேசமே ஒற்றுமையிழந்து போகும். எல்லோரும் சமமாக வாழவேண்டும்; அதன் அடிப்படையில் ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நாம் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதற்கான வகையில் ஏற்படுத்தியிருக்கும் கட்டுக்கோப்பு அப்படியே இருக்கும்படியாக நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏதோ மேல் நாட்டில் எல்லாம் அதை செய்கிருர்கள், அங்கே பறக்கின்ருர்கள் என்றெல்லாம் சொல்லலாம். ஆனல் அவர்களின் நிலைமையும் நம்முடைய நிலைமையும் என்ன என்பதையும் நாம் பார்க்கவேண்டும்.

நீங்கள் இங்கே 15 ஆயிரம் பேர்கள் வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. புறம்போக்கு நிலங்கள் சம்பந்தமாக எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்காக மந்திரிகளைப் போய்ப் பார்க்கிறீர்கள், கலெக்டர் அவர்களைப் போய் பார்க்கிறீர்கள்; தாசில்தார் அவர்களைப் போய் பார்க்கிறீர்கள். ரோடு வேண்டும்; குடிதண்ணீர் வசதி வேண்டும்; வாய்க்கால் வேண்டும் என்றெல்லாம் கேட்கிறீர்கள். அரசாங்கத்திற்கும் மனுக்கள் அனுப்புகின்றீர்கள். இவ்விதமான எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்ற உங்களுக்கு எத்தனையோ பொறுப்புகள் உங்கள் ஊரில் இருக்கின்றன. அவைகளை எல்லாம் விட்டுவிட்டுத்தான் இரண்டு நாட்களுக்கு இங்கு வந்திருக்கிறீர்கள். இங்கு என்ன வேடிக்கை பார்க்கவா வந்திருக்கிறீர்கள்? அல்லது பட்டணம் பார்க்கவா வந்திருக்கிறீர்கள்? இந்த மாநாட்டுக்கு வந்து விட்டு போகும்போது ஒரு தன்னம்பிக்கையோடு போக வேண்டும். ஏதோ இந்த மகாநாட்டுக்கு போய் வந்து விட்டால், உடனேயே பள்ளிக்கூடம் வந்துவிடும்; விளக்கு வந்துவிடும் என்று சாதாரண மக்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம். நீங்கள் ஊருக்குப் போனவுடன் அங்குள்ளவர்கள் கேட்பார்கள், எங்கே ஐயா பள்ளிக்கூடம், எங்கே ஐயா வாய்க்கால் என்று. இதற்கு சரியான பதில் சொல்லாவிட்டால், "உனக்கு அதையெல்லாம் கேட்பதற்கு சக்தியில்லை. நான் போயிருந்தால் இதையெல்லாம் கேட்டிருப்பேன்" என்றெல்லாம் கூட சொல்லுவார்கள். இதையெல்லாம் நீங்கள் பொறுமையாகத்தான் கேட்டுக் கொள்ளவேண்டும்.

ஒவ்வொருவரும் தங்கள் மனதில் தோன்றுவதைச் சொல்வார்கள். முரண்பட்ட கருத்துக்களைக் கூட சொல்லுவார்கள். அதையெல்லாம் பொறுமையோடு கேட்டுக்கொள்ளவேண்டும். நாட்டில் எவ்வளவோ முரண்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லுகிருர்கள். அதற்காக யாரும் கோபித்துக்கொள்ளக் கூடாது. தமிழ்தான் வேண்டும் இந்தி கூடாது என்று சொல்லுகிறவர்கள் இருக்கிருர்கள். தமிழ் கூடாது, இந்தி தான் வேண்டும் என்று சொல்லக் கூடியவர்களும் இருக்கிருர்கள். இதைப்பற்றி நாம் இப்போதே என் பயப்பட வேண்டும்?

பாகற்காய் என்ருல் பத்தியம் முறிந்துவிடுமா?

பாகற்காயை சுவைத்துப் பார்த்தால் தான் கசக்கும். பாகற்காய் என்று சொன்னவுடனே என் நாம் பயப்பட வேண்டும்? யாரும் எதை சொன்னவுடனே பயந்து விட வேண்டாம். எதற்கும் நாம் பயப்பட வேண்டிய தேவையில்லை; நாம் யாருக்கும் பயந்து வாழ்க்கை நடத்தவில்லை. எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் இரண்டு விதமான கருத்துக்கள் வரலாம். ஒருவர் தமிழ் தான் இருக்கவேண்டும் என்று செல்லுவார்; இன்னொருவர்

இந்தி தான் வேண்டும் என்று சொல்லுவார்; இன்னொருவர் மலையாளம் தான் இருக்கவேண்டும் என்று சொல்லுவார்; நாம் எவ்வளவோ பிரச்சினைகளை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பள்ளிக்கூடங்களைப் பற்றி விவாதிக்கிறோம்; ஆசிரியர்களைப் பற்றி விவாதிக்கிறோம்; குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றி விவாதிக்கிறோம். எல்லாவற்றையும் தீர ஆலோசித்து, ஒரு முடிவுக்கு வருவதுதான் நல்லது.

ஜனநாயக முறையில், நாடு முன்னேற வேண்டுமானால் உணவு உற்பத்தியும் பெருகவேண்டும்; அதே சமயத்தில் கட்டுப்பாடும் ஓரளவுக்கு இருக்கவேண்டும். ஏதோ தடபுடலாக செய்து ஏதாவது சங்கடங்கள் வந்துவிடக் கூடாது என்பதைத் தான் சிலர் தெரிவித்தார்கள். பஞ்சாயத்து தலைவர்கள் அப்படி தப்பாக நடந்து கொள்ளவேமாட்டார்கள். எதை சொன்னாலும் அதில் நியாயமிருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்து, அதற்குத் தகுந்தபடிதான் செயலில் ஈடுபடுவார்கள். குடும்பக்கட்டுப்பாடு வேண்டாம் என்று ஒருவர் சொல்லலாம், வேண்டும் என்று ஒருவர் சொல்லலாம். இதில் எது நியாயம் என்பதைப் பார்த்து அதை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் . . ."

புதிய முறைகளை எல்லாம் கைக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறோம். புதிய முறைகள் என்று சொல்லும்போது, பழைய முறைகளை அப்படியே கைவிட்டு விட முடியாது. இவ்விதம் எத்தனையோ பிரச்சினைகளைப்பற்றி பேசலாம். அவைகளைக் கண்டு நாம் பயந்துவிட முடியாது. பல முரண்பட்ட கருத்துக்களை யார் சொன்னாலும் அதை நாம் தவறாக எடுத்துக்கொள்ளக்கூடாது. நல்ல எண்ணத்தோடுதான் அவர்களும் சொல்லுவார்கள். அவர்கள் மனதில் என்ன இருந்தாலும், அதை நாம் நல்ல எண்ணத்தோடு எடுத்துக்கொள்ளவேண்டும். அவர்கள் சொல்லுவதில் நியாயமிருக்கிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும். அதுதான் முக்கியம். இப்படியெல்லாம் சொல்கிறார்களே என்று யாரும் கவலைப்படவேண்டியதில்லை. புதிய புதிய கருத்துக்கள் வரும்போது அவற்றையெல்லாம் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்காக நாம் பழமைகளை, பழமையான கருத்துக்களை அப்படியே விட்டு விட முடியாது. வீடுகட்டுகிறோம், பழைய கல்லாக இருந்தாலும் நல்ல கற்களை எல்லாம் உபயோகிக்கிறோம். ஆகவே, புதிய கருத்துக்களை எடுத்துக்கொள்ளும்போது பழமையான கருத்துக்களிலுள்ள நல்ல அம்சங்களையும் நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போது தான் நல்ல விதத்தில் ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க முடியும்.

அத்தகைய இணைப்போடு காரியங்கள் செய்ய வேண்டுமென்று ஆசைப் படுகிறோம். நம் நாட்டில் 80 சதவிகித மக்கள் கிராமங்களில்தான் வாழ்கிறார்கள். ஆகவே, கிராமங்கள் சுபீட்சமாக இல்லாவிடில், கிராம மக்கள் சுபிட்சமாக இல்லாவிடில், நாடு எப்படி சுபீட்சமாக இருக்க முடியும்? ஆகவே, கிராமங்கள் நன்றாக இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்வது பஞ்சாயத்து தலைவர்களின் கடமை பொறுப்புமாகும். பரம்பரையாக சிலர் கிராமங்களில் தலைவர்களாக இருந்திருக்கலாம்; அவர்களுக்கு வேண்டுமானால் கோபம் வரலாம். ஆனால் அதற்காக நீங்கள் ஆத்திரப் படக்கூடாது. நாம் பரம்பரையாக இருந்தோம். இப்பொழுது யாரோ ஒருவர் பஞ்சாயத்து தலைவராக வந்திருக்கிறாரே என்று அவர்களுக்கு கோபம் வந்தாலும், நாம் அதைக் கண்டு ஆத்திரப்படக்கூடாது. சிரித்துக் கொண்டே போக வேண்டும். அவர்களோடு நாம் அதற்காக சண்டை போட்டுக்கொள்ளக் கூடாது. நாம் நல்லெண்ணத்தோடு நான்கு நாட்கள் அவர்கள் வீட்டிற்கு போகவேண்டும். ஊருக்கு நல்ல காரியம் எதைச் செய்யலாமென்று கேட்கவேண்டும். இப்படியாக சேர்ந்தே போக வேண்டும். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்க்கக்கூடாது. வித்தியாசமின்றிக் பழகிக்கொள்ளும் தன்மை பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வரவேண்டும். நமக்கு புதுத் தலைவர்கள் வேண்டாமா? வேண்டும்.

பஞ்சாயத்து ராஜ்யம், பஞ்சாயத்து ராஜ்யம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். பலவித பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கிராமங்கள் நன்கு அமைந்து கிராம மக்கள் ஷேமமாக இருக்கவேண்டுமென்பதில் நமக்கெல்லாம் எவ்வளவோ ஆர்வம் இருக்கிறது. அதற்காகத் தான் எவ்வளவோ பயிற்சிகள் வைத்துக்கொண்டேயிருக்கிறார்கள். கலெக்டர்களுக்கு பயிற்சி, பஞ்சாயத்து தலைவர்களுக்கு பயிற்சி என்று இருக்கிறது. கலெக்டர்கள் பழைய கொள்கைகளை கடைப்பிடித்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது? ஆகையால், பயிற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. நடந்து கொண்டேயிருக்க வேண்டும். இன்று நல்லது என்றிருப்பதை நாளை மாற்ற வேண்டியயிருக்கலாம். புது முறைகளை வகுக்கும்படி நேரலாம். ஆக, கிராம மக்களிடையே தன்னம்பிக்கையை ஏற்படுத்துவது தான் இந்த இயக்கத்தின் நோக்கம்.

மக்களிடையே தன்னம்பிக்கை வளரவேண்டும்

எந்தக் காரியத்தையும் நம்மால் செய்ய முடியும் என்ற தன்னம்பிக்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும். அது மிகவும் முக்கியமானது. அரசாங்கம் பணம் கொடுத்தால் வீடு கட்டுவோம், பள்ளிகள் கட்டுவோம் என்றிருந்தால், அப்படி பணம் கொடுக்காவிட்டால் அவர்கள் சோர்ந்து உட்கார்ந்துவிடுவார்கள். பணம் நமக்கு கொடுக்கவில்லை, ஆகவே இனிமேல் ஒன்றுமே நடக்காது என்று இருந்து விட்டால் பின் எப்படி பஞ்சாயத்து நடக்கும்? அப்படி வேண்டிய பணம் அரசாங்கத்திலிருந்து கிடைக்காவிட்டால், வேறு எப்படி வரி போட முடியும், அரசாங்கப் பணம், இந்தப் பணம் இரண்டையும் சேர்த்துக் கொண்டு நடத்த முடியுமா என்று பார்க்க

[28-ம் பக்கம் பார்க்க]

கேள்வியும் பதிலும்

கிராமத்தில் புதுயுகம்

அதிகாரிகள்—பொதுமக்கள் ஒத்துழைப்பு

கேள்வி :—

பல ஆண்டுகளாக, பிரிட்டிஷார் இங்கு ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலத்தில், அதிகாரிகள்—பொதுமக்கள் ஒத்துழைப்பு என்பதுபற்றிய பேச்சே இல்லாமல், நிர் வாகம் நடந்து வந்ததே ? இப்பொழுது மட்டும் இதை வற்புறுத்த வேண்டியதன் அவசியம் என்ன ?

பதில் :—

அந்நிய ஆட்சி நடந்து கொண்டிருந்த அந்தக் காலத் தில், எல்லாக் காரியங்களையும் அதிகாரிகளே கவனித்து வந்தார்கள். பொதுமக்களின் தொடர்பில்லாமல் அதி காரிகளே நடத்தி வந்த அக்காலத்து ஆட்சியை, “அதி கார வர்க்க ஆட்சி” அல்லது “போலீஸ் ஆட்சி” என்று கூறலாம். எனவே, அந்நிய ஆட்சியில், பொது மக்களின் ஒத்துழைப்பு தேவையில்லாமல் இருந்தது. மக்களும், அரசாங்க நிர்வாகத்தில் அக்கறையில்லாத வர்களாய் இருந்து வந்ததில் வியப்பில்லை. ஆனால், இப் பொழுது நிலைமை, அடியோடு மாறிவிட்டது. நாம் ஜனநாயக முறையில் நடைபெறும் “க்ஷேம நல ஆட்சி” யின் கீழ் இருக்கிறோம். உண்மையான ஜனநாயகத்தின் அம்சம் என்னவென்றால், அரசாட்சியில் மக்கள் நேரடி யாகப் பங்கு கொள்ள வேண்டும் என்பதே. மக்க ளால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் ஆட்சித் தலைமை யேற்று நடத்துகின்றனர். சுருங்கச் சொன்னால், இந் நாட்டின் பொதுஜனங்களே, இப்போதுள்ள எஜமானர்கள். அரசாங்க அதிகாரிகள், பொதுஜன எஜமானர்கள் வகுத்த திட்டங்களின்படி, சேவை செய்கின்ற நிரந்தர ஊழியர்கள். பாரத நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டப்படி, இந்தக் குடியாட்சிமுறை, கடந்த சுமார் பத்தாண்டுகளுக்கு மேலாக, நம் நாட்டில் நடைபெற்றுவருகிறது. சுதந்திர நாட்டில், அதிகாரிகள்—பொதுஜனங்கள் ஆகிய இரு சாரா ரிடையேயும், நெருங்கிய ஒத்துழைப்பு இருக்க வேண்டியது அவசியமாகிறது.

கேள்வி :—

இரு சாராரிடையேயும் ஒத்துழைப்பு இருக்கவேண்டிய தன் அவசியத்தை, தெளிவாக்கிவிட்டீர்கள். ஒப்புக் கொள்கிறேன். ஆனால், இந்த இரு சாராரில் உயர்ந்த வர்கள் யார் ? தாழ்ந்தவர்கள் யார் ? யார் மீது யார் அதிகாரம் செலுத்த முடியும் ?

பதில் :—

இதில், உயர்வு, தாழ்வு என்ற பேச்சுக்கே இடமில் லையே. இரு சாராருக்கும் தக்கமுறையில் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஜனநாயக அமைப்பு முறை யில், மக்கள்தான், சர்வ அதிகாரமும் பெற்றுள்ளனர். அன்றாட அரசாங்க நிர்வாக இயந்திரத்தில், பொது மக்கள், பெருவாரியான முறையில், அடிக்கடி தலையிட்டு, அரசாங்க அதிகாரிகளின் வேலைகளைக் கட்டுப்படுத்த முயன் றால், எந்த வேலையும் நடைபெறாது. எனவே, நாட்டுமக் களின் கஷ்ட நஷ்டங்களை நன்றாக உணர்ந்து, அவர்களின் அபிலாஷைகளையும், அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு, மக்கள் பிரதிநிதிகள், அரசாங்கத்தின் கொள் கைகளை உருவாக்குகின்றனர். பாராளுமன்றம், சட்டப் பேரவை ஆகியவற்றின் ஆமோதிப்புடன், சட்ட திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இவ்வாறு உருவாக்கப்பட்ட கொள்கைகளையும், நடைமுறைத் திட்டங்களையும் நிறை வேற்றுகின்ற பொறுப்பும், கடமையும், அரசாங்க அதி காரிகளைச் சாரும். அன்றாட நிர்வாகத்தைத் திறம்பட நடத் திச் செல்லவும், அவ்வப்போது ஏற்படும் சிக்கல்களுக்கு ஏற்ற பரிகாரம் தேடவும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள், அதிகாரிகளே. அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் ஆகிய இரு சாராரும், தத்தம் பொறுப்புக் களையும், கடமைகளையும் உணர்ந்துகொள்ளவேண்டும். மக்களின் நலன்தான் முக்கியம். அவர்களுடைய நன் மைக்காகப் பாடுபடுவதுதான், தம்முடைய இலட்சியம் என் பதை, இரு சாராரும் பரஸ்பரம் உணர்ந்துகொண்டால், அவர்களிடையே நிலவவேண்டிய ஒத்துழைப்பின் அவசி யத்தை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

உயர்வு, தாழ்வு என்ற பேத உணர்ச்சியோ, விதி முறைகளை அசட்டை செய்து எதேச்சாதிகாரமாக நடந்து கொள்வதோ, பிறர் மரியாதையைப் போற்றாத சுய மரியாதையோ, அதிகார எல்லையை மீறிய காரியங்களைச் செய்வதோ, தொல்லைகள் ஏற்படுவதற்குக் காரணங்க ளாகிவிடுகின்றன.

[22-ம் பக்கம் பார்க்க]

கிராம சேவக்குகளைத் தேர்ந்தெடுத்தல்

இரண்டாவது கிரேடு கிராம சேவக்குகள் 520 பேர்களை நியமனம் செய்வதற்காக, 1961 டிசம்பர் 4, மாலை 5 **மணி வரை** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்ட நிலையில் உள்ள குழுக்களினால், பூர்வாங்கத் தேர்வுப் பேட்டியும், அதனைத் தொடர்ந்து கிராம அபிவிருத்திக் கமிஷனர் அவர்களால், தகுதி நிர்ணயச் சோதனையும்(Aptitude test) நடத்துவதன் அடிப்படையில், விண்ணப்பதாரர்கள் **நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

ரூபாய் 90-ல் ஆரம்பமாகி ரூபாய் 110 வரையில் ஆண்டு ஒன்றுக்கு 4 ரூபாய் என்ற விகிதத்தில் சம்பள உயர்வும், அதற்கு மேல் ஆண்டொன்றுக்கு 3 ரூபாய் என்ற விகிதத்தில் சம்பள உயர்வும் என்ற இந்த அடிப்படையில், ரூபாய் 140 வரையில் செல்லும்படியான விகிதாச்சாரத்தில் (ரூ. 90—4 -110-3—140) சம்பளம் அமையும்.

ஆண்கள் மட்டுமே விண்ணப்பித்துக்கொள்ளும் தகுதியுடையவர்கள்.

அபேட்சகர்கள் போதிய அளவு தமிழ் அறிவு பெற்றிருக்க வேண்டும். அதாவது, உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் தமிழ் படித்தவர்களாக இருக்கவேண்டும். அல்லது, தமிழ் அவர்களது தாய் மொழியாக இருந்தாலும், இல்லாவிட்டாலும், தமிழ் பேச, படிக்க, எழுதத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அல்லது, தமிழில், மொழிச் சோதனைத் தேர்வில் (Language Test in Tamil) குறைந்த படசம் இரண்டாம் வகுப்பிலாவது தேறியவர்களாக இருக்கவேண்டும். மொழிவாரி சிறுபான்மையோர் விஷயத்தில் இந்த விதி தளர்த்தப்படும். அதாவது, தமிழல்லாத வேறு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு, தமிழ்நாட்டில் வேலைக்கு நியமிக்கப்பட விரும்புவர்களும், தேர்ந்தெடுக்கப்படும் பதவிக்கு யோக்கியதாம்சமாக நிர்ணயிக்கப்பட்ட பரீட்சையில் தமிழ் நாட்டில் உள்ள ஒரு கல்வி நிலையத்தில் படித்துத் தேறியவர்களுமான நபர்கள், கிராம சேவக் பதவிக்கு நியமிக்கப்பட்டு, வேலைத் திறமையைக் கண்டறியும் காலம் (Probation period) பூர்த்தியாகி வேலை நிரந்தரமாக்கப் படுவதற்கு முன், குறிப்பிட்ட காலத்திற்குள், தமிழில் மொழிச் சோதனையில் (Language Test in Tamil) தேறிவிடுவதாகப் பூர்வாங்க நிபந்தனைக்குட்பட்டு, வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விண்ணப்பதாரர்களுக்கு **கிராமியப் பண்பு** (Rural back ground) இருக்க வேண்டும் என்பதோடு, அவர்கள் தமிழ் நாட்டில் எந்த இடத்தி லுள்ள **கிராமங்களிலும்** தங்கியிருந்து வேலை செய்யத் தயாராக இருக்கவேண்டும்.

யோக்கியதாம்சங்கள்.—(1) அபேட்சகர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பூர்த்தி செய்தவர்களாக இருக்கவேண்டும். (அதாவது பொதுப் பரீட்சைக்கு முழுதும் ஆஜராய் இருக்க வேண்டும்). மற்றும் தமிழில் அல்லது தாய்மொழியில் 40 சத விகிதத்திற்கு குறையாமல் தேர்வு எண் பெற்றிருக்கவேண்டும்.

குறிப்பு.—பின் குறிப்பிட்டுள்ள நபர்களுக்கு பின் குறிக்கப்பட்ட முறைப்படி சலுகை (preference) காட்டப் படும்:—

(அ) சமூக அல்லது கிராம அபிவிருத்தி வேலைகளில் முன் அனுபவம் உடையவர்களாகவும், உயர்நிலைப் படிப்பில் விவசாயத்தைப் பாடமாகக் கொண்டிருந்தவர்களாகவும் உள்ள நபர்கள்.

(ஆ) குறைந்த பட்ச பொதுக்கல்வி யோக்கியாதாம்சம் உள்ள நபர்கள்.

(இ). (i) கல்லூரிப் படிப்புக்கு அனுமதிக்கப்படத் தகுதி உடையவர்கள் என அறிவிக்கப்பட்ட நபர்கள், **அல்லது**

(ii) தமிழ்நாடு கல்வித் துறை இயக்குனரால் அளிக்கப்பட்ட போஸ்ட் பேசிக் (லோயர்) சான்றிதழ் உடைய நபர்கள், **அல்லது,**

(iii) மாஜி ராணுவத்தினராக இருந்து, எட்டாவது வகுப்பு அல்லது மூன்றுவது பாரம், அல்லது இந்திய ராணுவ இரண்டாம் வகுப்பில் தேறியவர்கள்.

(2) பின் தங்கிய வகுப்பினர்கள் உட்பட, சகல அபேட்சகர்களும் 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி அன்று 19 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் 25 வயதிற்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். அட்டவணையில் கண்ட சாதிகள் (Scheduled castes) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மலைக்கூட்டத்தினர்கள் (Scheduled tribes) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி அன்று 19 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், 30 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

3. ராணுவ, கடற்படை அல்லது விமானப் படையிலிருந்து படைக்குறைப்புக்களாகிய நபர்கள், 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி அன்று, 40 வயது பூர்த்தி செய்திருக்கக்கூடாது.

4. குறிப்பிட்ட யோக்யதாம்சங்களில் திருப்திகரமாக இருக்கும் அபேட்சகர் முன் தேர்வு பேட்டிக்காக அவர்களது, மாவட்டத்தில் அல்லது ஒரு இடத்தில் (Centre) **அவர்களது சொந்தச் செலவில்,** ஒரு மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ள குழுவின் முன் ஆஜராகும்படி கோரப் படுவர். முன்தேர்வுப் பேட்டியில் தேர்ந்தெடுக்கப்படும்

அபேட்சகர்கள் கிராம வளர்ச்சி பயிற்சிக் கேந்திரங்கள் எதாவது ஒன்றில் இரு தினங்கள் தகுதி நிர்ணயச் சோதனைக்கு அவர்களது சொந்தச் செலவில், உட்படுமாறு கோரப்படுவர். இறுதியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர்கள் எதாவது ஒரு கிராம வளர்ச்சி பயிற்சிக் கேந்திரத்திற்கு இரு வருட காலம் பயிற்சி பெற அனுப்பப் படுவார்கள். இந்தப் பயிற்சி காலத்தில் அந்த அபேட்சகருக்கு பிரதிமாதம் ரூ. 40 விகிதம் பயிற்சி உதவிப்பணம் (stipend) தரப்படும். பயிற்சிக்கு அனுமதிக்கப்பட்ட அபேட்சகர், தமது பயிற்சி திருப்திகரமாக முடிந்தபிறகு, எங்கு நியமிக்கப் பட்டாலும், அங்கு சென்று மாநில அரசாங்கத்திற்கு மூன்று வருடங்கள் வேலை செய்வதாகவும், தவறினால் தமக்காகத் தரப்பட்ட பயிற்சி உதவிப்பணம் முழுவதையும் திருப்பித் தந்துவிடுவதாகவும் ஒரு பத்திரம் எழுதித்தர வேண்டும்.

5. விண்ணப்பங்கள் அபேட்சகரது சொந்தக் கையெழுத்தில், குறிப்பிட்ட பாரத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டும். அத்துடன், "XLVI-n-Miscellaneous-Miscellaneous receipts on account of Grama sevaks Training Centre and Work shops-f. Receipts on account of Integrated Gramasevak Training Centres" என்ற கணக்குத் தலைப்பில், தமிழ் நாடு அரசாங்கத் துறையில் வரவு வைக்கும்படி, அரசாங்கக் கஜானா அல்லது சென்னையில் உள்ள இந்தியா ரிசர்வ் பாங்க் அல்லது அதன் ஏஜென்சியிடம், விண்ணப்பிக்கக் கட்டணமான ரூ. 5. (ரூபாய் ஐந்து மட்டும்) செலுத்தியதற்கு அடையாளமாக பணம் செலுத்திய அசல் சீட்டினையும் (Chalan) அனுப்பவேண்டும். இந்த விண்ணப்பக்கட்டணம் எக்காரணம் பற்றியும் திருப்பித்தரமாட்டாது. பின் தங்கிய வகுப்புகள் எதாவது ஒன்றைச் சேர்ந்தவர்கள், அட்டவணையில் கண்ட வகுப்பினர், அட்டவணையில் கண்டுள்ள சாதியினர் ஆகிய அபேட்சகர்கள், இண்டர்மீடியட் தேர்வில் தேறியவர்களாக, அல்லது சென்னை அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களாக அல்லது அதற்குச் சமமான யோக்கியதாம்சம் உள்ளவர்களாக இருந்தால், இந்த விண்ணப்பக்கட்டணமான ரூ. 5. செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

6. விண்ணப்பப் பாரங்களை, தன் முகவரி எழுதப்பட்டு போதிய தபால் தலை உறையுடன்கூட, எழுத்துமூலம் விண்ணப்பித்து, அரசாங்கத்தின் உதவிக் காரியதரிசி, (Assistant Secretary to Govt.,) கிராமநல, தல நிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9, அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

7. விண்ணப்பங்கள் வந்து சேர்ந்து, தேர்வின் முடிவுகள் நிராகரிப்புக்கு காரணங்கள் முதலியவைபற்றி எந்தவிதமான கடிதப் போக்குவரத்தும் ஏற்கப்படமாட்டாது. விண்ணப்ப பாரத்தில் குறிக்கப்பட்டது போல, சான்றிதழ்களின் கையெழுத்திட்ட நகல்கள் (Attested copies) மட்டும் விண்ணப்பத்துடன் அனுப்பப் படவேண்டும். அசல் சான்றிதழ்களை (Original Certificates) முன் தேர்வு பேட்டி சமயத்திலும் (pre-selection interview) தகுதி நிர்ணயச் சோதனை (aptitude test) சமயத்திலும் சமர்ப்பிக்க வேண்டும்.

கிராம அபிவிருத்திக் கமிஷனர் (Additional Development Commissioner), கிராம நல–தல நிர்வாகத் துறை, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.

அறிவிப்பு

தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய பட்டியல்

(1) 1961-ம் செப்டெம்பர் "கிராம நலம்" இதழில், தமிழ் நாட்டில் உள்ள பஞ்சாயத்துக்கள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று வெளியிடப்படும் என்று அறிவித்திருந்தோம். அதன்படி, அக்டோபர் மாத ஆரம்பத்தில், இந்தப் பட்டியலை வெளியிட்டோம். ஆனால், அப்போது வெளியிட்ட பட்டியலில், பல தவறுகள் காணப்பட்டன. பஞ்சாயத்துக்கள் பற்றிய சரியான விவரங்கள், குறித்த காலத்திற்குள் கிடைக்கப் பெறுமையே, இந்தப் பட்டியலில் தவறுகள் ஏற்படக் காரணமாயிருந்தன. தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் பற்றிய பட்டியல் ஒன்றினை, தவறில்லாத முறையிலும், சரியாகவும், புதிதாக வெளியிடுவது என்று இப்பொழுது ஏற்பாடாகியுள்ளது. இந்தப் பட்டியல் வெகு விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

---

(2) பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தை, ஓராண்டு காலம் நடத்தி அனுபவம் பெற்றுள்ள முதல் தொகுதி பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கொண்ட கருத்தரங்கு ஒன்று, சென்னையில், 29-11-61 முதல் 1-12-61 வரை (மூன்று நாட்கள்) நடைபெறும். இந்தக் கூட்டத்தில், புதிய பஞ்சாயத்து சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பல்வேறு நிர்வாகப் பிரச்சினைகள் ஆராயப்படும். கிராம நல-தல நிர்வாகத்துறை அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

கேள்வியும்—பதிலும் [19-ம் பக்கத் தொடர்ச்சி]

கேள்வி :—

அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் என்று இரு சாரார் ஏன் இருக்கவேண்டும்? மக்கள் பிரதிநிதிகள் மட்டும் இருந்தால் போதாதா ?

பதில் :—

அது எப்படி போதும்? பொதுமக்கள் பிரதிநிதிகள் நிர்வாகத்தில் பங்கு கொள்ளவேண்டும் என்று சொல்லும் பொழுது, அரசாட்சியின் கொள்கைகளை உருவாக்குகின்ற விஷயங்களில், மாற்றங்கள் இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. ஆனால், அப்படி முடிவு செய்யப்பட்டு உருவாக்கப்படுகின்ற கொள்கைகளை, செயல்படுத்தி வைக்கும்பொழுது, ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையும், வேலைத் திட்டமும் அவசியம் இருக்கவேண்டும். அப்பொழுதுதான், எந்தக் காரியத்தையும் உருப்படியாகச் செய்ய முடியும். நிர்வாகம் என்பதே ஒரு தனிக்கலை. அதை நடத்த, அனுபவமும், சமநிலை நோக்கும், கட்டுப்பாட்டு உணர்ச்சியுமுடைய அரசாங்க அதிகாரிகள் தேவைப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கத்தை நடத்திச் செல்ல, இரு சாராரும் இரண்டு கண்களைப் போல, மிகவும் அவசியமானவர்களே.

கேள்வி :—

நல்ல விளக்கம் தந்தீர்கள். ஆமாம், இப்படிப்பட்ட ஒத்துழைப்பை எப்படிப் பெறமுடியும் ?

பதில் :—

இந்த ஒத்துழைப்பினை மக்கள் பிரதிநிதிகள், நிர்வாகத்தில் நேரடிப் பங்கு கொள்வதின் மூலம் நாம் அடைய முடியும். எல்லா மக்களும், அரசாங்க நிர்வாகத்தை நடத்துவதில், நேரடிப் பங்குகொள்ள முடியாதல்லவா ? எனவே, அதிகாரிகள் அன்றாட நிர்வாகத்தை நடத்திச் செல்ல வேண்டியிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு கட்டங்களில், நிர்வாகம் எப்படி நடைபெறுகிறது, எப்படி நடைபெற வேண்டும், எந்த நோக்கத்தின் அடிப்படையில் காரியங்கள் செய்யப்பட வேண்டும் என்பதை எல்லாம் பரிசீலனை செய்து முடிவு செய்கிறார்கள். உதாரணமாக, மாநிலம், மாவட்டம், கோட்டம், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஆகிய பல்வேறு நிலைகளில், அதிகாரிகளும், பொதுஜனப் பிரதிநிதிகளும், தமது பொறுப்புக்களை, நல்ல ஒத்துழைப்புடன் நடத்திச் செல்ல வேண்டியிருக்கிறது. மேலும், இப்படிப்பட்ட ஒத்துழைப்பைப் பெற, பல்வேறு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதிகாரங்களை, பரவல் முறையில் பகிர்ந்தளித்தல், அந்தந்தப் பிரதேச மக்களிடம் அதிகாரங்களை ஒப்படைத்தல், ஆகியவற்றின் மூலம், இந்த லட்சியத்தை அடைய முயல்கிறோம். அதிகாரங்களை மக்களிடம் பகிர்ந்தளிப்பதால் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை மக்களே, நேரடியாகக் கவனிக்க முடிகிறது. இதன் வாயிலாக, அதிகாரிகளுக்கு, மக்கள் ஒத்துழைப்பும், கிடைத்துவிடுகிறது. அதனால், அதிகாரிகளின் வேலையும் சுலபமாகி விடுகிறது. இங்கே, ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். அதாவது, மக்களிடம் நேரடியான தொடர்பு கொள்ளவோ, அவர்களுடைய அபிலாஷைகளைப் புரிந்து கொள்ளவோ, அன்றாட நிர்வாக வேலைகளில் மூழ்கி இருக்கும் அதிகாரிகளுக்கும் அவகாசம் இருப்பதில்லை. இதற்கு மாறாக, பொதுஜனப் பிரதிநிதிகளுக்கு மக்களுடன் அதிகமாகத் தொடர்புகொள்ளும் நேரமும், வாய்ப்பும் இருக்கின்றன.

நம் நாட்டில் தேர்தல் நடப்பதையே அறிவொளி பரப்பும் ஒரு பெரிய திட்டத்தின் முக்கிய அம்சமாகக் கொள்ளலாம். சமுதாயத்தில் உள்ள பல்வேறு தரப்பட்ட மக்கள், ஆட்சிப் பொறுப்பில் தமக்குள்ள சக்தியை, தேர்தலின்போது நன்றாக உணர முடிகிறது. உண்மையில், நம் நாட்டிலே ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடப்பதே, ஜனநாயக அமைப்பின் உயிர்நாடியான அம்சமாகும். ஏனெனில், தேர்தலின்போது, பொதுமக்கள் எத்தகைய நிர்வாகம் தமக்குத் தேவை என்பதை முடிவு செய்கிறார்கள். ஆகவே, நிரந்தரமாக உள்ள அரசாங்க ஊழியர்கள், அவ்வப்போது அரசாங்கத்தால் வரையறுக்கப்படும் கொள்கைகளைப் புரிந்துகொண்டு, சட்டதிட்டங்களுக்குட்பட்டு, மக்களுக்குச் சேவை செய்வது அவசியம். அரசாங்கம் செய்துவரும் அபிவிருத்தி வேலை விவரங்களை பொதுமக்கள் அறிந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து ஆட்சி பற்றிய கருத்தரங்குகள், பயிற்சி முகாம்கள், ஆராய்ச்சி மகாநாடுகள், செய்தி நிலையங்கள் முதலியன இதற்குச் சிறந்த சாதனங்களாக உதவுகின்றன.

கேள்வி :—

கிராமங்களில் புதுயுகம் மலர்வதற்கு, அதிகாரிகள் பொதுமக்கள் ஒத்துழைப்பு மேலும் வளர்ந்தோங்க வேண்டியது அவசியம் என்கிறீர்கள். இல்லையா ?

பதில்—

ஆம், புதிய பஞ்சாயத்து ஆட்சி ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில், மிக மிக முக்கியமான பொறுப்புக்கள், பொது மக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சிறப்பாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், எல்லாக் கிராம அபிவிருத்தி வேலைகளும், பஞ்சாயத்து மூலமே நடைபெறும். மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்குதல், மக்கள் தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல் ஆகிய தேசியப் பணிகளை பொதுமக்களும், அதிகாரிகளும் ஒன்றுசேர்ந்து நிறைவேற்றியாக வேண்டும். இவற்றுடன் குடிமராமத்து வேலைகள், கிராமக் கைத்தொழில் வளர்ச்சி, மாதர், குழந்தைகள் நலம், முதலிய பல்வேறு சமூக நலப் பணிகளை, பொதுஜன ஒத்துழைப்பு மூலம்தான், வெற்றி பெறச் செய்ய முடியும். எனவே, இந்த ஒத்துழைப்பின் அவசியத்தை நமது பிரதமர் நேருஜி மிகவும் வற்புறுத்திக் கூறி வருகிறார். அவர் சொல்கிறார் : "பொதுஜனத் தலைவர்களிடம் காணப்படும் சிறந்த குணங்களை, அதாவது லட்சிய வேகம், தீவிர உற்சாகம் முதலிய நல்ல பண்புகளை, அதிகாரிகள் உணர்ந்து, போற்றி வளர்த்துக் கொள்ள வேண்டும். அது போலவே, பொதுஜனத் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகளிடமுள்ள கட்டுப்பாடு, பயிற்சி முதலிய பண்புகளை அறிந்து, போற்றி, கற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒருவருக்கொருவர் தம்முடைய நல்ல குணங்களைப் பரிமாறிக்கொண்டால், ஒழுங்கும், கட்டுப்பாடும் நிறைந்த சேவை மூலம், எல்லோருக்கும் பொதுவான உன்னத லட்சியத்தை நோக்கி, இரு சாராரும் விரைவில் முன்னேறலாம்." ஆகவே, "எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்று நம் நாட்டுப் பெரியோர் கூறும் வழி முறையை, அரசாங்க அதிகாரிகளும், பொது மக்களும் நன்றாகப் புரிந்துகொண்டு ஒத்துழைத்தால், கிராமங்களில் புதுயுகம் மலர்வது உறுதி.

(சென்னை வானொலி நிலையத்தில் ஒலி பரப்பப்பட்ட உரையாடல்)



மாநில பஞ்சாயத்து மாநாட்டுக் காட்சிகள்....

1. மாநாட்டைத் துவக்கி வைக்க பிரதமர் நேரு வருகிறார்.

2, 4 : பிரதிநிதிகளின் மகிழ்ச்சி ஆரவாரத்துக்கிடையே பிரதமர் நேரு.

3. நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கவனிக்கும் பிரதிநிதிகள்.

5. திரளாகக் குழுமியிருந்த பிரதிநிதிகளின் மற்றொரு பகுதி.



1. இறை வணக்கம் பாடப் படுகிறது

2. மாநாட்டு மேடையில் பிரதமர் நேரு அவர்களுடன் மாநில நிதி அமைச்சர் திரு. சி.சுப்பிரமணியம்.

ல

3. மேடையில முதலமைச்சர் திரு. காமராஜ், நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம், திரு. ஆர். எ. கோபாலசாமி ஆகியோர்.

4. மாநாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரமுகர்களின் ஒரு பகுதி.

அநாட்டுக் கொட்டகையில் மாவட்டக்
;லெக்டர்கள்.

4. மா
பி

மாதர் நல மகாநாடு

1. பஞ்சாயத்து மகாநாட்டை ஒட்டி நடைபெற்ற மாதர் நல மகாநாட்டில், பிரதமர் நேரு, மாநிலக் கவர்னர், முதல் அமைச்சர் ஆகியோர்.

2. அந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பெண் பிரதிநிதிகள்.

3. லேடி வெலிங்டன் கல்லூரியில் நடைபெற்ற மாதர் நல கருத்தரங்கு. பெண் பிரதிநிதி ஒருவர் கௌரவிக்கப்படுகிறார்.

4. திரளாகக் குழுமியிருந்த பெண் பிரதிநிதிகள்.





1. பஞ்சாயத்து மாநாட்டுப் பிரதிநிதிகளின் முகாம் அலுவலகத்தில் செய்தி நிலையம்.

2, 3. ஐலண்டு மைதானத்தில் அமைந்திருந்த பிரதிநிதிகளின் முகாம்களின் தோற்றம்.

4. பிரதிநிதிகளுக்கு உணவு தயாராகிறது.

5. பிரதிநிதிகள் அனைவருக்கும் மேஜைகளின் மீதே உணவு பரிமாறப்படுகிறது.

"கடிதக் கருத்தரங்கு"

[அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற 'மாநில பஞ்சாயத்து மாநாடு' பற்றிய கருத்துக்களைப் பஞ்சாயத்து யூனியன் மன்றத் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்களிடமிருந்து வரவேற்கிறோம். தகுதியுடையவை, இப் பகுதியில் இடம் பெறும். —ஆசிரியர்.]

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

"பஞ்சாயத்து மகாநாட்டில் நான் பெற்ற அனுபவம்"

மக்களின் ஏகோபித்த ஆதரவால் தேர்ந்தெடுக்கப்பட்ட எங்களைப் போன்ற, அனுபவமுள்ளவர்களும், அனுபவ மற்றவர்களுமான பலதரப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்தில் எந்த அளவுக்குத் தங்களுக்கு அதிகாரம் இருக்கிறது? எதைச் செய்வது? எப்படிச் செய்வது? என்று மலைத்துக்கொண்டு இருந்தோம். சட்டப் பேரவையில் அமைச்சர்களும், பேரவை உறுப்பினர்களும், ஒன்று சேர்ந்து, தங்கள் தங்கள் கருத்துக்களை, நல்லது இது, கெட்டது இது, இதைச் செய்யவேண்டும், இதைச் செய்யக் கூடாது என்று தீர்மானித்து செயல்படுத்தும் வாய்ப்பு இருப்பது போல், பஞ்சாயத்துத் தலைவர்களாகிய நமக்கும் இவ்வாறு ஒரு முறை இல்லையே என்ற ஏக்கம் இருந்தது.

சில பஞ்சாயத்துக்களை இணைத்து, யூனியன்களாக அமைத்து, அதில் கலந்தாலோசிக்கக் கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் இக்குறை நிவர்த்திக்கப்பட்ட பின்பு, கமிஷனர் வேறு, அபிவிருத்தி அதிகாரிகள் வேறு, பஞ்சாயத்துத் தலைவர்கள் வேறு, யூனியன் தலைவர்கள் வேறு என்று பல வேற்றுமை மனப்பான்மையால், எந்த நேரத்தில் எவ்வாறு ஒருவரையொருவர் சந்தித்து தங்கள் வேலைகளை நிறைவேற்றுவது என்ற பேதம் இருந்து வந்தது. இந்தத் தவறான போக்கும் மகாநாட்டுப் பிரயாணத்தில் அதிகாரிகளும், யூனியன் தலைவர்களும், உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து, ஒரே குடும்பத்தினர் போலவும், சகோதரர்கள் போலவும், வித்தியாசமின்றிப் பழக வேண்டிய, கிடைக்கப் பெறாத சற்றும் எதிர்பார்க்க முடியாத அரிய வாய்ப்புக் கிட்டியபோது, வேற்றுமைகளும் மறைந்தன.

இதனால் எங்கள் கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டோம். சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட்டன. பஞ்சாயத்தின் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல திட்டங்கள் விவாதிக்கப்பட்டு உருவாக்கப்பட்டன. பிரயாணத்தின் மத்தியில் மனம் விட்டுப் பேசக்கூடிய சந்தர்ப்பங்களும், மகிழ்ச்சி ஆரவாரங்களும், எங்களிடையே பாகுபாடின்றி ஒரே குடும்பத்தில் ஏற்படக்கூடிய நேச உணர்ச்சியின் எழுச்சியை உறுதிப்படுத்தியது.

ஓய்வெடுத்தல், உணவருந்தல், சிற்றுண்டி அருந்துதல், நகரத்தில் உள்ள கடைவீதிகளுக்குச் செல்லுதல் முதலான வேலைகள் எங்களுக்குள் ஒற்றுமையையும், மகிழ்ச்சியையும், உறுதியையும், விடாமுயற்சியையும், மேலும், மேலும் வலுப்படுத்தின.

பிரத்தியேகமாக மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பிரும்மாண்டமான மாநாட்டுக் கொட்டகையில் பாரதத்தின் அரும்பெரும் தலைவர்களாகிய ஜவஹர்லால் நேரு, அமைச்சர் எஸ். கே. டே, கவர்னர் விஷ்ணுராம்மேதி, முதலானவர்களையும், தமிழ்நாட்டின் முதலமைச்சர் திரு காமராஜர், நிதியமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், உள்துறை அமைச்சர் திரு எம். பக்தவத்ஸலம், திரு கக்கன், திருமதி லூர்தம்மாள் போன்ற அமைச்சர்களையும், அவர்கள் ஆற்றிய கருத்தூமிக்க அறிவுரைகளையும், மாவட்டக் கலெக்டர் போன்ற அரசாங்கப் பெரிய அதிகாரிகள் தங்களது அந்தஸ்தையும், சிரமங்களையும் பாராது அங்குமிங்கும் ஓடி வழி காட்டி, வசதியளித்து, கேட்கவும், பார்க்கவும் உதவியதையும் எங்களால் மறக்கவே முடியாது.

இதைவிட மனதைவிட்டகலா நிகழ்ச்சி ஒன்று உண்டென்றால், அது அதே அலங்காரக் கொட்டகையில், மாபெரும் தலைவர்கள் சொற்பொழிவாற்றிய அதே மேடையில் பஞ்சாயத்துத் தலைவர்களாகிய நாங்களும் சொற்பொழிவாற்றியதுதான். அரசாங்கப் பெரிய அதிகாரிகளையும், அமைச்சர்களையும், பேரவை மன்ற உறுப்பினர்களையும் பஞ்சாயத்துத் தலைவர்களையும் சரிசமமாக்கி, சமத்துவம் வழங்கிய இம்மாநாடு, எல்லோரும் ஓர் இனம், ஒரே தரம், ஒரே சக்தி என்பதைத் தெளிவாக்கியதுடன், எங்களுக்குள் ஒரு புத்துணர்ச்சியையே தட்டி எழுப்பிவிட்டது.

இம்மாதிரி, மாகாண ரீதியில் இல்லாவிடினும், மாவட்ட ரீதியிலாவது அடிக்கடி கூடித் தத்தம் கருத்துக்களை பரிமாறிக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டால் நலம் என்று கருதுகிறோம்.

வி. எம். வி. நடராஜ உடையார்,
பஞ்சாயத்துத் தலைவர், தருமத்துப்பட்டி,
ஆத்தூர் II யூனியன்,
மதுரை மாவட்டம்.

"கிராமங்களுக்கு தன்னம்பிக்கையை ஊட்டும் இயக்கமே புதிய பஞ்சாயத்து ஆட்சி"—[18-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும். பணம் உள்ளவர்கள்தான் வரிக்கு எதிர்ப்பு சொல்வார்கள். பணம் இல்லாதவன் எங்கிருந்து கொடுக்கப் போகிறுன்? ஒரு மாட்டை, கட்டித் தீனி போட்டால்தான் நன்கு பால் கறக்கும். இல்லாவிட்டால் எங்கேயாவது போய் தீனி தின்னட்டும் என்ருல் கால்படி பால் தான் கறக்கும். ஆகவே, கிராமங்களிலே சிறிய கைத்தொழில்கள், குடிசைத் தொழில்கள் இவைகள் வளர ஏற்பாடு செய்யவேண்டும். கிராமங்களில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். உற்பத்தியை அதிகரித்தால் தான் மக்களுக்கு சாப்பாடு போட முடியும். ஒரு கிராமத்தில் 500 அல்லது 1,000 ஏக்கர் இருந்தால், அங்கு ஒரு குழந்தை பிறந்தால் ஒவ்வொரு குழந்தை பிறக்கும்போதும் 2 ஏக்கர் கூடவா போகிறது? இருக்கிற நிலம் இப்பொழுது இருப்பது போல்தான் இருக்கப் போகிறது. கூடப் போவதில்லை. இப்பொழுது ஒரு குடும்பத்தில் இரண்டு பேர் இருந்தால் ஒவ்வொருவருக்கும் இரண்டு, இரண்டு குழந்தைகள் இருக்கிறதென்ருல், அவர்கள் பெரியவர்களாகிவிட்டால் அவர்களுக்கு ஐந்து, ஐந்து குழந்தைகள் வீதம் அவர்கள் வளர்ந்து அவர்களுக்கும் குழந்தைகள் பிறந்து ஜனத்தொகை வளர்ந்து கொண்டே போகிறது. ஆம், ஒருவருக்குள்ள சாப்பாட்டைப் பலர் பகிர்ந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, குடும்பத்தைக் கட்டுப்பாடு செய்யவேண்டும். இரண்டு மாடுகள் சேர்ந்து போனுல்தான் வண்டி ஓடும். ஒன்று படுத்து விட்டால் மற்றென்றை மட்டும் வைத்து எப்படி ஓட்டுவது? ஆகவே, அதேபோல் எல்லாவற்றையும் பரிசீலித்துத்தான் திட்டங்கள் அமைத்திருக்கிறேம். ஐந்தாண்டுத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் நமக்கு எவ்வளவு வருவாய் வரும்? நமது பொருளாதார சக்தி என்ன? எவ்வளவு தூரம் உற்பத்தியைப் பெருக்கமுடியும்? இந்த ஐந்து வருடத்தில் (மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில்) எவ்வளவு குழந்தைகள் பிறக்கும்? எவ்வளவு பேர்களுக்கு நாம் வீடு கட்டிக் கொடுக்க முடியும், சாப்பாடு கொடுக்க முடியும், உடை கொடுக்க முடியும், எவ்வளவு பேர்களுக்கு கல்வி வசதி அளிக்க முடியும்? இப்படி பல காரியங்களைச் சராசரியாகப் பார்த்து நாம் திட்டம் வகுத்திருக்கிறேம். இவைகளை எல்லாம் எப்படி அமுல் நடத்துவது என்பது தான் நம்முடைய பிரச்சினை. விவசாயத்துறையாக இருந்தாலும் சரி, கல்வித் துறையாக இருந்தாலும் சரி, பல திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. விவசாயத்தை எடுத்துக் கொண்டால், சிறு குளங்கள் வெட்ட வேண்டும்; கிணறுகள் தோண்ட வேண்டும். இம்மாதிரியான பல பொறுப்புகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் இப்போது பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்திருக்கிறேம். இதில் உங்களுடைய கருத்துக்கள் எல்லாம் என்ன என்பதை அறிவதற்காகத் தான் இந்த மகாநாடு நடத்தப்பட்டது.

தன்னம்பிக்கையுடனும், உறுதியுடனும் செயலாற்றுங்கள்

நீங்கள் இந்த மகாநாட்டில் பல்வேறு காரியங்களைப் பற்றி பரிசீலனை செய்து பல முடிவுகளை எடுத்திருக்கிறீர்கள் அவைகளை எல்லாம் நிறைவேற்றவேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறீர்கள். அதே சமயத்தில் நீங்கள் உங்கள் ஊருக்குப் போனவுடன். எம்மாதிரியான பொறுப்புகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கிராமத்தைப் பொறுத்தவரையில் நீங்கள் தெம்போடு இருந்து வேலைகளை நடத்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மகாத்மா காந்தி அவர்கள் இந்த நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்று கேட்டார்கள். அதற்காக அவர்கள் நடத்தின போராட்டத்தில் 40 கோடி பேர்களும் ஜெயிலுக்குப் போய்விடவில்லை. 40 கோடி பேர்களும் அடி, உதை படவில்லை. அதோடு இவ்விதம் ஜெயிலுக்குப் போனவர்களை மட்டும், அல்லது அடி உதை வாங்கினவர்களை மட்டும் மனதில் வைத்து வெள்ளைக்காரன் பயந்துவிடவில்லை. அது போல் நீங்கள் இங்கு 10 ஆயிரம் பேர்கள் இருக்கிறீர்கள் என்ருல், அது 3 கோடி பேர்கள் இருப்பதற்கு சமமாகும். நீங்கள் 10 ஆயிரம் பேர்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள் என்ருல், உங்கள் வகையில் 3 கோடி பேர்கள் இருக்கிருர்கள் என்று தான் அர்த்தம். ஆகவே, இங்கு வந்திருக்கக்கூடியவர்கள் முதலாவதாக தன்னம்பிக்கையோடு இருக்கவேண்டும். அப்போது தான் நம் காரியங்களை வெற்றிகரமாக செயலாற்ற முடியும். உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறேம். அதற்கு நாம் என்ன செய்யவேண்டும், அதற்கு எந்த முறைகளை எல்லாம் நாம் கைக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் பஞ்சாயத்துக்கள் பரிசீலனை செய்யவேண்டும். அதோடு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கிராமங்களில் போய் இங்கு நடந்தவற்றை எல்லாம் சொல்லவேண்டும். மெம்பர்களிடம் மட்டும் தான் சொல்லவேண்டும் என்பதில்லை. கிராமத்திலுள்ள அனைவரையும் அழைத்து, இவைகளைப் பற்றி சொல்லவேண்டும். இதில் அவர்களுடைய கருத்துக்கள் என்ன என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். பெரிய அளவில் இருந்தால் சட்டமன்றம் இருக்கிறது. அதை அங்கே விவாதித்துக் கொள்ளலாம். சிறிய பிரச்சினைகளை எல்லாம் கிராமங்களிலே விவாதிக்கலாம். நம்முடைய கிராமத்திற்கு நல்லபடியாக எதை யெல்லாம் செய்ய முடியும், என்பதைப் பற்றி எல்லாம் விவாதித்து முடிவு எடுக்கவேண்டும். முக்கியமாக பஞ்சாயத்து என்ற எண்ணம் வந்தவுடன், தம் மனதில், ஊருக்கு ரோடு போடுவது, பள்ளிக் கூடம் கட்டுவது, குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பது, மின்சார விளக்குகள் போடுவது இவைகள் எல்லாம் வருகின்றன. இவற்றிற்கெல்லாம் அரசாங்கத்திலிருந்து பணம் கிடைக்கும். இவைகள் எல்லாம் இருந்தாலும், சாப்பாடு வேண்டாம் என்று யாராவது சொல்ல முடியுமா? சாப்பாடு வேண்டும்

என்று சொல்லும் போது, உணவு உற்பத்தி பெருக வேண்டும் என்பதையும் நாம் ஒப்புக்கொள்கிறோம். அதே சமயத்தில், கிராமங்களிலுள்ள தொழில் வளமடைய வேண்டும். சட்டிப்பானைத் தொழில் இருக்கிறது ; இரும்பு பட்டறை இருக்கிறது; தோல் பதனிடும் தொழில் இருக்கிறது. இவைகளை எல்லாம் நல்லமுறையில் மாற்றி அமைக்க வேண்டும். இதற்கு முக்கியமாக மின்சார வசதி வேண்டும். அதற்காகத்தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ் நாட்டில் இருக்கின்ற எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கவேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். கிராமங்களில் பெரிய தொழில் வளரவேண்டும் என்றால் மின்சார வசதி ஏற்படுத்தவேண்டும். பெரிய தொழிலில் ஈடுபடுகிறவர்கள் எல்லாம் கிராமங்களில் போய் தொழிலை ஆரம்பிக்க முடியுமா என்று தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மின்சார வசதி கிடைக்குமா, ரோடு வசதி கிடைக்குமா, குறைந்த வாடகைக்கு இடம் கிடைக்குமா என்பதைப்பற்றியெல்லாம் ஆலோசிக்கிறார்கள். ஆகவே மின்சாரம் பரவப்பரவ, ரோடு வசதிகள் எல்லாக பெருகப் பெருக, நீங்கள் கூப்பிடாமலேயே பல தொழில்கள் உங்கள் கிராமத்தை நோக்கி வரும். நீங்களாம் கூப்பிட வேண்டிய அவசியமேயில்லை. பணம் வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இரவு பகலாக எதற்காக மேலும் மேலும் சம்பாதித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் பல தொழில்களை ஆரம்பிப்பதற்குதான். எந்த தொழிலை லாபகரமாக நடத்தலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக, கிராமங்களிலுள்ள நிலைமையை எடுத்துக்கொண்டால், சாதாரணமான ஒரு தச்சுப்பட்டறையை நல்லமுறையில் ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்தால் அதற்குள்ள இயந்திரம் வாங்குவதற்கே 5,000 ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. இது அவர்களிடத்தில் எங்கேயிருக்கிறது ? இதனால் தான் அவர்கள் கூலி வேலைக்கு வெளியில் போய்விடுகிறார்கள். அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று நினைத்துத்தான் கூட்டுறவு முறையில் பல தொழில்களை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த வசதிகளை எல்லாம் பஞ்சாயத்துக்கள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு துறையிலும் பல நல்ல முயற்சிகளை எடுத்தால் தான், சாதாரண மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். சாதாரணமாக தறி இருக்கிறது. அதில் முன்போல 20-ம் நம்பரையும் 40-ம் நம்பரையும் மட்டும் போட்டுக்கொண்டு இருந்தால் போதாது. இப்போது 40-ம் நம்பருக்கு குறைந்து யாரும் துணி வாங்குவதில்லை. ஆகவே இந்தத் தறிகளை எல்லாம் மாற்றவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. புதுத்தறிகளை கொண்டு வரவேண்டும். இவ்விதம் பல விதமான பிரச்னைகள் இருக்கின்றன. நம் நாட்டில் 3 கோடி மக்கள் இருக்கிறார்கள் என்றால், 3 கோடி பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நல்ல முறையில், யாருக்கும் கெடுதியில்லாத முறையில் தீர்ப்பதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். அப்போது தான் பல பிரச்னைகளை நாம் தீர்க்க முடியும்.

பஞ்சாயத்துக்களில் அரசியல் தலையிடக்கூடாது

ரோடு போடுகிறோம் என்றால், ரோடு எதற்கு, எங்களை வண்டி போகப் போகிறதா ? என்று கேட்பார்கள். ஹரிஜன காலனி கட்டுகிறோம் என்றால் சிலருக்குத்தான் கிடைக்கும், மற்றவர்கள் தங்களுக்கு இல்லையே என்பார்கள். ஆக பல்வேறு பிரச்சினைகளை நாம் சமாளிக்க வேண் வேண்டும். இருந்தாலும் எல்லோரையும் கூப்பிட்டு அவர் அவர்களுக்கு என்ன வேண்டும், எப்படியிருக்கிறீர்கள் என்றெல்லாம் விசாரிக்க வேண்டும். உங்களுக்கு சாப்பாட்டிற்கு வசதியிருக்கிறதா, என்ன தொழில் செய்கிறீர்கள், உங்கள் பிள்ளை நன்கு படிக்கிறானா என்றெல்லாம் விசாரிக்க வேண்டும். அப்படி விசாரிக்கும்போது அவர்களுக்கு ஒரு திருப்தி ஏற்படும். நாம் மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்க முயற்சி எடுக்கிறோம் என்பது அவர்களுக்கு தெரிய வேண்டும். இதில், அரசியல் விஷயம், பஞ்சாயத்தில் வரத்தான் வரும். ஆனால், அரசியல் கட்சிகள் பஞ்சாயத்து விஷயங்களில் கலந்து கொள்ளாமல் விலகி நின்றால் நல்லது. ஏற்கெனவே தொந்தரவுகள் இருக்கின்றன. அது இங்கும் வர வேண்டுமா ? கிராமப் பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட மட்டில் அரசியல் விவகாரங்களுக்கு இடம் கொடுக்காமல் இருக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். பெரிய விவகாரங்களைப் பற்றி பேச சட்டசபை இருக்கிறது. தங்கள் தங்கள் கிராமங்களுக்கு வேண்டியது என்ன என்று பார்த்து செய்யவேண்டும் பஞ்சாயத்துக்கள். சாக்கடையை சுத்தம் செய்யவேண்டுமென்று சொன்னால், நமக்கு வேண்டாதவர் இப்படிச் சொல்லியிருக்கிறார், ஆகவே சாக்கடையைச் சுத்தம் செய்ய வேண்டாம் என்று சொன்னால் சரியா ? ஆகவே, தனிப்பட்ட பிரச்சினையாக இல்லாது, பொதுப் பிரச்னையாக இருக்க வேண்டும். கட்சி வித்தியாசத்தை மறந்து விடவேண்டும், நமக்கு வோட்டு போட்டவன், நமக்கு வேண்டியவன், வேண்டாதவன் என்றெல்லாம் நினைக்கக் கூடாது. சண்டை போட்டுக் கொண்டிருந்தால் உங்கள் பேரில் மரியாதை இருக்குமா ? சில ஊர்களில் ஒற்றுமையாக இருந்து லட்சக் கணக்கில் செலவு செய்து, பள்ளிக்கூடங்கள், கிணறுகள், வைத்திய வசதிகள் போன்றவைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். சில ஊர்களில் ஒன்றுமே நடக்காது. அப்படி ஒன்றுமே நடக்காததற்குக் காரணம் ஊரில் உள்ள சண்டைதான். ஒரு பள்ளிக்கூடம் வைக்க வேண்டுமென்றால், இங்கே வைக்க வேண்டு மென்பார்கள் ஒரு சிலர். வேறு ஒரு இடத்தில் வைக்க வேண்டுமென்பார்கள் வேறு சிலர். அங்கு வைத்தால் 6 பர்லாங்கு நடக்க வேண்டியிருக்கிறது என்பார் ஒரு சிலர். ஆக, இப்படியே சொல்லிக் கொண்டு ஒன்றுமே நடக்காமல் இருக்கும். உள்ளுக்குள் சண்டை போட்டுக் கொண்டால் இந்தக் கிராமத்திற்கு வேண்டாம் என்று நினைத்து

அந்தப் பள்ளிக்கூடத்திற்குண்டான செலவை வேறு ஒரு கிராமத்தில் செலவழித்து விடுவார்கள். கோபம் வரலாம், ஆத்திரம் வரலாம். வராது என்று சொல்ல வில்லை. உணர்ச்சி இல்லாவிட்டால் அது மரக்கட்டைதான். கூடுமான வரையில் சண்டை காரணமாக ஊர் கெட்டுப் போக இடம் கொடுக்கக்கூடாது. பலவிதமான அபிப்பிரா யங்கள் இருக்கலாம். ஆனால், தகராறு இல்லாமலிருந் தால் கிராமத்திற்குத்தான் நல்லது. எல்லாவற்றையும் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ள வேண்டும். எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் அதைத் தாங்கும் சக்தி பெண்களுக்கு இயற்கையிலேயே இருக் கிறது. அப்படி நம்மால் இருக்க முடியுமா ? கோபம் வந்தால் அடித்து விடுகிறோம், அல்லது எங்கேயாவது போய் விடுகிறோம். பஞ்சாயத்தை அவர்களிடம் கொடுத் தால் நன்றாகயிருக்கும். அவர்கள் தகராறு இன்றி நடத்துவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அப்படி அவர்களிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு அவர் களை விரட்டாமல் இருக்க வேண்டும். ஒற்றுமையாக இருக்கவேண்டும். நமக்கு விட்டுக் கொடுக்கும் மனப் பான்மை இருக்கவேண்டும். பெரியவர்கள்தான் விட்டுக் கொடுக்கவேண்டும். நம் பேரில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் நாம் எதைச் சொன்னாலும் கேட்பார்கள். மகாத்மாவிற்கு மக்களின் எண்ணத்தை அறியும் சக்தி இருந்தது. மக்களின் எண்ணத்தை உணர்ந்து காரியங் களை நடத்தியதால் ஒரு பெரிய சக்தியை அவர்களால் திரட்ட முடிந்தது. ஜாதிச் சண்டை, மதச் சண்டை என்று பல இருந்தன. அவைகளை யெல்லாம் மறந்து கட்டுப்பட்டிருந்ததற்கு காரணம் என்ன ? மக்களுக்கு அவரிடமிருந்த நம்பிக்கைதான் அதற்குக் காரணம்.

இப்படிப்பட்ட மகாநாடுகள் அடிக்கடி நடக்கவேண்டும்

அது தவிர, பஞ்சாயத்துத் தலைவர்கள் என்றிருக்கக் கூடியவர்கள் ஒவ்வொருவரும் மக்களுடைய நம்பிக்கை யைப் பெற வேண்டும். ஏழைக்குப் பல குறைகள் இருக் கின்றன. அவன் யாரிடத்தில் போய்ச் சொல்லுவான். அவனுடைய குறைகளை எல்லாம் நாம் கேட்க வேண்டும். அதில் ஏதாவது நிவர்த்தி செய்து கொடுக்க முடியுமா என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும். அவர்களுடைய குறைகளை எல்லாம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அவர்களுடைய குறைகளை இம்மாதிரியான மகாநாட்டில் தெரிவிக்கவேண்டும். அவைகளைப்பற்றி இம்மாதிரி யான மகாநாட்டில் விவாதிக்க வேண்டும். வருஷந் தோறும் இம்மாதிரியான மகாநாடு கூட வேண்டும் என்பது தான் என் விருப்பம். இம்மாதிரி தலைநகரில் நடத்த இயலாவிட்டாலும், ஒவ்வொரு ஜில்லாவிலுமாவது நடத்தலாம். அப்போது அந்தந்த கிராமங்களி லுள்ளவர்கள் தங்கள் குறைகளை தெரிவிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். அப்போது தான் ஒரு தன்னம்பிக்கை வரும், ஒரு தெம்பும் வரும். இந்தியா சுதந்திரம் அடைந்தத என்றால் எத்தனையோ மகாநாடுகள் இது சம்பந்தமாக நடத்தியிருக்கிறார்கள். அம்மாதிரியான மகாநாட்டில் பல்வேறு ராஜ்யங்களிலுள்ள தலைவர்களும் வருவார்கள். அப்போது யார் யார் எந்த இடத்திலிருந்து வந்திருக் கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். கேரளத்தில் யார் இருக்கிறார்கள், தமிழ் நாட்டில் யார் இருக் கிறார்கள், ஆந்திராவில் யார் இருக்கிறார்கள் என்பதை யெல்லாம் அறிந்து கொள்வதற்கும், ஒருவரோடு ஒருவர் பழகிக் கொள்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதன் மூலம் நல்ல பழக்கம் ஏற்படுகிறது. இன்றைக்கு ஆந்தி ராவிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை. கேரளாவிலிருந்து தண்ணீர் கிடைக்கவில்லை என்றெல்லாம் பேசிக்கொள் கிறோம். ஆனால் நம் ஊரில் என்ன நடக்கிறது. எனக்கு பல சம்பவங்கள் தெரியும். அடுத்த ஏரியிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி தண்ணீர் கொண்டு வந்தால் எங்களு க்கு சாகுபடி செய்யமுடியும் என்று பக்கத்திலிருக்கக் கூடியவர்கள் சொன்னால், அது முடியாது. எப்படி கொடுக்க முடியும். எங்களுக்கு தண்ணீர் இல்லாமல் போய் விடும் என்று பயந்து விடுகிறார்கள். எல்லாவற் றிற்கும் பயம் தான் காரணம். பொருள் பற்றாக்குறை ஏற்படும்போது தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. இது போன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் நாம் பரிசீலிக்கவேண்டும். உர வினியோகம் இருக்கிறது. அதில் பாகுபாடு இருக்கக்கூடாது என்றெல் லாம் சொல்லுகிறோம். அமோனியம் சல்ஃபேட் உரம் அதிகமாக கொடுக்கவேண்டும் என்றும் சொல்லுகிறோம். உரம் எங்கேயிருக்கிறது, பற்றாக்குறை இருப்பதனால்தான் இந்தப் பிரச்னையும் ஏற்படுகிறது. அதை பெருக்க வேண்டும் என்று நாம் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதில் எங்காவது தப்பு நடப்பதை பற்றி மட்டும் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். தப்பைப் பற்றி மட்டும் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நாம் விவாதிக்க வேண்டும். அதற்கு இப்பேர்ப்பட்ட மகாநாடுகள் நடப்பது நல்லது. உங்கள் பிரச்னைகளை தீர்த்துக்கொள்வதற்கு அதிகாரிகள் எல்லாம் ஒத்துழைப்பார்கள். அவர்கள் சட்டங்களை அமுல் நடத்துவதற்கு மட்டும் இருக்கவில்லை. உங்களுக்கு வழி காட்டியாகவும் இருப்பார்கள். உங்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து கொடுப்பார்கள். கிராமங் களில் சின்னஞ்சிறு வித்தியாசங்கள் இருக்கலாம். பரம்பரையாகவே இருக்கின்ற கர்ணங்கள் இருக்கலாம். அதேபோல் பல பெரியவர்கள் இருக்கலாம். அவர்களை எல்லாம் நாம் ஒன்று சேர்த்துக் கொள்ளவேண்டும். கூட்டுறவு சங்கங்கள் என்று ஏற்பட்டுவிட்டால், அதில் பல தகராறுகள் ஏற்படலாம். எல்லா இடத்திலும் ஒழுங்காக நடக்கும் என்று சொல்ல முடியாது. பல தகராறுகள் இருந்தால் பல திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு கால தாமதம் ஏற்படலாம். இம்மாதிரி காரியங்களில் யார் பெரியவர் என்பதற்காக சண்டை போடக்கூடாது. ஜனநாயகம் நம் நாட்டில் வந்ததன் பின்னால், நாம் எல்லோரும் பெரியவர்கள் தான். இந்த மனப்பான்மை

எல்லோருக்கும் இருக்க வேண்டும். மரியாதையாக பழகுவதற்கு எல்லோரும் பழகிக்கொள்ள வேண்டும். பொறுமையோடு நடந்து கொள்வதற்கும் பழகிக்கொள்ள வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் என்று சொன்னால் இந்தக் குணங்கள் எல்லாம் இருக்கவேண்டும். ஊரிலுள்ளவர்களின் நிலைமைகளை எல்லாம் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு ஆளை எடுத்துக்கொண்டால், அவருக்கு எவ்வளவு சாப்பாட்டுக்கு இருக்கிறது, வீடு எங்கே இருக்கிறது, வீடு எப்போது வந்தது என்பதைப்பற்றி எல்லாம் அறிந்து வைத்துக்கொள்ளவேண்டும். சாதாரணமாக நாம் இவ்விதம் எல்லோரையும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். பஞ்சாயத்துத் தலைவர் என்று மட்டும் நாம் இருக்கக்கூடாது. யாரிடத்திலும் அவசியமில்லாமல் தப்பு தண்டாவுக்கு போகக்கூடாது. அந்த ஊருக்குள் நல்ல வழிகாட்டியாக இருக்கவேண்டும். மகாத்மா காந்தியடிகள் தன் வாழ்நாட்களில் ஏழைகளுக்காகவே பாடு பட்டார். அவர்களிடம் இருக்கக்கூடிய ஏழ்மையை போக்க வேண்டும் என்று பாடுபட்டார். அவருடைய வாழ்க்கை நமக்கு முன் மாதிரியாக அமைந்திருக்கிறது. தமிழகத்திலுள்ள கிராமங்கள் எல்லாம் க்ஷேமமாக வாழ வேண்டும் என்று தான் நாம் பஞ்சாயத்துக்கள் அமைத்திருக்கிறோம். அதன் மூலம் கிராமங்களை நல்ல முறையில் திருத்தி அமைக்க வேண்டும். கிராமங்களிலுள்ள மக்கள் எல்லாம், கட்டுப்பாடான மக்களாகவும், பண்புடையவர்களாகவும் பொறுமையுடையவர்களாகவும் இருக்கக்கூடிய அளவில் நாம் அதற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.

ஒழுங்கும் கட்டுப்பாடும் மிகவும் அவசியம்

நாம் ஒழுங்காகவும் கட்டுப்பாடுடனும் இருக்க வேண்டும்; வேற்றுமைகள் இருக்கலாம். இருந்தாலும் பொது நன்மையை மனதில் கொண்டால் இந்த வேற்றுமைகள் தானாகவே மறைந்து விடும். அதற்கு வழி நம் மனதில் நல்லெண்ணம் இருக்கவேண்டும். பல்வேறு பிரச்சினைகளை விவாதித்துத் தீர்த்து வைக்க வேண்டுமென்று ஆவல் இருக்க வேண்டும். உங்கள் எல்லோருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[தலைமை உரை—15-ம் பக்கத் தொடர்ச்சி]

கலந்துகொள்ளும்பொழுது, அவர்களுடைய உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தூண்டுவதாகவும், வளமான எதிர்காலத்தை நோக்கி நாம் மேற்கொண்டுள்ள பயணத்தில், மனித சக்தியையும், மற்ற வசதிகளையும், ஆதாரங்களையும் திரட்டித் தருவதாகவும், பஞ்சாயத்து ஆட்சி விளங்கும். வளமான எதிர்காலத்தை நோக்கி, நாம் மேற்கொண்டுள்ள பயணத்திற்கும், உண்மையான மக்கள் ஆட்சியை நிறுவவேண்டும் என்ற இலட்சியத்தை நாம் அடைவதற்கும், திறமையாக அவைகளைச் செய்ய, உறுதுணையாக அதிகாரப் பரவல் முறை, பொறுப்புகளைப் பகிர்ந்து ஒப்படைத்தல், ஆகிய வேலைத் திட்டம் உள்ளது. இந்த வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில், பல்வேறு கட்டங்கள் உள்ளன. சமுதாய அபிவிருத்தி வட்டாரங்களை, பஞ்சாயத்து யூனியன்களாக மாற்றி அமைத்தல், மாவட்டக் கழகங்கள் கலைக்கப்படுதல் ஆகிய இந்த வேலைகள், இந்தக் கட்டங்களில் மிக முக்கியமானவை. அப்படிப்பட்ட ஒரு மக்களாட்சியை அமைப்பதினால், ஒவ்வொரு மனிதனும், அதிலும் குறிப்பாக, கிராமப்புறங்களில் உள்ளவர்கள், இந்த நாடு தன்னுடைய சொந்த நாடு என்ற உள்ளுணர்வினைப் பெறவும், அதை வளமான நாடாக உருவாக்குகின்ற திருப் பணியில் தங்களுக்கும் முக்கியமான பங்கு உண்டு என்று, உணரவும் முடியும். இந்த வேலையை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதில், தங்களுடைய சக்திக்குட்பட்ட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வதன் மூலம், இந்த இலட்சியத்தை அடையப் பாடுபடவேண்டியது, நம்முடைய கடமையாகும். அப்படிச் செய்வதன் மூலம், கிராமங்களில் வசிக்கின்ற மக்கள், சுயராஜ்யத்தின் உண்மையான பயனைப் பெறும்படிச் செய்ய முடியும்.

விவசாயிகளுக்கு ஓர் அறிவிப்பு

சில வியாபாரிகள் "கால்சியம் சல்பேட்" என்ற உரத்தைப் பயிர்களுக்கு இடுவதனால், அதிக விளைச்சலையும், நிலத்திற்கு வளத்தையும், நல்ல பலனையும் தருகிறது என்று சில தினசரிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து வருகிறார்கள். மற்றும் சில வியாபாரிகள், தோல் கழிவு, மாட்டு உரோமம், சவ்வு, கழிவு, கடுக்காய்த் தூள், ஆவாரம்பட்டைத் தூள், முதலியவற்றைக் கலந்து தோல் கலவை எரு (Leather Compost) என்று விற்றுவருகிறார்கள். இந்த உரங்களில் எந்த அளவு எருச் சத்து உள்ளது என்று விவசாய இலாகா பரிசிலனை செய்து வருகிறது. அதனால், இந்த உர வகைகளை விவசாயிகள் வாங்கி ஏமாற வேண்டாம் என்று விவசாய இலாகா கேட்டுக்கொள்ளுகிறது. விவசாயிகள் உரம் வாங்கும்போது, விவசாய இலாகா உத்தரவாதமளித்துள்ள கலவை உரங்களை மட்டுமே, லைசென்சு பெற்ற உரக் கலவைக் கம்பெனிகளிடம் வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஒவ்வொரு பயிருக்கும் வேண்டிய தழைச் சத்து(Nitrogen) மணிச்சத்து (Phosphoric acid) சாம்பல் காரச் சத்து (Potash), முதலியன நிறைந்த கலவை உரங்கள், பொறுப்புள்ள கம்பெனிகளால் தயாரிக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்க லைசென்சு பெற்ற வியாபாரிகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. அதனால், விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரங்களை, கூட்டுறவுச் சங்கங்களிலும், லைசென்சு பெற்ற விபாயாரிகளிடமும் மட்டுமே வாங்கிக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நல்ல உரம் எங்குகிடைக்கும் என்ற தகவலை, வட்டாரத்திலுள்ள விவசாய இலாகா அதிகாரிகளிடம் விவசாயிகள் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

சென்னை
23—9—'61

விவசாயத்துறை இயக்குநர்
[Director of Agriculture]

" குடும்பக்கட்டுப்பாடு " பற்றிய தீர்மானத்தைப் பிரேரேபித்து சுகாதாரத்துறை அமைச்சர் திரு. மாணிக்கவேலு பேசுகிருர்.

மாநில பஞ்சாயத்து மகாநாடு—செய்தி விளக்கம்—[6-ம் பக்கத் தொடர்ச்சி]

சுகாதாரத் துறை அமைச்சர் பேச்சுக்குப் பின், மத்திய சமுதாய நல-கூட்டுறவுத் துறை துணை அமைச்சர் **திரு. பி. எஸ். மூர்த்தி** அவர்கள், பஞ்சாயத்து நிறுவனங்களின் பொறுப்புக்களைப் பற்றி விரிவுரையாற்றினுர்கள்.

" குடும்பக் கட்டுப்பாடு " தீர்மானம் பற்றிக் கீழ்க்கண்ட பிரதிநிதிகள் ஆதரித்துத் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள் :—

(1) திருமதி இந்திராம்பாள் (ஊத்துக்கோட்டை), (2) திரு. பொம்மராஜன் (தாந்தோணி), (3) திரு. என்.கே. சம்பத் (செய்யாறு), (4) திரு. நடராஜன் (கோவை).

பின்னர் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய தீர்மானம் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது. (இந்த மூன்று தீர்மானங்களை. . . . 7–9...ம் பக்கங்களில் காண்க).

தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர், **மாநில பொது-மராமத்துத் துறை அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள்** மாநாட்டில் சொற்பொழிவாற்றினுர்கள். அவர் தம்முடைய பேச்சில் " குடும்பக்கட்டுபாடு " ஒரு முக்கியமான விஷயம் என்று சொன்னுல் அது மிகையல்ல. நல்லதொரு சமுதாயத்தை நிறுவ நல்ல திடகாத்திரரான, வலிவுள்ளப் பிள்ளைகளைப் பெற வேண்டும். நம் மக்கள் நல்ல திடகாத்திரர்களாக இருக்க வேண்டும்; அதே போன்று, நம் தாய்மார்களும் பல்லாண்டு தேக ஆரோக்கியத்துடன் வாழ வேண்டும். இதற்கு குடும்பக்கட்டுப்பாடு மிகவும் அவசியம். இந்த மாநாட்டில், பிள்ளைகளைப்பெறக் கூடாது என்று சொல்லி விட்டார்கள் என்று நீங்கள் கிராமங்களில் போய் சொன்னுல் அது தவறு. பிள்ளைகள் ஆரோக்கியமாகவும், குறைவாகவும் இருந்தால்தான் நாம் சுகமாக இருக்க முடியும் என்று நீங்கள் சொல்ல வேண்டும். மேலும், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யவேண்டும் " என்று குறிப்பிட்டார்.

அதன் பிறகு, முதலமைச்சர் அழைப்பிற்கிணங்க, **சட்ட மன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். சின்னதுரை அவர்கள்** பேசினுர். அவர் தம்முடைய உரையில் குறிப்பிட்டதாவது : " பஞ்சாயத்துக்களில் கட்சி அரசியலுக்கு இடம் கொடுக்கக்கூடாது. கட்சிகளுக்கு அப்பாற்பட்டு பஞ்சாயத்துக்கள் வேலை செய்து வந்தால்தான், நாடு முன்னேறவும், பொருளாதாரத்தில் உயரவும் வழி எற்படும் என்பதில் சந்தேகம் இல்லை. நம் நாட்டுக்காக நாம் எவ்வளவோ திட்டங்கள் போடுகிறோம். இவைகளை அதிகாரிகள் மட்டும் நிறைவேற்றிவிட முடியாது. அவைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு பஞ்சாயத்துக்களிடம்தான் இருக்கிறது ".

" கிராம மக்களிடம் உள்ள தீண்டாமை உணர்ச்சியைப் போக்க முழு மூச்சுடன் நாம் பாடுபட வேண்டும். நாம் எல்லோரும் ஒன்று என்ற சம அந்தஸ்து எற்பட வேண்டும். அம்மாதிரியான நிலை ஏற்படும் வரையில் நம்மிடையே பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டாலும் கூடப் பயனில்லை ".

குடும்பக் கட்டுப்பாடு பற்றி அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது : " பொருளாதார முன்னேற்றத்தைப் பொறுத்த வரையில் குடும்பக் கட்டுப்பாட்டை கைக்கொள்வதால் மட்டும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என்று கருதமுடியாது. குடும்பக் கட்டுப்பாடு அறவே வேண்டாம் என்று சொல்ல முன் வரவில்லை. ஆனுல் இந்தத் திட்டத்தின் காரணமாக ஒரு வித நிர்ப்பந்த உணர்ச்சி (அதாவது வலுக்கட்டாயம் செய்வது) மக்களிடையே பரவி விடக்கூடாது என்பதுதான் என் கருத்து. இதில் மக்களுக்குப் பரிபூரண சுதந்திரம் இருக்க வேண்டும். இது ஒரு அரசியல் பிரச்சினை ஆக வந்து விடக்கூடாது."

திரு. சின்ன துரை அவர்களின் பேச்சுக்குப் பின் **முதலமைச்சர் திரு. காமராஜ்** அவர்கள், தமக்கே உரிய எளிய தமிழில், அனுபவ பூர்வமான கருத்துக்களை விளக்கிக் கூறினுர். (முதலமைச்சரின் சொற்பொழிவு 16-ம் பக்கத்தில் காண்க).

மாநாட்டின் முடிவில், **தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு. இராஜாராம்** அவர்கள் நன்றி கூற, நாட்டு வாழ்த்துடன் மாநாடு இரவு 7½ மணிக்கு இனிது முடிவுற்றது.

பாமரருக்கு விஞ்ஞானம்

ஐவகை ஆற்றல் — காற்று

(பேராசிரியர் திரு. ஆர். கே. விசுவநாதன், எம்.ஏ., அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

காற்றை நாம் கண்ணால் பார்க்க முடிகிறதில்லை. ஆனால் காற்றோட்டத்தை நாம் பல வழிகளில் உணருகிறோம். உலகில் மக்கள் வாழ்ந்து வரும் இடங்களுக்கும் காற்றோட்டத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. காற்றோட்டத்தினால் பருவ மழைகள் தவறாமல் ஏற்படும் இடங்களிலேயே மக்கள் அதிகமாகக் குடியேறி வசித்து வருவதைக் காண்கிறோம். காற்றோட்டங்களில் பலவகை இருக்கின்றன. காற்று மெல்லிய தென்றலாக வீசும்போது அதை விரும்புகிறோம். சூறாவளியாகவும், புயல் காற்றாகவும் அடிக்கும்போது அதை வெறுக்கின்றோம்; அஞ்சவும் செய்கிறோம். இவ்வாறு நிலையில்லாமல் காற்று எப்பொழுதும் ஓலமிட்டுக்கொண்டு சஞ்சரித்துவருவதன் காரணம் யாது என்று நாம் நினைக்கிறோம் அல்லவா? அதன் காரணங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்ததோடு காற்று மண்டலத்தின் தன்மைகளை முன்னதாகவே அறிந்து, பயிர்த் தொழில், கப்பல் பிரயாணம், ஆகாயவிமானப் பிரயாணம் முதலியவற்றை இடைஞ்சல் இல்லாமல் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அறிந்துவிட்டார்கள். காற்று மண்டலத்தில் ஏற்படும் மாறுதல்களுக்கு அதன் **ஈரநிலை** (Humidity), **அழுத்தம்** (Pressure), **வெப்பநிலை** (Temperature) இம் மூன்றும் முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இக் கட்டுரையில் காற்று மண்டலத்தின் வெப்பநிலை, அழுத்தம் இவற்றுக்கும் காற்றோட்டத்துக்கும் உண்டான தொடர்பைக் கவனிப்போம்.

பூமியின் மேற்பரப்பு முழுவதும் தண்ணீராகவோ அல்லது நிலப் பரப்பாகவோ இல்லை. நிலமும் கடலும் சேர்ந்தே இருக்கின்றன. நிலத்தின் பரப்பைவிட கடலின் பரப்பு இரண்டு மடங்குக்குமேல் அதிகமாக இருக்கிறது. கடலின் பரப்பு சுமார் பதினான்கு கோடி சதுர மைல்கள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறார்கள். கடலைத்தவிர நிலப்பரப்பில் ஏரிகள்போன்ற நீர்நிலைகளும் பல இடங்களில் இருக்கின்றன. சூரிய வெப்பத்தினால் நிலமும் நீரும் ஒரே அளவுக்குச் சூடேறுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு. நீர், நிலத்தைக் காட்டிலும் மெதுவாகவே வெப்பத்தை உட்கொள்ளுகிறது. மேலும் நீர், வெப்பத்தில் பெரும் பகுதியைப் பிரதிபலித்துவிடுகிறது. எனவே நீரினுள் செல்லும் வெப்பத்தின் அளவு, நிலம் உட்கொள்ளும் வெப்பத்தைவிட குறைந்துவிடுகிறது. மேலும் நீரினுள் செல்லும் வெப்பம் அதிக ஆழத்துக்குச் சென்று பரவிவிடுவதால் நீர் மட்டத்தில் வெப்பம் அதிகமாகத் தேங்குவதில்லை. தேங்கியுள்ள வெப்பத்தைத் தணிப்பதற்கு மற்றொரு நிகழ்ச்சியும் துணைபுரிகிறது. நீர்பரப்பிலிருந்து நீர் எப்போதும் ஆவியாக மாறிக்கொண்டே இருக்கும். இந் நிகழ்ச்சியை **ஆவியாதல்** (Evaporation) என்று விஞ்ஞானிகள் கூறுவார்கள். இதன் விளைவாக நீர்ப்பரப்பு குளிர்ந்துகொண்டே போகும். பானைத்தண்ணீர் ஜில்லென்று இருப்பதற்கு இதுவே காரணம். ஆகவே சூரிய வெப்பத்தினால் நீர்ப்பரப்பு அதிகமாக சூடேறுவதில்லை. ஆனால் நிலப்பரப்புக்கு இத்தகைய காரணங்கள் இல்லாமையால் அது நீர்ப்பரப்பை விட அதிகமாக சூடேறிவிடுகிறது. நிலப்பரப்பின் கீழ் அதிகமாக ஆழத்துக்குச் சூரிய வெப்பம் செல்லுவதில்லை. நீர்ப்பரப்பைப்போல நிலப்பரப்பு சூரிய வெப்பத்தை அதிக அளவுக்குப் பிரதிபலிக்கச் செய்யவில்லை. ஆகவே நிலத்தின் மேற்புறத்திலேயே வெப்பம் அதிகமாக தங்கிவிடுகிறது. ஆனால், நிலப்பரப்பு தான் பெற்ற வெப்பத்தை எளிதில் இழந்துவிடும் தன்மையைப் பெற்றிருக்கிறது. நீருக்கு இவ்வளவு எளிதாக வெப்பத்தை இழக்க முடிகிறதில்லை.

கடற்கரையோரங்களிலும், ஏரிகள் உள்ள இடங்களிலும் வசித்துவரும் மக்கள் பகலிலும், இரவிலும் இருவித காற்றோட்டங்களைக் கவனித்திருக்கலாம். சூரிய வெப்பத்தினால் நிலப்பரப்பு நீர்ப்பரப்பைவிட சீக்கிரத்தில் சூடேறிவிடுவதை சற்றுமுன் பார்த்தோம். இதன் பொருட்டு நிலப்பரப்புக்கு அருகிலுள்ள காற்றின் வெப்பநிலை உயர்ந்துவிடுகிறது. ஆனால் நீர்நிலைகளுக்கு அருகிலுள்ள காற்று அந்த அளவுக்குச் சூடேறு

வதில்லை. காற்றின் வெப்ப நிலை உயர்ந்தவுடன் நெகிழ்ச்சி வன்மையினால் இலேசாகி அது மேலெழும்புகிறது. நிலப்பரப்பின் அருகே காற்றின் அழுத்தம் குறைந்து விடுகிறது. இதன் விளைவாக நீர்ப்பரப்புக்கு அருகிலுள்ள அழுத்தம் மிகுந்த காற்று, அதாவது குளிர்ந்த காற்று நிலப்பரப்பை நோக்கி ஓடிவருகிறது. பகல் முழுவதும் இக்காற்றோட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும். இரவு வந்தவுடன் சூரிய வெப்பம் நின்றுவிடுவதனால் நிலப்பரப்பு, தான் பெற்ற வெப்பத்தை சீக்கிரத்தில் இழந்துவிடுகிறது. நீர்ப்பரப்புக்கு இவ்வளவு சீக்கிரமாக வெப்பத்தை இழக்க முடிகிறதில்லை. அதன் வெப்பம் நீண்ட நேரம் அதன் பரப்பில் தங்கிவிடுகிறது. இதன் விளைவாக நிலப்பரப்புக்கு அருகிலுள்ள காற்று குளிர்ந்துவிடுகிறது. நீர்ப்பரப்புக்கு அருகிலுள்ள காற்று சற்று அதிக வெப்பத்துடன் இருக்கிறது. இப்போது நிலப்பரப்பிலிருந்து குளிர்ந்த காற்று நீர்ப்பரப்பை நோக்கி ஓடுகிறது. இவ்வாறு இராக்காலங்களில் காற்றோட்டம் ஏற்படுகிறது. ஏரிகளின் பரப்பு கடலின் பரப்பைவிட மிகச் சிறியதாகையால் ஏரிக்கரையோரங்களில் ஏற்படும் இத்தகைய காற்றோட்டங்கள் கடற்கரையோரங்களில் ஏற்படும் காற்றோட்டத்தைவிட வலிமை குறைந்திருக்கும்.

பூமியின் நிலப்பரப்பும், நீர்ப்பரப்பும் சூரிய வெப்பத்தினால் அவற்றின் வெப்ப நிலை பகலிலும், இரவிலும் மாறி வருவதுபோல, ஆண்டுதோறும் கோடை, மாரி காலங்களின் விளைவாகவும் மாறுபட்டு வருகிறது. முதலில் கூறிய மாறுபாட்டினால் பகலில் காற்றோட்டத்தின் திசை ஒரு முகமாகவும், இரவில் அதற்கு எதிர்முகமாகவும் இருக்கிறது. ஆண்டுதோறும் நிலப்பரப்புக்கும் நீர்ப்பரப்புக்கும் ஏற்படும் வெப்ப நிலை மாறுபாட்டினால் உண்டாகும் காற்றோட்டங்களைப் **பருவக் காற்றுகள்** (Monsoons) என்று கூறுவார்கள். இக் காற்றோட்டங்களின் திசையும் ஆறு மாதங்களுக்கொரு முறை மாறி வருகிறது. அதாவது, முதலில் ஆறு மாதங்களுக்கு ஒரு முகமாகவும், அடுத்த ஆறு மாதங்களுக்கு அதற்கு எதிர் முகமாகவும் இருக்கின்றது. இக் காற்றோட்டங்களின் வலிமை, நீர்ப்பரப்பு, நிலப்பரப்பு இவற்றின் வெப்ப நிலை மாறுபாடுகளுக்கு ஏற்ப உலகின் பல பாகங்களின் பலவாறாக அமைந்திருக்கிறது. அதிக அளவுக்கு வெப்பநிலை மாறுபாடு ஏற்படும் இடங்களில்தான் பருவக் காற்றுகளின் வலிமை அதிகமாகவிருக்கும். எல்லா கண்டங்களை விட நமது ஆசியா கண்டத்திலேயே பருவக் காற்றுகள் அதிக வலிமை கொண்டிருக்கின்றன. ஆசியா கண்டத்தின் சில இடங்களில் கோடை காலத்தில் வெப்ப நிலை அதிகமாக உயர்ந்துவிடுகிறது. மாரி காலத்தில் அதிகமாகக் குறைந்துவிடுகிறது. வெப்ப நிலை உயரும்போது நிலப்பரப்புக்கு அருகிலுள்ள காற்றும் சூடேறி இலேசாகி மேலெழும்புவதை முன்பு குறிப்பிட்டோம். இதன் விளைவாக அவ்விடங்களில் காற்றின் அழுத்தம் குறைந்து விடுகிறது. ஆசியா கண்டத்துக்குக் கிழக்கிலும், தெற்கிலும் உள்ள கடல் பரப்பிலிருந்து குளிர்ந்த காற்று நிலப்பரப்பை நோக்கி வீசுகிறது. இதுவே நம் நாட்டில் கோடை காலங்களில் நாம் காணும் தென்மேற்குப் பருவக் காற்று (South-west Monsoon). மாரி காலத்தில் ஆசியா கண்டத்தின் சில பகுதிகளில் நிலப்பரப்பின் வெப்ப நிலை, கிழக்கிலும் தெற்கிலும் உள்ள கடல் பரப்பின் வெப்ப நிலையை விட அதிக அளவுக்குக் குறைந்து விடுவதால் காற்றோட்டம் வடகிழக்குப் பருவக் காற்றாக (North-east Monsoon). மாறிவிடுகிறது.

சூரிய வெப்பத்தினால் காற்று மண்டலம் முழுவதும் ஒரே அளவுக்குச் சூடேறுவதில்லை. சூரிய கிரணங்கள் பூமியின் மேற்பரப்பில் சில இடங்களில் செங்குத்தாகவும் சில இடங்களில் சாய்வாகவும் விழுகின்றன. பூமத்திய ரேகை (Equator) பிரதேசங்களிலேயே சூரிய கிரணங்கள் செங்குத்தாக விழுகின்றன. எனவே அப் பகுதிகளுக்கு அருகேயுள்ள காற்று அதிகமாகச் சூடேறி, விரிவடைந்து, இலேசாகி மேலெழும்புகிறது. ஆனால் துருவப் (Poles) பிரதேசங்களில் சூரிய கிரணங்கள் சாய்வாகவே விழுகின்றன. மேலும் இவ்விடங்களை அடைவதற்கு முன்னர் சூரியக் கிரணங்கள் காற்று மண்டலத்தில் அதிக தூரத்தை கடந்து வரவேண்டியிருக்கிறது.. எனவே துருவங்களுக்கு அருகிலுள்ள காற்று சூடேறுவதில்லை. காற்றுக்கு அங்கு அகற்சி ஏற்படாததினால் மேலே எழும்புறதில்லை. பூமத்தியரேகைப் பிரதேசங்களுக்கு அருகிலுள்ள காற்று மேலெழும்பும்போது, பூமத்திய ரேகையை நோக்கி துருவங்களிலிருந்து ஒரு காற்றோட்டம் ஏற்படுகிறது. இச் சம்பவம் காற்று மண்டலத்தின் அடிப்பகுதியில் நிகழ்கிறது. மேல் பகுதிகளில் பூமத்திய ரேகை பிரதேசங்களிலிருந்து துருவங்களை நோக்கி மற்றொரு காற்றோட்டம் ஏற்படுகிறது. இவ்வாறு உண்டாகும் காற்றோட்டங்களின் திசையில், பூமி தன்னைத் தானே சுற்றி வருவதன் விளைவாக, ஒரு மாற்றம் உண்டாகிறது. வட துருவம், தென் துருவம் இவற்றை இணைக்கும் கோட்டை இருசாகக் கொண்டு, பூமி தன்னைத் தானே இருபத்து நான்கு மணிக்கு ஒரு முறை சுற்றிவருவதை பலர் அறிந்திருக்கலாம். பூமத்திய ரேகைக்கு அருகேயுள்ள இடங்கள் மணிக்கு சுமார் ஆயிரம் மைல்கள் வேகத்துடன் சுழன்று கொண்டிருக்கின்றன. ஆனால் துருவங்கங்களுக்கு அருகேயுள்ள இடங்களுக்கு இத்தகைய சுழற்சி இயக்கம் கிடையாது. இதன் விளைவாக முன் சொன்ன காற்றோட்டங்களின் திசை மாறிவிடுகிறது. (படம் 1)



படம் 1

பூமத்திய ரேகைக்கு வட பகுதியில் காற்றோட்டம வட கிழக்காகவும், தென் பகுதியில் தென் கிழக்காகவும் மாறிவிடுகிறது. இக்காற்றோட்டங்களுக்குத் தான் "வணிக காற்றுகள்" (Trade winds) என்று பெயர்.

காற்றோட்டங்களுக்கு பூமி சுழற்சியின் விளைவாக திசை மாறுதல்கள் ஏற்படும்போது சிலசமயம் காற்று மண்டலத்தில் பெருத்த சுழல்கள் ஏற்பட்டுவிடுகின்றன அப்போது காற்றோட்டத்தின் வலிமை அளவுகடந்து விடுவதால் அதைப் புயற்காற்று (Cyclone) என்று கூறுவார்கள். புயற்காற்றுக்குச் சில விசேஷ பண்புகள் உண்டு. அது உண்டாகும்போது ஒரு வட்டத்தின் பரிதியிலிருந்து (Cirumference) மையத்தை நோக்கிக் காற்றோட்டம் ஏற்படும். சாதாரணமாகப் புயற்காற்றின் வடிவம் நீர்ச்சுழிகளைப்போல வட்டமாகவே இருக்கும். சில சமயம் கோழிமுட்டை வடிவமாக இருப்பதுண்டு. ஒரு புயற் காற்றின் வட்டத்தின் விட்டம் சுமார் முந்நூறு மைல்களிலிருந்து இரண்டாயிரம் மைல்கள் வரை இருக்கக்கூடும். ஆனால் உயரம் ஐந்து அல்லது ஆறு மைல்களே இருக்கும். மேலும் இவ்வட்டம் நகர்ந்துகொண்டே போகும். இவ்வாறு நகர்ந்து செல்லும் வேகம் மணிக்கு

இருபது முதல் முப்பது மைல்கள் வரை இருக்கும். இவ் வேகத்திலிருந்து வேறுபட்டது புயற் காற்றின் வேகம். வட்டத்தின் பரிதியிலிருந்து மையத்தை நோக்கி சுழன்று சுழன்று ஓடிவரும் காற்றின் வேகத்தையே புயற்காற்றின் வேகம் என்று கூறுவார்கள். வட்டம் நகர்ந்து செல்லும் வேகத்தைவிட புயற் காற்றின் வேகம் பல மடங்கு அதிகமாகவே இருக்கும். மிகுந்த வலிமையுள்ள காற்றோட்டங்களில் புயற்காற்றுக்கே முதலிடம் கொடுக்க வேண்டும். இந்தியாவின் மேற்கு, கிழக்கு கடற்கரையோரங்களில் புயற்காற்றுக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. புயற்காற்றுடன் மேகங்களும் இழுத்துச் செல்லப்பட்டு மழை உண்டாகும். ஓரிடத்தில் வட்டத்தின் முன் பகுதி தாண்டிச் செல்லும்போதே அதிக மழை ஏற்படுகிறது. பின் பகுதி தாண்டிச் செல்லும் போது காற்றுமட்டிலும் வீசும். சில சமயம் வட்டத்தின் மையத்திலிருந்து பரிதிக்குச் செல்லச் செல்ல காற்றின் அழுத்தம் குறைந்து கொண்டே போகும். இவ்வாறு இருக்கும்போது மையத்திலிருந்து பரிதியை நோக்கி காற்றோட்டம் ஏற்படும். இத்தகைய புயற்காற்றுக்கு எதிர்ப்புயற் காற்று (Anti-Cyclone) என்று பெயர். பெருத்த சேதங்களை உண்டாக்கக்கூடிய புயற்காற்றுகளில் "டோர்னடோ" (Tornado) என்ற வகை தான் மிகவும் அபாயமானது. மணிக்கு இருநூறு முதல் முந்நூறு மைல்கள் வரை இதன் சுழற்சி வேகம் இருப்பதுண்டு.

காற்றோட்டமும் நீரோட்டத்தைப்போல சக்தி வாய்ந்தது. பெரிய பாறைகளையும் புரட்டிச் செல்லும் வலிமை நீரோட்டத்துக்கு உண்டு. அத்தகைய சக்தி காற்றோட்டத்துக்கு இல்லாவிடினும், நாளாவட்டத்தில் நீரோட்டம் செய்யும் அழிவு வேலையைக் காற்றோட்டமும் செய்துவிடுகிறது. சிறுகச் சிறுக பெரிய மலைகளை சிறியமலைகளாகச் செய்துவிடும். பள்ளத்தை மேடாக்கும். காற்றோட்டத்தின் அழிவுவேலை அதன் வேகத்தினால் அதிகம் ஏற்படுவதில்லை. அது அடித்து வரும் சன்ன மணல், தூசி இவைதான் காற்றோட்டத்தின் அழிவு வேலையைச் செய்கிறது. பெரும்பாலும் பாலைவனப் பிரதேசங்களுக்கு அருகில் உண்டாகும் காற்றோட்டங்களினால் ஏற்படும் அழிவு வேலைதான் கடுமையானது. அவ்விடங்களில் மரங்கள் இல்லாததனால் காற்றோட்டத்தின் வலிமை சிறிதும் குறையாமல் இவ்வழிவு வேலை திறம்பட நடைபெறுகிறது. இதன் விளைவாக பாலைவனப் பிரதேசங்களுக்கு அருகேயுள்ள மலைகளும், பாறைகளும் உருத்தெரியாமல் மாறிவிடுகின்றன. எகிப்து நாட்டில் உள்ள பிரசித்திபெற்ற சிலையின் (Spinx) நிலைமை இதற்குச் சான்றாகும்.

சாதாரண காலங்களில் காற்றோட்டத்தின் வலிமை குறைவாகவே இருக்கும். அத்தகைய காற்றோட்டங்களை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தலாம். இத்தகைய காற்றோட்டத்தின் உதவியைக்கொண்டே பாய்மாக் கப்பல்கள் கடலில் மீன் பிடிப்பதற்குச் சென்று வருகின்றன. சில இடங்களில் காற்றோட்டத்தைப் பயன்படுத்தி கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்கப்பட்டுவருகிறது. இதற்காக வைக்கப்பட்டிருக்கும் காற்றாடிகளை (Wind Mill) பல இடங்களில் காணலாம். (படம் 2) மேலும் காற்றோட்டத்தின் திசையை அறிவதற்கும் அதன் வலிமையை அளப்பதற்கும் தகுந்த கருவிகளை விஞ்ஞானிகள் அமைத்துள்ளார்கள். ஒரு காற்றாடியுடன் மின்சார சாதனத்தை இணைத்து காற்றோட்டத்தின் திசையைத் தொடர்ந்து ஒவ்வொரு அரைநிமிஷத்திற்கும் வரைப்படத்தின் (Graph) மூலம் அறிந்துகொள்ளுவதற்கு வசதி செய்திருக்கிறார்கள்.

படம் 2

காற்றோட்டத்தின் வேகத்தை அளந்து காட்டும் கருவிக்கு "**அனிமாமீடர்**" (Anemometer) என்று பெயர். இக்கருவியில் நிமிர்வையாயுள்ள தண்டின்மீது (படம் 3) படத்தில் காண்பதுபோல நான்கு கிண்ணங்கள் பொருத்தி வைக்கப்பட்டிருக்கும். காற்றோட்டத்தின் வலிமையினால் இக்கிண்ணங்கள் வேகமாகவோ அல்லது மெதுவாகவோ சுற்றப்படுகிறது. இச் சுழற்சி இயக்கத்தைக் கொண்டு ஒரு மின்சார டைனமோ (Dynamo) இயங்குமாறு செய்யப்படும். இதிலிருந்து பெறப்படும் மின்னோட்டத்தின் வலிமையைக்கொண்டு காற்றோட்டத்தின் வேகத்தை அறிவதற்கு இக்கருவியில் வசதி செய்யப்பட்டிருக்கும். காற்றோட்டத்தின் வேகம் காற்று மண்டலத்தில், உயரச் செல்லச் செல்ல அதிகரிக்கின்றது. ஏனெனில் பூமியின் மேற்பரப்பில் உராய்வு சக்தியினால் (Friction) அதன் ஓட்டம் தடைபடுகிறது. உயரங்களில் இது நிகழுவதில்லை.



படம் 3

(தொடரும்)

கிராம நலம்-
பகுதி-2. பஞ்சாயத்து-அரசினர் இதழ்

GRAMA NALAM
PART II PANCHAYAT GAZETTE

பஞ்சாயத்து யூனியன்கள்-பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களில் அலுவல்களை நடத்துதல்

[Panchayat Unions-Transaction of business at meetings of Panchayat Union Councils-Instructions-Issued.]

ஒரு பஞ்சாயத்து யூனியன் மன்றத்தின் தலைவர் ஒருவர், மன்றக் கூட்டத்தின் அலுவல் குறிப்புகளில் சில விஷயங்களை மட்டும் கவனித்துவிட்டு, மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அலுவல் குறிப்பில் கண்டுள்ள பாக்கியுள்ள அம்சங்களை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கூட்டத்தை தள்ளிவைத்து, அதன்படி குறிப்பு எழுதிவைத்துவிட்டு சில கவுன்சிலர்களுடன் அந்த தலைவர் கூட்டத்தை விட்டு வெளியேறிவிட்டதாக ஒரு சம்பவம் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்துள்ளது. இருந்தாலும், அந்தக் கூட்டம் மறுபடியும் தொடர்ந்து அப்பொழுதே நடைபெற்றிருக்கிறது. போதிய "கோர"த்துடன்" மன்றத்தின் உப தலைவர் தலைமை வகிக்க, கூட்டம் தொடர்ந்து நடந்து, குறிப்பில் கண்டுள்ள பாக்கியுள்ள அம்சங்கள் பரிசிலிக்கப்பட்டு பைசல் செய்யப்பட்டன. பாக்கியிருந்த அம்சங்கள் பற்றி கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளும் குறிப்புப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டன. யூனியன் மன்றத் தலைவர் அவர்களால் ஒத்திவைக்கப்பட்ட ஒரு கூட்டம் தொடர்ந்து நடைபெறலாமா? கமிஷனரிடமிருந்து குறிப்புப் புத்தகத்தைக் கேட்டு பெறலாமா? இன்னொரு கூட்டம் கூட்டப்பெறவேண்டுமானால், கூட்டத்திற்தான் போதிய அறிவிப்பு முன்கூட்டியே செய்யப்படவேண்டும் என்ற விதிமுறை உள்ளதே, அந்த முறை அனுசரிக்கப்படவேண்டிய தேவையில்லையா? என்ற இது போன்ற கேள்விகள் இந்தச் சம்பவத்தை ஒட்டி எழுப்பட்டுள்ளன.

2. பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களில் நடைபெற வேண்டிய வேலை முறைகள் பற்றிய விதிகள் என்னென்ன என்பது தல நிர்வாகத்துறையின் 8-10-60 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1677-ல் அறிக்கை எண் 10-ல் கண்டுள்ளது. ஆனால், "கோரம்" இல்லாத நிலை தவிர, மற்றபடி வேறு காரணங்களுக்காக மன்றக் கூட்டத்தை தலைவர் ஒத்திவைக்கின்ற அதிகாரம் எதுவும் இந்த விதிகளில் இடையாது. நகராட்சி மன்றங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அவைகளின் கூட்டங்கள் நடைபெற வேண்டிய முறைகள் பற்றி ஒரு மாதிரி ஒழுங்கு முறைகளை (.Iodel Regulations) அரசாங்கம் ஏற்படுத்தி, அவற்றை நகராட்சி மன்றங்கள் நடைமுறையில் அனுசரிக்க வேண்டும் என்று வெகுவாக சிபார்சு செய்துள்ளது. மேற் குறிப்பிட்ட மாதிரி விதிகளில் மூன்றுவது விதியின்படி, நகராட்சி மன்றத்தின் எந்தத் கூட்டமும் தலைவரால் சட்டப்படி செல்லக் கூடிய காரணங்களுக்காக ஒத்தி வைக்கப் படலாம். இந்தக் காரணங்கள் குறிப்புப்புத்தகத்தில் (Minutes Book) எழுத்து மூலமாக பதிவு செய்யப் படவேண்டும். இந்த மாதிரி ஒழுங்கு முறைகள், பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்களில் செயல்படுத்துவதற்காக இலலையென்றாலும், பஞ்சாயத்து யூனியன் மன்றத்தலைவர், நியாயமான காரணங்களுக்காக, யூனியன் மன்றத்தின் எந்தக் கூட்டத்தையும் ஒத்திப்போடலாம், அந்தக் காரணங்களை குறிப்புப்புத்தகத்தில் பதிவு செய்யவேண்டும். ஆகவே, எழுத்துமூலமாகப் பதிவு செய்யப்பட்டு, நியாயமான காரணங்களுக்காக ஒரு கூட்டமானது, தலைவரால் ஒத்திவைக்கப்பட்டால், அந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெறக் கூடாது. வேறொரு கூட்டம் கூட்டப்பெறவேண்டுமென்றால், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் கூட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள கூட்டங்கள் கூட்டுவது, அலுவல்கள் நடத்துவது சம்பந்தமாக உள்ள விதிமுறைகள் அனுசரிக்கப்படவேண்டியது அவசியமாகும். மேற்குறிப்பிட்ட உத்திரவுகள் எதிர்காலத்தில் பஞ்சாயத்து யூனியன் மன்றக் கூட்டங்கள் நடத்துவதில் அனுசரிக்கப்படவேண்டும்.

(கிராம நல, தல நிர்வாகத்துறை 19—8—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2282)

சமுதாய அபிவிருத்தித் திட்டம்–பிரசாரம்–செய்தி நிலையங்கள் அமைத்தல்

[Community Development Programme–Publicity–Location of Information Centres–Instructions-Issued.]

வட்டாரத் தலைமை நிலைய அலுவலங்களுக்குள்ளாகவே செய்தி நிலையங்கள் அமைத்துச் செயல்படபோதிய இடவசதிகள் செய்யப்படவேண்டும் என்பது, 1958-ம் ஆண்டில் ஆபூவில் நடைபெற்ற சமுதாய அபிவிருத்தி சம்பந்தமான வருடாந்தர மகாநாட்டின் பரிந்துரைகளில் ஒன்ருகும். வட்டாரத்தலைமை அலுவலங்களுக்கு புதிதாக கட்டடங்கள் கட்டப்பட்டும் பொழுது, செய்தி நிலையங்களுக்குத் தேவையானவைகள் பற்றியும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் பரிந்துரை செய்யப்பட்டது. மேற்கண்ட பரிந்துரைகளின்படி எடுக்கப்பட்ட நடவடிகளை ஒட்டி, இப்பொழுதுள்ள வட்டாரங்களில் சேர்க்கப்பட்டுள்ள செய்தி நிலையங்களின் இட அமைப்புக்களைப் பற்றிய விவரங்களை அனுப்புமாறும மாவட்டக் கலெக்டர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

2. வட்டார அலுவலகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள செய்தி நிலையங்களில் பெரும்பாலானவற்றிற்கு போதிய இடவசதிகள் இல்லையென்றும், வட்டார அலுவலகக்கட்டடத்தின் தாழ்வாரங்களிலோ, [அல்லது தனியாக ஒரு கட்டடத்திலோ, அல்லது மனமகிழ் மன்ற இடங்களிலோ தான் பெரும்பாலான செய்தி நிலையங்கள் இயங்குகின்றன என்பது கலெக்டர்கள் அனுப்பிவைத்த அறிக்கைகளிலிருந்து தெரிகிறது. பிரதேச மக்களுக்கு போதிய தகவல்களை அளிப்பதிலும், அவர்களிடையே பிரசாரம் செய்யவும், செய்தி நிலையங்களின் வேலை மிகவும் முக்கியமானவையாக இருப்பதால், அவை எல்லோருக்கும் வசதியான ஒரு இடத்தில் அமைக்கப்படுவதும், அதுவும் மன்றக் கூட்டத்தையே (Council Hall) செய்தி நிலையங்களுக்காக உபயோகப்படுத்திக் கொள்வது இன்னும் சிலாக்கியமானது என்றும் கருதப்படுகிறது. அலுவலகத்தின் முக்கிய கட்டடத்தின் உள்ளேயே ஒரு தகுதியான அறையில் செய்தி நிலையத்தை அமைத்துக் கொள்ள எங்கெங்கு வசதி இல்லையோ, அங்கெல்லாம், பஞ்சாயத்து யூனியன் மன்ற கூட்ட கட்டடத்தில் (Council Hall)செய்தி நிலையத்தை அமைத்துக்கொள்ளலாம் என்று தக்க நடைமுறை உத்தரவுகளை மாவட்டக் கலெக்டர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறுர்கள்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 31—7—61 தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 70631)

பிரதேச செஸ் சர்சார்ஜ்—பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியம்—முன்பணம் வழங்குகின்ற அனுமதி

[Local Cess Surcharge-Local Cess Surcharge Matching Grant-Sanction of advance payments.]

ஒவ்வொரு ஆண்டும் பஞ்சாயத்து யூனியன் மன்றத்திற்கு ஒரு 'பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானிய'த் தொகை ஒன்றை அரசாங்கம் அளிக்க வேண்டுமென்று 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் 129-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. பஞ்சாயத்துக்கள் சட்டம் 116-வது பிரிவின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிகப்பட்ச விகிதாச்சாரத்திற்கு மேலும் அதிகமாக பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரத்தில் விதிக்கப்படுகின்ற பிரதேச செஸ் சர்சார்ஜ் வருமானத்தின் நிர்ணயிக்கப்பட்ட சத விகித அளவில் இந்த ஈட்டு மானியமானது கணக்கிடப்படும். மேற்கண்ட சட்ட பூர்வமான வசதிகள் செய்யப்பட்டுள்ளதை ஒட்டி, பஞ்சாயத்து அபிவிருத்திக்கான திட்டமிடப்பட்ட வரவு-செலவு திட்டத்தை தயாரிக்கும்பொழுது இந்த அம்சத்தின்கீழ் கடன் வாங்கிக்கொள்ள 1960-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 16-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை 664-ன் இணைப்பின் 19-வது பாராவிலும், மறுபடியும் 1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை எண் 211-ன் 29-வது பாராவிலும் இதைப்பற்றிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. 1961-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதியிட்ட அரசாங்க அறிக்கை எண் 65783/கணக்குகள்—இ/61-ல். இந்த பிரதேச செஸ் சர்சாஜ் தவிர்க்க முடியாதது என்பதை எல்லா பஞ்சாயத்து யூனியன் மன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

3. 1961-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 9-ம் தேதியிட்ட கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 2228-ன் 10-வது பாராவில் பிரதேச செஸ் போலவே, பிரதேச செஸ் சர் சார்ஜும், பிரதேச செஸ் சர் சார்ஜ் ஈட்டு மானியத்தின் முன்பணத் தொகைகள் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வழங்கலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. பாக்கியுள்ள தொகைகள் ஒவ்வொரு ஆண்டிலும், எப்ரல், ஜூலை, அக்டோபர், டிசம்பர் மாதங்

களில் கால் ஆண்டுக்கொரு முறை என்ற தவணையில் சரிக்கட்டப்பட வேண்டும். பாக்கியுள்ள தொகைகளை இறுதியாகச் சரிக்கட்டுதல் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதத்தில் அது சம்பந்தப்பட்ட பசலி ஆண்டுக்குப் பிறகு, ஜமாபந்தியெல்லாம் முடிந்த பிறகு, நடைபெறும். மாவட்டக் கலெக்டர்கள் இதன்படி பணம் வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. பஞ்சாயத்து யூனியன்களுக்கு சேர வேண்டிய பிரதேச செஸ் சர்சார்ஜ் முன்பணம் கொடுப்பதனால் உண்டாகும் செலவுத் தொகையானது " vii. நிலவரி—சாதாரண வருமானம்—லோகல் போர்டுகள் சார்பாக 1961–62-ல் வசூலிக்கப்பட்ட நில, மற்றும் பிரதேச செஸ்களை லோகல் போர்டுகளுக்கு அளிக்கும் பணத்திலிருந்து குறைத்தல்—பிரதேச செஸ் சர்சார்ஜினால் அளிக்கப்படும் தொகை" என்ற தலைப்பில் பற்று வைக்கவேண்டும். பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியத்துக்காக முன்பணமாக அளிக்கப்படும் செலவுத் தொகையானது " 57. பல் வகைகள்—(எப்) உதவி மானியத் தொகைகள்—எக்ஸ். பஞ்சாயத்து யூனியன்களுக்கு பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியங்கள் " என்ற தலைப்பில் பற்று வைக்கவேண்டும்.

(இராம நல, தல நிர்வாகத் துறையின் 17—8—61 தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 149375)

அறக்கொடைகள்—மாவட்டக் கழகங்களினால் நிர்வகிக்கப்பட்டுவந்த அறக்கொடைகள்—மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட பிறகு நிர்வகித்தல்

[Endowments-Endowments managed by District Boards-Administration after District Boards cease to exist—Instructions Issued.]

தற்சமயம் மாவட்டக் கழகங்கள் சில அறக் கொடைகளை நிர்வகித்து வருகின்றன. அவைகளைக் கீழ்கண்ட முறையில் பெருவாரியாக வகைப்படுத்தலாம் :—

(i) **ஒரு பஞ்சாயத்து யூனியனில்** அறக் கொடைச் சொத்துக்கள் இருந்து, இன்னொரு **பஞ்சாயத்து யூனியனில்** அந்தச் சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தை உபயோகப்படுத்துதல்.

(ii) **ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில்** அறக் கொடைச் சொத்துக்கள் இருந்து, அவையல்லாத **வேறொரு பஞ்சாயத்து யூனியனில்** இந்தச் சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்தை உபயோகப்படுத்துதல்.

(iii) **ஒரு பஞ்சாயத்து யூனியனில்** அறக்கொடைச் சொத்துக்கள் இருந்து, அந்தச் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானத்தை **ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில்** உபயோகப்படுத்துதல்.

(iv) **ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில்** அறக் கொடைச் சொத்துக்கள் இருந்து, அவைகளிலிருந்து வரும் வருமானத்தை **ஒன்றுக்கு மேத்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில்** உபயோகப்படுத்துதல்.

2. மாவட்டக் கழகங்கள் கடைசியாக கலைக்கப்படும் பொழுது, இந்த அறக் கொடைகளை நிர்வகிக்க சரியான ஏற்பாடுகள் இருக்கவேண்டும். பல்வேறு வகைப்பட்ட அறக் கொடைகளும், ஒவ்வொன்றிற்கும் உள்ள தன்மைகளைப் பொருத்து அவை விஷயத்தில் பல்வேறுப்பட்ட வழி வகைகள் கையாளப்பட வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது. ஒவ்வொரு இனத்தையும் தனித்தனியாக ரெவின்யூ போர்டு பரிசீலனை செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுகிறது. அப்படிப் பரிசீலனை செய்து ரெவின்யூ போர்டு ஒவ்வொன்றிற்கும் தகுதியான உத்தரவுகள் பிறப்பிக்கவேண்டும். அதுவரையில், மாவட்டக் கலெக்டர்கள் (மாவட்டக் கழகங்களின் விசேஷ அதிகாரிகள் என்ற முறையில்) அறக் கொடைகளைத் தொடர்ந்து நிர்வகித்து வருவார்கள்.

(3) மேலே இரண்டாவது பாராவில் சொல்லப்பட்டுள்ள உத்தரவுகளைப் பிறப்பிக்க, ரெவின்யூ போர்டுக்கு, (கலெக்டர்களுக்கும் பிரதி அனுப்பவேண்டும்) சம்பந்தப்பட்ட மாவட்டக் கழகங்களினால் நிர்வகிக்கப்பட்டு வரும் அறக்கொடைகள் பற்றிய முழு விவரங்களையும் அனுப்பும்படி மாவட்டக் கழகங்களின் விசேஷ அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(இராமநல, தல நிர்வாகத் துறையின் 4—8—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2184.)

பணித்துறை—மாவட்டக் கழகங்கள்—உயர்நிலைக் கல்விப் பகுதி—2–10–61க்குப் பிறகு தொடர்ந்து இருத்தல்

[Establishment-District Boards-Secondary Education Section-Continuance after 2-10–1961—Orders Passed.]

1961-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியிலிருந்து மாவட்டக் கழங்களினால் (District Boards) நிர்வகிக்கப்பட்டு வந்த எல்லா உயர் நிலைப் பள்ளிகளும் அவைகளுடைய வரவுகளையும், கடன்களையும் சேர்த்து, மாவட்டக் கலெக்டரிடம் மாற்றப்பட்டு, அவர் வசம் ஒப்படைக்கப்படவேண்டும் என்று

கிராம நல, தலநிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர்மீ 26-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 2611-ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மாவட்டக் கழக கல்வி அதிகாரியின் பணியையும் மாவட்டக்கழக அலுவலகத்தில் உயர்நிலைக் கல்விப் பிரிவுப் பகுதிகளில் பணியாற்றுகிற சிப்பந்திகளின் பணியையும், மறு உத்தரவுகள் பிறப்பிக்கப்படும்வரையில், மாவட்டக் கலெக்டரிடம் ஒப்படைக்கவேண்டும் என்று அந்த ஆணையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்டக் கழக கல்வி அதிகாரி, மாவட்ட கலெக்டரின் தனி உதவியாளரின் (தல நிர்வாகம்) நேரடி அதிகாரத்தின் கீழ் பணியாற்றுவார் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

2. மாவட்டக் கழகங்களின் பொதுப் பகுதியினரால் உயர்நிலைக் கல்வி பிரிவு சம்பந்தப்பட்ட இதுகாறும் செய்யப்பட்டு வந்த வேலைகள் மிகவும் பெருவாரியாகவும், அதிகமாகவும் இருப்பதை முன்னிட்டும், உயர்நிலைக் கல்விப் பிரிவினராலேயே இனிமேல் செய்யப்படவேண்டிய அதிகமான வேலைகளை முன்னிட்டும், 1961-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியில் மாவட்டக் கழகங்கள் கலைக்கப்பட்ட பிறகு, உயர்நிலைக் கல்வி சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க என்று அதிகப்படியான பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

3. 1961-ம் ஆண்டு அக்டோபர்மீ 2-ந் தேதியிலிருந்து, உயர்நிலைக் கல்விப் பிரிவைத் தொடர்ந்து நடத்துவது பற்றி, அரசாங்கம் கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது :—ஒவ்வொரு உயர்நிலைக் கல்வி அலுவலகத்திற்கும் 100 ஆசிரியர்களுக்கு ஒரு லோயர் டிவிஷன் குமாஸ்தாவும், ஆசிரியர்களின் எண்ணிக்கை 100-க்கு மேல் இருந்து அந்த அதிகப்படியான எண்ணிக்கை 60-க்கு குறையாமலும் இருந்தால், அதிகப்படியாக இன்னொரு லோயர் டிவிஷன் குமாஸ்தாவும் இருக்கலாம். அத்துடன், உயர்நிலைக் கல்விப் பிரிவுக்கு கீழ்க்கண்ட முறையில் சிப்பந்திகள் நியமனம் செய்துகொள்ள அனுமதி அளிக்கப்படுகிறது :—

மேற் பார்வையாளர்—இரண்டு.
லோயர் டிவிஷன் குமஸ்தாக்கள்—நான்கு.
தட்டெழுத்தாளர்—ஒன்று.
உடன் ஆட்கள்—இரண்டு.
பணியாட்கள்—நான்கு.

உயர்நிலைக் கல்விப் பிரிவுச் சிப்பந்திகளுக்கான சம்பளமும், படியும், 1961-ம் ஆண்டு செப்டம்பர்மீ 26-ந் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறை அரசாங்க ஆணை எண் 2611-ல் உத்தரவிடப்பட்டுள்ளபடி, உயர்நிலைக் கல்வி நிதியிலிருந்து சமாளிக்கப்படவேண்டும்.

(கிராம நல தல நிர்வாகத் துறையின் 30—9—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2689-ன் சுருக்கம்.)

பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும்—பஞ்சாயத்துக்கள் வானொலிப் பெட்டிகளை வைத்துப் பராமரித்தல்–ஒரு பராமரிப்பு நிறுவனத்தை உருவாக்குதல்.

[Panchayats and Panchayat Unions-Maintenance of Radio Sets by Panchayats–Creation of a Maintanance Organisation-Orders-Issued.]

1961-ம் ஆண்டு மார்ச்சுமீ 8-ந் தேதியிட்ட பொது மராமத்துத் துறையின் அரசாங்க ஆணை எண் 648-ல், சமுதாய வானொலிப் பெட்டிகளை (Community Radio Sets) பராமரிக்கும் பொறுப்பினை பஞ்சாயத்துக்களிடமும், ' உள்ளாட்சிக் ' கழகங்களிடமும் (Local Boards) அவைகளே அதை ஏற்று நடத்தும்படியாக ஒப்படைத்து, அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அந்த ஆணையிலேயே, சமுதாய வானொலிப் பெட்டிகளை நிறுவுகின்ற வேலை பிரதேசத்தில் உள்ள கம்பெனிகளிடம் ஒப்பந்தப் புள்ளிகளை கேட்டு வாங்கி, அதன் பிறகு ஒப்படைக்கப்படவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1961-ம் ஆண்டு ஏப்ரல்மீ 1-ந் தேதி முதல் மாநில ஒலிப்பரப்புத் துறை (State Board Casting Department) கலைக்கப் பட்டுவிட வேண்டும் என்றும் மேலும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன் பிறகு இந்த கலைக்கப்படும் தேதி ஜூலை 1, 1961, ஆகஸ்ட் 1, 1961, செப்டம்பர் 1, 1961 என்று தள்ளிப்போடப்பட்டது.

2. மாநில ஒலிபரப்புத்துறை கலைக்கப்பட்டு, சமுதாய வானொலிப்பெட்டிகளை பராமரிக்கும் பொறுப்பை தனிப்பட்ட பஞ்சாயத்துக்களிடமே ஒப்படைத்திருப்பதினால், வானொலிப் பெட்டிகளை பழுதுபார்க்க வசதிகள் நகரங்களில் மட்டும் தான் இருப்பதினாலும், நகரங்களிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள சிறுசிறு பஞ்சாயத்துக்களுக்கு இதனால் அதிகச் சிரமம் ஏற்படும் என்று அரசாங்கத்திற்கு இப்பொழுது கோரிக்கை செய்யப்பட்டுள்ளது. இந்தப் பஞ்சாயத்துக்கள், வானொலிப்பெட்டிகளை பழுதுபார்க்கவும் பேட்டரிகளை மாற்றியமைக்கவும் இதுபோன்ற வேலைகளுக்கு தனிப்பட்ட கம்பெனிகளை நம்பியிருந்தால், அதனால் அதிகப்படியான இக்கட்டுகளும், காலதாமதமும் ஏற்படும் என்றும் சொல்லப்படுகிறது. அதனால், பஞ்சாயத்து வானொலிப்

பெட்டிகளை பராமரிக்க என்று ஒரு ஸ்தாபன அமைப்பு (Organization) அரசாங்கத்தினிடம் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கம் இந்தக் கோரிக்கையைப் பரிசிலனை செய்தது. பஞ்சாயத்து வானொலிப்பெட்டிகளை பராமரிக்க என்று வேண்டிய ஏற்பாடுகளை செய்ய அரசாங்க அமைப்பு ஒன்று இருந்து, அதனுல் பஞ்சாயத்துக்கள் அப்படி அவைகளைப் பாரரமரிப்பதில் மிகவும் அதிகமான செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்ற நிலை இருந்தால், பஞ்சாயத்துக்கள் இந்த வானொலிப் பெட்டிகளை நல்ல முறையில் வைத்துக்கொள்ள முடியும் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்கிறது. பஞ்சாயத்து வானொலிப்பெட்டிகளை பராமரிக்க என்று ஒரு அமைப்பை உருவாக்கும்பொழுது, பஞ்சாயத்துக்களுக்கு இந்தத் துறையில் சிறந்த சேவையை எவ்வாறு அளிக்கலாம் என்பதைப்பற்றி ஆராயவேண்டியதும் அவசியமாகிறது. பேட்டரிகளினுல் இயக்குவிக்கப்படுகின்ற வானொலிப் பெட்டிகளுக்காகும் செலவு (Battery sets) மின்விசையினுல் இயக்குவிக்கப்படுகின்ற வானொலிப் பெட்டிகளுக்காகும் செலவு (Main sets) இந்த இரண்டையும் வேறுபடுத்திப்பார்க்கவேண்டியதின் அவசியத்தையும் அரசாங்கம் பரிசிலனை செய்தது.

4. 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துக்கள் சட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தச் சட்டத்தின்படி, பஞ்சாயத்துக்களின் அபிவிருத்தியில் கலெக்டர்களுக்கும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும் முக்கிய பங்குண்டு. பஞ்சாயத்துக்கள் ஓர் ஒருங்கிணைந்து காட்டும் முறையில் பஞ்சாயத்து யூனியன்களில் இணையும்படியாக அமைக்கப்பட்டுவருகின்றன. கிராம அபிவிருத்திக் கமிஷனர் பஞ்சாயத்து யூனியன்களில் மேற்பார்வையாளர் (Inspector) ஆவார். இதற்காக எந்த புதிய அமைப்பு முறை அமைக்கப்பட்டாலும், அந்த அமைப்பு முறையானது இப்பொழுது இயங்கிவருகின்ற வானொலிப் பெட்டிகளை பராமரிக்கின்ற பொறுப்பினை ஏற்றுக்கொள்வது மட்டுமின்றி, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள்ளாக, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு வானொலிப்பெட்டி வழங்கப்படவேண்டும் என்று மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள இலட்சியத்தை பூர்த்திசெய்து தரும்படியான வேலையையும் ஏற்றுக்கொள்கிற ஒரு ஸ்தாபன அமைப்பாக அது இருக்க வேண்டும். இந்த இலட்சியத்தை அடையவேண்டுமென்ருல், இப்பொழுது உள்ள வானொலி பெட்டிகளைப் பராமரித்து வருகிற பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள இந்த ஸ்தாபன அமைப்பானது, தற்சமயம் வானொலிப்பெட்டி இல்லாத ஒவ்வொரு கிராமங்களிலும் ஒரு வானொலிப்பெட்டியை அமைப்பது பற்றிய பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும். இந்தப் புதிய அமைப்பு முறையானது, பஞ்சாயத்துக்களின் அபிவிருத்திக்காக பொறுப்பேற்றுச் செயலாற்றும் ஸ்தாபனத்துடன் நெருங்கிய தொடர்புடனும், அதன் அதிகாரத்திற்குட்பட்டும் செயலாற்றவேண்டும்.

5. இந்த அம்சங்களையெல்லாம் கவனத்தில் இருத்தி, பரிசிலனை செய்து, பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு ஸ்தாபனம் (Panchayet Radio Maintanance Organisation) என்று ஒரு புதிய ஸ்தாபனத்தை அமைக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த அமைப்பினிடம் கீழ்க்கண்ட பொறுப்புக்கள் தரப்படும்—

(i) சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தின்கீழ் கிடைக்கின்ற நிதிகளிலிருந்து வாங்கியுள்ள வானொலிப் பெட்டிகளையும் சேர்த்து, பஞ்சாயத்துக்களில் நிறுவப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளை பராமரித்துக் கொள்ளுதல் ;

(ii) சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிற சினிமா வண்டிகளைப் (Cinema Trailer Units) பராமரித்தல்.

(iii) ஒலிப் பதிவு செய்யும் கருவி (Tape-Recorders) இசைத்தட்டு சங்கீதம் வழங்கும் கருவிகள் (Record players) ஆகியவற்றையும் சேர்த்து சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற மற்ற கருவிகளையும் பராமரித்துக்கொள்ளுதல்.

(iv) இந்திய அரசாங்கத்தினிடமிருந்து பெறுகிற புதிய சமுதாய வானொலிப் பெட்டிகளை நிறுவுதல்.

(v) மூன்ருவது திட்ட முடிவுக்குள் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு வானொலிப்பெட்டி பெறும் படியான வகையில் திட்டமிட்டு வேலை செய்தல்.

(vi) இப்பொழுது சில பஞ்சாயத்துக்களில் இருக்கின்ற வெட் பாட்டரி செட்டுகளுக்குப் பதிலாக (Wet Battery sets) மெயின் செட்டுகளாகவோ (Main sets) டிரை பேட்டரி செட்டுகளாகவோ (Dry Battery sets) மாற்றி அமைத்தல்.

6. பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு ஸ்தாபனம், அரசாங்கத்தின் கிராம அபிவிருத்திக் கமிஷனரின் நேரடி அதிகாரத்திற்குட்பட்டு பணியாற்றும், மேற்பரர்வை ரேடியோ சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியுடன் இணைக்கப்பட்டு, நிர்வாக சம்பந்தமான விஷயங்களில் எல்லாம் அவருடைய நேரடி அதிகாரத்திற்கும், மேற்பார்வையின் கீழும் பணியாற்றுவார்.

9. இப்பொழுது உள்ள சிப்பந்திகளை சேர்த்துக் கொள்ளுதல் :—கூடுமானவரையில், இப்பொழுது மாநில ஒலி பரப்புத் துறையில் (இது 1—9—1961 முதல் கலைக்கப்பட்டு விடும்) பணியாற்றி வரும் சிப்பந்திகளை, அமைக்கப் படப்போகின்ற புதிய அமைப்பில் அதே மாதிரி உள்ள வேலைகளில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 28-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2337-ன் சுருக்கம்.)

பஞ்சாயத்து வானொலிப் பராமரிப்பு ஸ்தாபனம் அமைத்தல்

[Panchayat Radio Maintenance Organisation-Creation-of Further orders—issued]

1961ஆம் ஆகஸ்ட்மீ 28-ம்தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத் துறையின் அரசாங்க ஆணை எண் 2337-ல் பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு ஸ்தாபனம் என்று ஒரு புதுஸ்தாபனம் அமைக்கஉத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதற்காக ஆகும் செலவை "47-எ சமுதாய நல அபிவிருத்தித் திட்டம்; தேசிய வளர்ச்சிப் பணியும் பிரதேச அபிவிருத்தி வேலைகளும்—எ. சாதாரணமானவை (i) சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகள்—II திட்ட வேலை/வட்டாரத் தலைமையிடங்கள்" என்ற தலைப்பின் கீழ் பற்று வைக்கப் பட வேண்டும் என்று உத்திரவிடப்பட்டது.

2. இந்த செலவானது ஒரு "புது பணித்துறை" (New Service) யை உள்ளடக்கியதாகும், செலவினத்தையும் சேர்த்து இதற்கான சட்டமன்ற ஒப்புதலானது விரைவில் தயாரிக்கப்பட இருக்கும் துணை மதிப்பீடுகளில் பெறப்படும். சட்ட மன்றத்தின் ஒப்புதல் கிடைக்கும் வரையில், இந்தச் செலவானது "சில்லறைச் செலவுகளுக்கான நிதி" (Contingency Fund) யிலிருந்து முன் பணமாகப் பெற்று சமாளிக்கப்பட வேண்டும். எவ்வளவு செலவு ஆகும் என்பது பற்றி கிராம அபிவிருத்திக் கமிஷனர் வேண்டிய விவரங்கள் கொடுத்தும், "சில்லறைச் செலவுகளுக்கென்று உள்ள நிதியிலிருந்து" முன் பணம் பெறுவதற்கான அனுமதி அளிக்கும் உத்தரவினை நிதித் துறை பிறப்பிக்கும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ந்தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 165450]

பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும்—கணக்குகளைப் பராமரித்தல்—

[Panchayats and Panchayat Union Councils–Maintenance of Accounts—Instructions–Issued)

1961ஆம் அக்டோபர்மீ 2-ந்தேதியில் துவக்கப்படும் பஞ்சாயத்து யூனியனில் உள்ள பஞ்சாயத்துத் தலைவர்களுக்கெல்லாம் சம்பளம் உத்திரவிடும் புத்தகங்கள் (Pay order books) அளிக்கப்படவேண்டும் என்று முன்பே உத்திரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவருக்கும் இந்த சம்பளம் உத்திரவிடும் புத்தகம் அளிக்கப்பட்டு, அதை பெற்றுக் கொண்டதற்கு அத்தாட்சியாக இணைப்பு ஒன்றில் உள்ள இனப் படிவத்தில் (Form) அவருடைய கையொப்பத்தை பெற வேண்டும். அதே சமயத்தில், பஞ்சாயத்துத் தலைவரின் மாதிரிக் கையெழுத்துக்கள் (Specimen Signatures) மூன்று, இணைப்பு இரண்டில் உள்ள இனப்படிவத்தில் (Form) பெறப்பட வேண்டும். இந்த மூன்று மாதிரிக் கையெழுத்துக்களும் தனித் தனியாக வெட்டி எடுக்கப்பட்டு, அதில் ஒன்று (வி.பி.சி. இனப்படிவம் 5) லெட்ஜர் பக்கத்தின் தலைப்பில் ஒட்டப் பட வேண்டும். அதனால் கணக்கர், இந்த மாதிரிக் கையெழுத்து, சம்பளம் உத்திரவிடும் புத்தகத்தில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டுப்பார்க்க வசதியாக இருக்கும். மற்ற இரண்டு கையெழுத்துக்களும், இதற்காக வைக்கப்பட்டு மாதிரிக் கையெழுத்து ரிஜிஸ்டர்கள் இரண்டிலும் தனித்தனியாக ஒவ்வொன்றிலும் ஒட்டப்படவேண்டும். இவைகளில் ஒன்று மானேஜரால் பத்திரமாக பூட்டி வைக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னொன்று, மானேஜரால் அன்றாட அலுவல்களுக்காக உபயோகப்படுத்தப் பட வேண்டும்.

3. பஞ்சாயத்து தலைவர்களுக்கு வழங்கப்பெறுகிற சம்பளம் உத்தரவிடும் புத்தகங்கள் எத்தனை என்று கணக்கு வைத்துக் கொள்ள ஒரு ரிஜிஸ்டர் ஆரம்பிக்கப்பட வேண்டும். இந்த ரிஜிஸ்டரில் ஒவ்வொரு பஞ்சாயத்துக் கென்று ஒரு பக்கம் ஒதுக்கப்படவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் வழங்கப்பட்ட புத்தகங்கள் எவ்வளவு என்பதும், புத்தகத்தில் உள்ள செக்குகளின் வரிசைக் கிரமமான எண்கள் என்னென்ன என்பதும் குறிக்கப்பட வேண்டும். இந்தப் புத்தகங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அத்தாட்சியாக பஞ்சாயத்து தலைவர்கள் அளிக்கும் சீட்டும், புத்தகத்தின் சம்பந்தப்பட்ட பக்கத்தில் ஒட்டப்பட வேண்டும். அத்துடன், சம்பளம் உத்தரவிடும் புத்தகத்தை உபயோகிக்க தொடங்கியாகிவிட்டது என்று பஞ்சாயத்து தலைவர் அனுப்பும் செய்தியும், சம்பந்தப்பட்ட பக்கத்தில் ஒட்டப்பட வேண்டும். சம்பளம் உத்திரவிடும் புத்தகத்தில் எல்லாப் பக்கங்களையும் உபயோகப்படுத்தி விட்ட பிறகு பஞ்சாயத்துத் தலைவர் புதிய புத்தகம் வேண்டுமென்று கேட்கும் அளவும், இந்தப் புத்தகத்தில் ஒட்டப் பட்டு, புதிதாக, ஒரு பக்கம் அந்தப் பஞ்சாயத்துக்காக ஆரம்பிக்கப்படவேண்டும். அந்தப் பக்கத்தில், புதிய சம்பளம் உத்திரவிடும் புத்தகம் வழக்கத்திற்கு வந்து விட்டது என்ற தகவல் குறிப்பிட வேண்டும்.

(கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம்ஆண்டு செப்டம்பர் மாதம் 13ந் தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 170591-ன் சுருக்கம்)

தந்தி முகவரி–பதிவு செய்து கொள்ளுதல்

["PANCHCOM"–Registration by certain Panchayat Union Commissioners.]

கீழ்க்கண்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் தங்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்கான சுருக்கமான தந்தி முகவரியினை (Telegraphic address) "பாஞ்காம்" "Panchcom" என்று பதிவு செய்துகொண்டுள்ளார்கள் :—

1. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், திருப்பூர், கோயமுத்தூர் மாவட்டம்.
2. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், மேல் புவனகிரி, தென் ஆர்க்காடு மாவட்டம்.
3. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், அம்மாபேட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.
4. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், புதூர், திருநெல்வேலி மாவட்டம்.
5. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், தியாகதுர்கம், தென் ஆர்க்காடு மாவட்டம்.
6. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், செஞ்சி, தென் ஆர்க்காடு மாவட்டம்.

[கிராம நல, தல நிர்வாகத்துறையின் 21—8—61 தேதியிட்ட அரசாங்க மெமோ எண் 143414]

பஞ்சாயத்து அபிவிருத்தி–கிராமப் பஞ்சாயத்துக்களின் சார்பாக கிராம அதிகாரிகள் ஆற்றவேண்டிய வேலைகளை வரையறுத்தல்–பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் அளித்தல்

[Panchayat Development–Specification of Duties to be performed by the village officers on behalf of Village Panchayats–Payment of Panchayat Development Allowance–Further orders issued.]

1960–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9–ம் தேதியிட்ட கிராம அபிவிருத்தித் துறையின் ஆணை எண் 644–ல் எழாவது பாராவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி, கிராம அளவில் , கிராம பஞ்சாயத்துக்கள் திட்டமிடும் அதிகாரம் பெற்ற ஸ்தாபனங்களாகச் செயலாற்றும். (Village Panchayats will function as Planning Authorities at the village level) இந்த அரசாங்க ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, மேலும் குறிப்பிடத்தக்க பொறுப்புக்கள், பஞ்சாயத்துக்களிடம் அளிக்கப்பட்டுள்ளன. உணவு, விவசாயத் துறையின் 1960–ம் ஆண்டு நவம்பர் மாதம் 16 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 3792–ல், கிராமத்திற்கான உணவு உற்பத்தி திட்டத்தை உருவாக்கி செயல் படுத்துகின்ற பொறுப்பு, பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961–ம் ஆண்டு எப்ரல் மாதம் 4–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 972–ல், பஞ்சாயத்துக்களின் உபயோகத்திற்காக அரசாங்கத்தின் வசத்தில் உள்ள பொது நிலங்கள் கிடைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961–ம் ஆண்டு மே மாதம் 30–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1550–ல், அரசாங்கத்துக்குச் சொந்தமான மரங்கள், பராமரிப்புக்காக பஞ்சாயத்துக்களிடம் விடப்பட்டுள்ளன. அத்துடன் மேற்கொண்டும் மரங்கள் நட்டு அபிவிருத்தி செய்யும் வேலை, பஞ்சாயத்க்களின் பொறுப்புக்களில் ஒன்றாகும். கிராம நல–தல நிர்வாகத் துறையின் 1961–ம் ஆண்டு மே மாதம் 16–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1370–ல், மீன் குத்தகையும், மீன்களை எலம் விடுகின்ற வேலையும் பஞ்சாயத்துக்களிடம் விடப்பட்டுள்ளன. பிரதேசங்களில் கிடைக்கும் மீன் அளச் செல்வத்தை மேலும் விரிவான முறையில் பெருக்க வேண்டிய வேலையை பஞ்சாயத்துக்கள் ஏற்றுக்கொண்டு செய்யவேண்டும்.

(2) கிராம நலத் துறையின் 1960–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9–ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644–ன் எழாவது பாராவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவின்படி, கிராமப் பஞ்சாயத்துக்கள் திட்டமிடும் அதிகாரம் பெற்ற ஸ்தாபனங்களாக பணியாற்றும் வேலைகளில் கிராம அதிகாரிகள் அவைகளுக்குத் தங்களுடைய ஒத்துழைப்பை அளிக்கவேண்டியதாகிறது. அத்துடன் அவர்கள், மேலே முதல் பாராவில் சொல்லப்பட்டுள்ள கிராமப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மற்ற வேலைகளிலும் அவைகளுக்கு ஒத்துழைப்பை அளிக்கவும் வேண்டியதாகிறது. அரசாங்க ஆணை எண் 644–ன் 9–வது பாராவில், பஞ்சாயத்துக்களின் வரிவசூல் வேலைகளில் அவைகளுக்கு வேண்டிய ஒத்துழைப்பை கிராம அதிகாரிகள் அளிப்பது அவர்களுடைய அன்றாட அலுவல்களில் சேர்ந்தவையாகும் என்று சொல்லப்பட்டுள்ளது. பஞ்சாயத்து நிர்வாகத்தின் சார்பில் கிராமக் கர்ணம் செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் அவர்செய்து வரும்

போது அவர் கீழ்க்கண்டவற்றிற்கு பொறுப்பேற்க வேண்டும் :—

(1) கீழ்க்கண்டவை சம்பந்தமான எல்லா கட்டுகளை யும் பதிவேடுகளையும் பராமரித்து வருதல் :—

(அ) கிராம அளவில் திட்டமிடுதல் அபிவிருத்தி செய்தல் ;

(ஆ) பஞ்சாயத்துக்களின் பிரதேச வருவாயை கணக்குப் பார்ப்பதும் அதை வசூல் செய்வதும்.

(இ) பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலங்கள் மற்ற சொத்துக்கள் சம்பந்தமானவை.

(2) மேலே சொல்லிய விஷயங்கள் சம்பந்தமாக அறிக்கைகள் (Returns) தயாரித்து அனுப்புதல். பஞ்சாயத்துக்களுக்காக இந்த வேலைகளைச் செய்யவேண் டியது கிராமக் கர்ணத்தின் முக்கிய பொறுப்பாகும்.

(3) கிராம நலத் துறையின் 1960–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 664–ன் 10 வது பாராவில் கிராமப் பஞ்சாய்யத்துக் காரியதரிசியின் கடமைகள் என்ன என்பது கீழ்க்கண்ட வாறு விவரிக்கப்பட்டுள்ளன. :—

(1) பஞ்சாயத்துக் கூட்டங்களின் நிகழ்ச்சிக் குறிப்பு களைத் தயாரித்து வைத்தல்.

(2) பஞ்சாயத்துக்களின் ரொக்கக் கணக்குகளைத் தயாரித்து வைத்தல்.

(3) பஞ்சாயத்தின் பொது நிர்வாக சம்பந்தமான குமாஸ்தா வேலைகளைச் செய்தல்.

மேலே குறிப்பிட்டுள்ள உத்தரவின்படி பஞ்சாயத்துக் கள் விரும்பினால் கிராம பஞ்சாயத்துக் காரியதரிசியின் கடமைகளை கிராமக் கர்ணமே செய்யும்படி எதிர்பார்க் கப்படுகிறார்.

(4) இரண்டாவது பாராவில் அவசியம் நிறைவேற்ற வேண்டிய பணிகள் என்று சொல்லப்பட்டடுள்ள பணி களையெலாம் கிராமக் கர்ணம் செய்து கொண்டே கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசியின் வேலைகளையும் திருப்திகர மாகச் செய்ய பல கர்ணங்களால் முடிவதில்லை என்பது அனுபவத்தில் பல இடங்களில் தெளிவாகியுள்ளது. அதுமட்டுமல்லாமல், 1960–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9–ம் தேதியிட்ட கிராம நலத் துறை அரசாங்க ஆணை எண் 644–ல் (1961–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16–ம் தேதியிட்ட கிராம நல, தல நிர்வாகத்துறை ஆணை எண் 411–ல் இது மேலும் விளக்கப்பட்டுள்ளது) கண் டுள்ள உத்தரவின்படி, கிராமக் கர்ணம் கிராம பஞ்சாயத் துக் காரியதரிசியின் கடமைகளைச் செய்வதற்காக அவருக்கு அளிக்கப்படுகின்ற அலவன்ஸ் தொகை, மேற்கண்ட வேலை களின் அளவுக்குப் பொருந்தாத நிலையில் உள்ளது. அந்த ஆணையில் 10–வது பாராவில் சொல்லப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதற்காகவேண்டி அளிக்கப்படுகின்ற சம்பளம் அல்லது அலவன்ஸ் பணம் இவற்றின் உச்ச பட்சத் தொகையை நிர்ணயிப்பது பற்றித் தனியாக உத் தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன. ஆகவே, "கிராமப் பஞ் சாயத்துக் காரியதரிசி" என்றே அலுவலர் ஒருவர் தேவையில்லை என்று அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

(5) 1960–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9–ம் தேதியிட்ட கிராம நலத் துறையின் அரசாங்க ஆணை எண் 644–ன் பாரா 13–ல் பஞ்சாயத்து நிர்வாகம் சம்பந்தமாக கர்ணத்திற்கு அளிக்கவேண்டிய அலவன்ஸ் தொகை கீழ்க்கண்ட முறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

(1) அவர் செய்கின்ற வேலைகள் சாதாரண வேலைக ளாக இருந்து, அவர் செய்யவேண்டிய வேலைகளுடன் ஒரு கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசியின் அலுவல்களும் சேர்ந்திருந்தால், மாதத்திற்கு 15 ரூபாய் ;

(2) கீழ்க்கண்ட வகைகளில் இருந்தால், மாதத்திற்கு 12 ரூபாய்—(அ) அவர் செய்கின்ற வேலைகள் "லகுவான வை"யாக இருந்து, அவர் செய்யவேண்டிய அலுவல்க ளுடன் ஒரு கிராமப் பஞ்சாயத்துக் காரியதரிசியின் அலு வல்களும் சேர்ந்திருந்தால் ; அல்லது

(ஆ) அவர் செய்கின்ற வேலைகள் "சாதாரண மானவை" யாக இருந்து, அவற்றில் ஒரு கிராமப் பஞ்சா யத்துக் காரியதரிசியின் அலுவல்கள் சேராமலிருந்தால்,

(3) அவர் செய்கின்ற வேலைகள் "லகுவானவையாக" இருந்து அவற்றில் ஒரு கிராமப் பஞ்சாயத்துக் காரிய தரிசியின் அலுவல்கள் சேராமல் இருந்தால், மாதத் திற்கு 10 ரூபாய்.

பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாக கர்ணத்தின் அலு வல்களைப்பற்றி, மேலும் விளக்கப்பட்டுள்ள மேற் சொல்லியுள்ள முடிவுகளின்படியும், கிராம நலத் துறையின் 1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ந் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644-ன் 13-வது பாராவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவைத் திருத்தியும் அரசாங்கம் கர்ணங்களுக்கு பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்ஸ் பணமானது, கீழ்க்கண்ட விகிதத்தில் அளிக் கப்படவேண்டும் என்று உத்திரவிடுகிறது.—

(1) அவருடைய வேலைகள் "சாதாரணமானவை" யாக இருந்தால், மாதத்திற்கு 15 ரூபாய் (பதினைந்து ரூபாய் மட்டும்) ;

(2) அவருடைய வேலைகள் "லகுவானவை"யாக இருந்தால், மாதத்திற்கு 12 ரூபாய் (பனிரெண்டு ரூபாய் மட்டும்).

1961 நவம்பரில் அளிக்கப்படவேண்டிய 1961 அக் டோபர் மாதத்தற்கான பஞ்சாயத்து அபிவிருத்தி அல வன்சும், அதற்கப்புறம் எல்லா மாதங்களுக்குமான அல வன்சும் இந்த விகிதத்தில் பெறப்பட்டு, விநியோ கிக்கப்படவேண்டும்.

(6) கிராமப் பஞ்சாயத்து பகுதி நேர குமாஸ்தாவின் வேலைகளையும் கர்ணத்திடம் அளிக்கப் பிரியப்பட்டால், அந்த வேலைகளை ஏற்றிச் செய்ய கிராமக் கர்ணத்திற்கும் சம்மதம் இருந்தால், அந்த சந்தர்ப்பங்களில், கிராமக் கர்ணம் அந்த வேலைகளைச் செய்யும், பஞ்சாயத்தால் அந்த வேலைக்காக நிர்ணயிக்கப்படுகிற அலவன்ஸ் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் கிராமக்கர்ணத்திற்கு சம்பந்தப்பட்ட ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி அனுமதி அளிக்கலாம். அப்படி அளிக்கப்படுகின்ற அலவன்சானது தனியாக பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாங்க உத்தரவின்படி பஞ்சாயத்துக் குமஸ்தாக்களுக்காகவென்று வரையறுக்கப்பட்டுள்ள உயர்ந்த பட்சத்தொகை அளவுக்குமேல் போகக் கூடாது. அவை, பஞ்சாயத்து நிதிகளிலிருந்து அளிக்கப்பட வேண்டும். பஞ்சாயத்துக்கள் கிராமக் கர்ணங்கள் இவர்களிடையே ஏற்படுகின்ற ஒரு உடன்பாட்டின் விளைவாக செய்யப்படுகின்ற இப்படிப்பட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதிகளிலிருந்து பஞ்சாயத்து அபிவிருத்தி அலவன்சாக கொடுக்கப்படுகின்ற தொகை அளவை யாதொரு வகையிலும் பாதிக்காது.

(கிராம நல-தல நிர்வாகத் துறையின் 28—8—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2340)

பஞ்சாயத்து அபிவிருத்தி-கிராமப் பஞ்சாயத்துக்களின் குமாஸ்தா வேலைகளைச் செய்தல்-பகுதிநேரக் குமாஸ்தாக்களை நியமித்தல்-அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற அலவன்ஸ் தொகை அளவுகள்-திருத்தப்பட்ட உத்தரவுகள்.

[Panchayat Development-Performance of Clerical duties of Village Panchayats-Employment of part-time clerks and scale of allowances for such clerks-Revised orders issued.]

கிராம நலத் துறையின் 1960ம்ஸு ஆகஸ்ட்மீ 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 644-ல் 10-வது பாராவில், கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகளைத் தயாரித்தல், வரவு செலவுகள்' பற்றிய ரொக்கசம்பந்தமான கணக்குகளைப் பராமரித்தல் உள்ளிட்ட பொது நிர்வாக சம்பந்தமான குமாஸ்தா வேலைகளைச் செய்வதற்காக, அந்த முறையில் அதற்காக கிராமக் கர்ணத்தை நியமித்துக் கொள்ளவோ, அல்லது அந்தந்த ஊருக்குத் தகுந்த மாதிரி எது பொருத்தம் என்று படுகிறதோ அந்த மாதிரி ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவோ, கிராமப் பஞ்சாயத்துக்களுக்குச் சுதந்திரம் உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது ; ஆனல், அப்படிப்பட்ட ஏற்பாடுகளினுல் உண்டாகின்ற செலவுத் தொகையானது சாதாரணமாக பஞ்சாயத்துக்கு வருகின்ற வருவாய்க்கு, கற்றும் கட்டுப்படாத வகையில் அதிகமாக இருக்கக் கூடாது. கிராம நல, தல நிர்வாகத் துறையின் 1961-ம்ஸு பெப்ரவரிமீ 16-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 411-ல் 8-வது பாராவில், ஒரு கிராமப் பஞ்சாயத்தானது கிராமக் கர்ணத்தின் உதவியைத் தேடாமல், மேற்கண்ட வேலைகளுக்காக ஒரு குமாஸ்தாவை நியமனம் செய்து அப்படி ஒரு குமாஸ்தாவை நியமனம் செய்வதினுல் ஏற்படுகின்ற மொத்தச் செலவானது, கிராம வீட்டு வரி ஈட்டு மானியத் தொகைவையச் சேர்த்து, ஆனல் எல்லா அதிகாரபூர்வமில்லாத அரசாங்க மானியங்களைச் சேர்க்காமல் அந்தப் பஞ்சாயத்துக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கின்ற சாதாரண வருவாயில் ஆறேகால் சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்று விளக்கப் பட்டுள்ளது.

(2) ஒரு குமாஸ்தாவை நியமனம் செய்து அதனுல் உண்டாகின்ற செலவுத் தொகைக்கு மேலே சொல்லியுள்ள வகையில் கிடைக்கின்ற ஆண்டு வருமானத்தில் 6¼ சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது என்ற வரம்பு விதித்துள்ளது கொஞ்சம் கூட போதாத நிலையில் உள்ளது என்றும், இந்த விகிதத்தில் ஒரு பகுதி நேரக் குமாஸ்தாவின் பணிகளைப் பெறுவது என்பது அநேகப் பஞ்சாயத்துக்களால் இயலாமல் உள்ளது என்றும் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. 1961 மே மாதத்தில் உதக மண்டலத்தில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் இந்தப் பிரச்சனையும் விவாதிக்கப்பட்டது.

(3) (1) அரசாங்கத்திற்கு செய்யப்பட்டுள்ள கோரிக்கைகளை வைத்தும், (2) கலெக்டர்கள் மாநாட்டில் இதுபற்றி நடைபெற்ற ஆலோசனைகளை ஒட்டியும், அரசாங்கம் இந்த விஷயத்தை கவனத்துடன் பரிசீலனை செய்து பார்த்தது. வருடத்தின் சாதாரண வருமானத்தில் 6¼ சத விகிதம் என்று வரையறுக்கப்பட்டுள்ள விகிதமானது, பஞ்சாயத்துக் குமாஸ்தாவுக்கு அளிக்கின்ற சம்பளத் தொகைக்கு போதாது என்பது தெரியவருகிறது. அதே சமயத்தில், முன்பே குறிப்பிட்டுள்ளமாதிரி, ஒரு குமஸ்தாவுக்கு (பகுதி நேர குமாஸ்தாவோ, முழு நேர குமாஸ்தாவோ) கிராமப் பஞ்சாயத்து கொடுக்கின்ற அலவன்சு தொகையின் அளவு ஆண்டொன்று பஞ்சாயத்துக்கு சாதாரணமாகக் கிடைக்கின்ற வருமானத்தின் அளவுக்கு சற்றும் பொருந்தாகவகையில் அதிகமாக இருக்கக் கூடாது என்று அரசாங்கம் கருதுகிறது.

(4) முழு நேர ஊதியம் அளிக்கப்படுகின்ற நிர்வாக அதிகாரிகளை நியமனம் செய்யவேண்டியுள்ள பிரதேசங்களை நகரப் பஞ்சாயத்துக்களாகவும், முனிசிப்பாலிட்டிகளாகவும் வரையிறுக்கும்பொழுது, பிரதேசங்களில் கிடைக்கின்ற வருடாந்திர வருமானம் மட்டுமல்லாமல், அந்தப் பிரதேசத்தின் மக்கள் தொகையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்பதை அரசாங்கம் உணர்த்துகிறது. ஒரு ஆண்டுக்கு, தலைக்கு ஒரு ரூபாய்க்கு குறையாமல், ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்தும் வருவாய் திரட்டவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த விஷயங்களையெல்லாம் அடிப்படையாக வைத்துப் பார்த்து, கிராமப் பஞ்சாயத்து அதனுடைய குமாஸ்தாவுக்கு கீழ்க்கண்ட விகித முறையில் சம்பளமோ, அலவன்சோ அளித்தால், அது நியாயமானதாகவும், பஞ்சாயத்தின் சக்திக்குட்பட்ட தாகவும் இருக்கும் என்றும் அரசாங்கம் கருதுகிறது.—

பஞ்சாயத்தின் பிரிவு	பஞ்சாயத்துக் குமஸ்தா அளிக்கப்பட்க்கூடிய உயர்ந்த பட்ச சம்பள அல்லது அலவன்ஸ் விகிதம் ஆண்டொன்றுக்கு ரூபாய்.
1 நகரப் பஞ்சாயத்துக்கள் என்று சேர்க்கப்படாமல், 5,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்கள்.	ரூ. 50·00
2 4,000 லிருந்து 5,000 வரை மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்கள்.	,, 40·00
3 3,000 லிருந்து 4,000 வரை மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்கள்.	,, 30·00
4 2,000 லிருந்து 3,000 வரை மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்கள்.	,, 25·00
5 1,500 லிருந்து 2,000 வரை மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்கள்.	,, 20·00
6 1,500 க்கு குறைவான மக்கள் தொகை உள்ள பஞ்சாயத்துக்கள்.	,, 15·00

(5) இதன்படி, இந்த விஷயத்தில் இதற்குமுன் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுகளை யெல்லாம் தள்ளுபடி செய்து, கிராமப் பஞ்சாயத்துக்கள் (1961-ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கை அடிப்படையாகக் கொண்டு) மேலே நான்காவது பாராவில் (சொல்லியுள்ளபடி ஆறு வகைகளாகப் பிரிக்கப்படவேண்டும் என்றும், மேலே குறிப்பிட்டுள்ள விகிதத்தில் பஞ்சாயத்துக் குமஸ்தாவுக்கு அளிக்கப்படும் உயர்ந்தபட்ச சம்பளமோ, அலவன்சோ ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிடுகிறது.

(6) கிராமங்களில் பஞ்சாயத்துக் குமஸ்தாக்களின் பணிகள் பகுதிநேரப் பணிகளாகத்தான் சாதாரணமாக உள்ளன என்று கருதப்பட வேண்டுமாகையால், மேலே நான்காவது பாராவில் வரையறுக்கப்பட்டுள்ள சம்பள விகிதம் அந்தப் பணிகளுக்கு போதுமானவையாக இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. சில விசேஷ சந்தர்ப்பங்களில் ஒரு பகுதி நேர குமஸ்தாவின் சேவை கொஞ்சம் உயர்வாக ஊதியம் கொடுத்தாலன்றி கிடைக்கமாட்டா என்றும் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அந்த ஊதியத்தை பஞ்சாயத்து தாராளமாக கொடுக்க இயலும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அப்படி ஒரு சாதாரணமான சந்தர்ப்பம் உண்மையிலேயே ஏற்பட்டுள்ளது என்று கலெக்டர் கருதினால், அவர் (சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தின் வேண்டுகோளின் பேரில்) அதிகப்படியான ஊதியம் அளிக்க பஞ்சாயத்துக்கு விசேஷ அனுமதி அளிக்கலாம். அந்த ஊதியமானது மாதத்திற்கு 50 ரூபாய்க்கு மேல் போகக் கூடாது. அத்துடன், மேலே நான்காவது பாராவில் வரையறுக்கப்பட்டுள்ள தொகையின் அளவுக்கு, மாதம் ஒன்றுக்கு, 10 ரூபாய்க்கு மேலும் போகக் கூடாது.

(கிராம நல, தல நிர்வாகத்துறையின் 28—8—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2339)

பஞ்சாயத்து அபிவிருத்தி–பஞ்சாயத்து நிதி இயக்குநர் பதவி ஏற்பாடு

(Indian Administrative Services–Panchayat Development–Director of Panchayat Finances–Post Created.)

கிராம நலத் துறையின் 1960-ம் வருஷம் ஆகஸ்ட்மீ 16-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 664-ல் விளக்கப்பட்டுள்ள பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டமும், கிராம நல, தலநிர்வாகத்துறையின் 1961-ம் வருஷம் ஜனவரி மாதம் 25-ம் தேதி யிட்ட அரசாங்க ஆணை 211-ல் மேலும் கூறப்பட்டுள்ள விளக்கமும் மாற்றமுமே ஒவ்வொரு வட்டாரத்தின் திட்டமிட்ட அபிவிருத்திக்கும் அடிப்படையாகும். இந்த மாநிலம் 375 வட்டாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரமும், மேற்குறித்த ஆணைகளில் கூறப்பட்டுள்ள முறைகளின்படி, மூன்றுவது ஐந்தாண்டு திட்டக் காலத்துக்கென்று ஒரு நிதித் திட்டத்தை வகுத்துக் கொள்ளவேண்டும்.

2. 1958-ம் வருடத்திய தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதும், பஞ்சா

யத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் தேசிய திட்டத்தில் தங்கள் பங்கினை நிறைவேற்றுவதும், பஞ்சாயத்து அபிவிருத்தி திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் அவை நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் அவைகளுக்குள்ள திறமையைப் பொறுத்தேயிருக்கும். கிராம நலத் துறையின் 9—8—1960 தேதியிட்ட அரசாங்க ஆணை 644-ல் குறிப்பிடப்பட்டு, 16—2—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை 411-ல் பஞ்சாயத்து அபிவிருத்தியில் கிராம அதிகாரிகளின் கடமைகள் விரிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் ஆகியவற்றுக்குச் சேர வேண்டிய வரிகள், பிற பாக்கிகளை வசூலிக்கும் வேலையாகும். பல்வேறு வரி கேட்புப் பதிவேடுகளை (Tax Demand Registers) வைத்திருத்தல், காலாகாலத்தில் வரிகளையும், பிறபாக்கிகளையும் வசூலித்தல், அவற்றை பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்களின் வரவுக் கணக்கில் ஒழுங்காக சரிக்கட்டுதல் ஆகியவற்றை ஏற்பாடு செய்துகொள்ள, பொருத்தமான வழி முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

3. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும், பிரதேச செஸ் தொகையை முன் பணமாகப் பெறுகின்றன. அவ்வாறே பிரதேச செஸ் சர்சார்ஜ், ஈட்டு மானியங்கள் ஆகிய தொகைகளையும் முன் பணமாகச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. தலக் கல்வி மானியமும், பள்ளி உணவு மானியமும் அவ்வாறே மாதா மாதம் முன் பணமாக வ்ரவு வைத்துகொள்ளப்படுகின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் பெற வேண்டிய பல்வேறு அபிவிருத்தி மானியங்களும், பஞ்சாயத்து யூனியன்களின் உண்மையான செலவுத் தொகைகளின் அடிப்படையில் திட்ட நிறைவேற்றத்துக்குப் பின்னர் அளிக்கப்படும் மானியங்களாக (Post Execution grants) அவற்றுக்கு வரவு வைக்கப்பட இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களுக்கு இவைகளைப்பற்றிய வழிவகைகளில் தொல்லைகள் இல்லாமல் இருப்பதற்கென்று, இந்த வரவுகளைச் சரிகட்டும் வேலையை ஒழுங்குபடுத்த வேண்டியதும், செலுத்த வேண்டிய பகுதிப் பணத்தை (Instalments Due) வசூக்கின்ற பொழுதும் அவற்றை சரிகட்டும் நிலையிலும் சரியான ஒழுங்கு முறைக்குக் கொண்டு வர வேண்டியதும் மாகின்றன.

4. பஞ்சாயத்து யூனியன்களுக்கு அங்கீகரிக்கப்பட வேண்டிய இந்த அபிவிருத்தி மானியங்கள் அபிவிருத்தி மாவட்ட நிலையிலும், மாநில நிலையிலும் தொகுக்கப்பட வேண்டும். அந்தத் தொகுப்பு, அவ்வப்போதைய அபிவிருத்தி செலவுகளைப் பற்றிய அறிக்கைகளை (Periodical Reviews) தயாரிக்கவும், பல்வேறு நிலைகளில், தேவையான வரவு செலவுத் திட்டக் கண்காணிப்பை உண்டாக்கவும், பல்வேறு அபிவிருத்தித் தலைப்புக்களின் கீழ் மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசாங்கத்துக்குச் சேர வேண்டிய உதவித் தொகைகளைச் சரியாகக் கணக்கிடவும் தேவையானதாகிறது.

5. மேற்குறித்த வேலைக்கென்று, மாநில நிலையில், ஒரு முழு நேர அதிகாரி தேவைப்படுகிறார். ஆகவே, கிராம நல, தல நிர்வாகத் துறையில், இந்திய நிர்வாகப் பணிகளின், மேல் விகிதத்தில் (Senior Scale) 1—8—1961-லிருந்து ஓராண்டு காலத்துக்கு, "பஞ்சாயத்து நிதி இயக்குநர்" பதவி ஏற்படுத்தப்படுகிறது. அந்த அதிகாரி கிராம நல தல நிர்வாகத் துறையில் பதவியால் வந்த (Ex-Officio) உதவி காரியதரிசியாக (Deputy Secretary), இருப்பதுடன், கிராம நல தல நிர்வாகத் துறைக் கணக்குப் பிரிவும் அவருடைய பொறுப்பில் இருக்கும். அவர் மாநில பயண அதிகாரியாகவும் (State Touring Officer) விளங்குவார். இந்தப் பதவிக்குச் சிறப்புச் சம்பளமாக மாதம் 200 ரூபாய் உண்டு.

6. மேற்குறித்த அதிகாரி, கீழ்க்கண்ட கடமைகளை நிறைவேற்றுவதன்மூலம், பஞ்சாயத்து யூனியன்களின் மேற்பார்வையாளர் (Inspector of Panchayat Unions) என்ற வகையில், கிராம அபிவிருத்திக் கமிஷனருக்கு உள்ள கடமைகளுக்கு துணையாகப் பணியாற்றுவார் :—

(i) பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டமிடப்பட்ட வரவு செலவு திட்டங்களை ஆராய்தல் ; பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேவையான விளக்கங்களை அளித்து வழி காட்டுதல்.

(ii) பஞ்சாயத்து யூனியன்களின் வருடாந்தர வரவு செவுலத் திட்டங்களையும், அந்த வரவு செலவுத் திட்டங்களின்படி செய்யப்பட்டுள்ள செலவுகளையும் ஆராய்ந்து பஞ்சாயத்து யூனியன்களுக்குத் தேவையான விளக்கம் அளித்தல்.

(iii) கிராம அதிகாரிகள் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் வரிகள், இதர பாக்கிகள் ஆகிய வசூல் வேலைக்கான செயல் முறையை வகுத்தல், அவ்வாறு வசூலிக்கப்படும் தொகை பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து ஆகியவற்றின் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்பட்டு சரிகட்டும் வேலை, இவை சம்பந்தப்பட்ட கேட்பு (Demand) வசூல் (Collection) ஆகியவற்றை மேற்பார்வை இடுதல் முதலியன.

(iv) பிரதேச செஸ், பிரதேச செஸ் சர்சார்ஜ், பிரதேச செஸ் சர்சார்ஜ் ஈட்டு மானியம், பிரதேசக் கல்வி மானியம், மதிய உணவு மானியம், பிரதேசக் கட்டு வேலைகள் மானியத்தின் வேலைக்குப் பின்னர் அளிக்கப்படும் மானியம் (Post Execution Payment), விவசாய அபிவிருத்தி மானியங்கள் முதலான மானியங்களின் பேரில் அளிக்கப்படும் முன் பணத்தைச் சரிக்கட்டும் முறை

களை வகுத்தல், இந்தக் கணக்குச் சரிக்கட்டுதல் வேலையைப் பரிசோதிக்கவும், உண்மையாகச் செய்யப்பட்ட செலவு களின் அடிப்படையில் அமைந்த முடிவான வரவு, செலவு சரிக்கட்டுதலைப் பரிசோதனை செய்யவும் ஒரு முறையை வகுத்தல் முதலியன.

(v) மேலே (ii), (iii), (iv) பகுதிகளில் கூறப்பட்ட வகையில், நிதிகளைத் திறமையாகக் கையாள அமைப்பு, வேலை முறை ஆகியவற்றில் தேவையான மாற்றங்களை தாலுகா, கோட்டம், மாவட்ட தலைமை நிலையங்களில் எங்கெங்கு தேவையோ அங்கு மாற்றங்கள் செய்யச் சிபார்சு செய்தல்.

(vi) மாநிலநிலைத்தலைமை நிலையங்களில், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து நிதி நிர்வாகம் ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டக் கண்காணிப்பில் பொருத்தமான மாறுதல்களைச் செய்யச் சிபார்சு செய்தல். மாநிலத்தி லுள்ள பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து கணக்குகளைத் தொகுத்தல், பஞ்சாயத்து யூனியன் மூலமாக நிறைவேற் றப்படும் திட்ட வேலைகளுக்கான மாநிலத்தின் பங்கு மத்திய நிதி உதவிபெறுவதற்கேற்ற வகையில் தேவை யான கணக்கு விவரங்களை நிதித் துறைக்கு அளித்தல் முதலியன.

[திரு. கே. சுப்பிரமணியம் ஐ. ஏ. எஸ்., துணைச் செயலாளர், கிராமநல-தல நிர்வாகத்துறை, இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்.]

[பொதுத்துறையின், Public (Special) 14—7—61 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1206.]

தமிழ்நாடு பஞ்சாயத்து மகாநாடு—நடத்தல்
(Conference—Madras State Panchayat Conference-Holding of-Ordered)

1961-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி, *தமிழ் நாட்டின் தல நிர்வாக அபிவிருத்தி விஷயத்தில்,* ***மிக முக்கியமான ஒரு கட்டத்தைக் குறிக்கும். அந்தத்*** *தேதியில் (முனிசிபாலிட்டிகள், கண்டோன்மென்ட்கள், டவுன்ஷிப்புகளாக உள்ள, அல்லது அப்படி அமைக்கப்பட இருக்கும் பிரதேசங்கள் தவிர), இந்த மாநிலத்தில் உள்ள மற்ற எல்லாப் பிரதேசங்களும், 12,540 பஞ்சாயத்துக் களின் ஆட்சியின்கீழ் வந்துவிடும். அத்துடன், இந்தப் பஞ்சாயத்துக்கள் அத்தனையும், அந்தத் தேதியில், 373 பஞ்சாயத்து யூனியன்களில் இணைந்து விளங்கும்படியாக வகை செய்யப்பட்டு, ஓர் ஒருங்கிணைந்த அமைப்பு முறை யாக மாற்றியமைக்கப்பட்டுவிடும். இதனால், மாநிலத்தின் கிராமப் பகுதிகளில், தலநிர்வாக ஆட்சி முறையில் முற்றிலும் புதியதொரு அமைப்பு முறை அமுலுக்கு கொண்டு வரப்படுகிறது. அந்தத் தேதியில், மாநிலத்தில் உள்ள பதினேறு ஜில்லா போர்டுகள் (மாவட்டக் கழகங்கள்* (District Boards) *கலைக்கப்பட்டு, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தில் குறிப் பிட்டுக் காட்டப்பட்டுள்ள தல நிர்வாகச் சீரமைப்பு ஆட்சி முறை அமுலுக்கு வந்துவிடும்.*

2. இந்தச் சீரமைப்பு வேலைகள், தல நிர்வாக ஆட்சித் துறையில், நிர்வாக அமைப்பு முறையில், பெரியதொரு மாற்றத்தை மட்டும் சுட்டிக் காட்டுவதோடல்லாமல், அதிகப்படியாக ஏற்பட்டுள்ள வேலைகளையும், மேலும் பெருகியுள்ள நிதி ஆதாரங்களையும் குறிப்பிட்டுக் காட்டு கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலும் ஒரு பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரம் இருக்கும். (யூனியனில் இணைந்துள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்புடன்), ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் வட்டாரத்தின் அபிவிருத்திக் கான ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தும் ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டும். இந்த வேலையை அவை செய்வதற்காக வேண்டி, சமுதாய அபிவிருத்தியின் தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்திலும், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகள் சம்பந்தப்பட்ட மற்ற மற்ற அபிவிருத்தித் திட்டங்களிலும் உள்ள ஆள் வசதிகள், நிதி வசதிகள், ஒன்ருகக்கொண்டுவரப்பட்டு, அவை 204 *பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் முன்பே ஒப்படைக்கப்பட்டுவிட்டன. மற்ற பஞ்சாயத்து யூனியன்கள் அமைக்கப்பட்ட உடனே, அவைகளிடமும் இவை ஒப்படைக்கப்பட்டுவிடும்.*

3. இந்த ஒப்படைப்புக்கு ஒரு நிபந்தனையாக, மாநிலத்தின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்துடன் பொருந்தும்படியான முறையில், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் (அத்துடன் இணைந்துள்ள எல்லாப் பஞ்சா யத்துக்களின் ஒத்துழைப்புடன்), மூன்ருவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்திற்கு, தன்னுடைய பொறுப்பில் உள்ள வட்டாரத்திற்கென, பஞ்சாயத்து அபிவிருத்திக்

பிழை திருத்தம்

அக்டோபர், 1961 ‘ கிராம நல ’ இதழ் “ பகுதி II பஞ்சாயத்து அரசிதழ் ” பகுதியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க ஆணை எண் 2460-ன் தமிழ் மொழிபெயர்ப்பில் கீழ்க்கண்ட பிழை திருத்தங்களைச் செய்துகொள்ளவும் :—

அரசாங்க ஆணையின் இணைப்பு III, பாராக்கள் 3.எ, 5–1, 6–1, 6–3-களில் [பக்கங்கள் 43–44] “ வரவு ” என்று வருமிடங்களில் “ பற்று ” என்றும், “ பற்று ” என்று வருமிடங்களில் “ வரவு ” என்றும் திருத்தி வாசிக்கவும்—(Credit - வரவு; Debit - பற்று).

கான திட்டமிடப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஒன்றை உருவாக்கவேண்டும் என்று மாநில அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது. அத்துடன், தேவைப்படுகின்ற நிதி ஆதாரங்களில் வரையறுக்கப்பட்ட ஒரு பங்கினை, வட்டாரத்திற்குள்ளாகவே, திரட்டித்தருகின்ற முழுப் பொறுப்பினையும், பஞ்சாயந்து யூனியன்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

4. இப்படி அமைக்கப்படுகின்ற வட்டாரத் திட்டத்தின் கட்டுக்கோப்புக்குட்பட்டு, கிராம அபிவிருத்தி சம்பந்தப் பட்ட எல்லா வகையான தன்மைகளையும் சேர்த்துக் காட்டுகின்ற முறையில் ஒரு வேலை முறையை (தன்னுடன் இணைந்துள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப் புடன்) உருவாக்குவது பஞ்சாயந்து யூனியனின் கடமை யாகும். புதிய பஞ்சாயத்து சட்டத்தின் பீடிகையில், பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் முயற்சியினுல் அடைய வேண்டியவை என்று இரண்டு முக்கிய தேசியப் பணிகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. உள்ளாட்சி அதிகாரம் பெற்ற இந்தப் புதிய ஸ்தாபனங்களால் விசேஷக் கவனம் செலுத்தி செய்யப்பட வேண்டிய அந்த இரண்டு பணிகளும் கீழ்க்கண்ட முறையில் விளக்கப்பட்டுள்ளன:—

"மக்கள் எண்ணிக்கைப் பெருகுவதற்கேற்ப, வருடா வருடம் உணவு உற்பத்தி தொடர்ந்து பெருக்கப்பட வேண்டும்; மக்கள் எண்ணிக்கை கட்டு மீறிப் போய் விடாமல், ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும்."

5. சட்டப் பேரவையினுல், புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த உத்தரவு நிறைவேற்றப்பட்டு வருகின்றது என்பதைக் குறிப்பிடும் வகையில், மாநில அளவில் ஒரு பஞ்சாயத்து மகாநாட்டைக் கூட்டுவது அவசியம் என அரசாங்கம் கருதுகிறது. இந்தியப் பிரதமர் நேருஜி அவர்கள் தமிழ் நாட்டிற்கு அடுத்த அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தில் உள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும், மற்றபடி உள்ள எல்லாப் பஞ்சாயத்து யூனியன் கவுன் சிலர்களும், இந்தியப் பிரதமரை நேரில் காணவும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகள் என்று தங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள பணிகளைச் செம்மையாக நிறைவேற்றி வைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ள அவர்கள், இந்தத் துறையில் பிரதமருடைய ஆலோசனையைப் பெறவும், ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டுகின்ற அவருடைய சொற்களை நேரடியாகக் கேட்கவும், ஒரு வாய்ப்பு அவர்களுக்கு அளிப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றும் அரசாங்கம் கருதுகிறது.

ஆகவே, **1961**-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8, 9 தேதிகளில் மாநில அளவில் ஒரு பஞ்சாயத்து மகா நாட்டை சென்னையில் நடத்துவதற்கான எல்லா ஏற்பாடு களும் செய்யப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தர விடுகிறது. அந்த மகாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் என்ன என்று பார்க்கும்பொழுது, கீழ்க்கண்ட மூன்று அம்சங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அரசாங்கம் உத்தர விடுகிறது:—

I. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட வேலைகளில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் பங்குகொண்டு செயலாற்றல்.

II. உணவு உற்பத்தி அபிவிருத்தியில் பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வேலைத் திட்டம்.

III. குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை கிராம மக்களிடையே பரப்புவதில், பஞ்சாயத்துக்கள் கடை பிடிக்க வேண்டிய வேலைத் திட்டம்.

[கிராம அபிவிருத்தி—தல நிர்வாகத் துறையின் 7—9—1961 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 2443.]

'கிராம நலம்' பத்திரிகை வெளியிடுபவர் :
ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்., (பிரதம செயலாளர்),
செயலாளர், கிராம நல—தல நிர்வாகத் துறை, தமிழ்நாடு அரசாங்கம்.

ஆசிரியர் :
ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி, கிராம நல-தல நிர்வாகத் துறை.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.





மாநில பஞ்சாயத்து மாநாட்டுக் காட்சிகள்........

1. பிரதமர் நேரு அவர்கள் துவக்க உரை நிகழ்த்துகிருர்.

2. மாநாட்டுக் கொட்டகையில் குழுமியிருந்த பஞ்சாயத்துப் பிரதிநிதிகளிடையே பாரதப் பிரதமர்.

3. மாநாட்டில் பெண்கள் பகுதி.

4. முதலமைச்சர் திரு. காமராஜ் மாநாட்டில் உரை நிகழ்த்துகிருர்.



5. மத்திய சமுதாய நல அமைச்சர் திரு. எஸ். கே. டே மாநாட்டில் பேசுகிருர். கிராம அபிவிருத்திக் கமிஷனர் திரு. கோ. வேங்கடாசலபதி, அவருடைய பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்துக் கூறுகிருர்.

6. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் கலந்து கொண்ட விஷயாலோசனைக் குழுக் கூட்டம்.





Regd. No. M. 7277

©

தமிழ்நாடு அரசாங்கம்
1961.

1. ஐலண்டு மைதானத்தில் அமைந்திருந்த பிரதிநிதிகள் முகாம்களின் ஓர் எழில் தோற்றம்.

2. மாநில பொது மராமத்துத் துறை அமைச்சர் திரு. கக்கன் மாநாட்டில் சொற்பொழிவாற்றுகிறார்.

3. ஐலண்டு மைதானத்தில் அமைக்கப் பட்டிருந்த பிரதிநிதிகள் முகாம் அலுவலகம்.

4. இடைவேளையில் பிரதிநிதிகள், முகாம்களில் இளைப்பாறுகின்றனர். அவர்கள் தங்க, சௌகரியமான வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

5. பிரதம செயலாளரின் தலைமையில், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் அடங்கிய விஷயாலோசனைக் குழுக் கூட்டம்.